REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜுன் 28 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN 92 தினகரன்
வரு. 92 இல. 153 | Friday 28, June, 2024 | 32பக்கங்கள் | 50/-

எஹலியகொட, கெட்டஹெத்த பகுதியில் பாரிய மண்சரிவு
43 குடும்பங்கள் வெளியேற்றம்

எஹலியகொட, உடுவான, கெட்டஹெத்த பகுதியில் நேற்று (27) பிற்பகல் ஏற்பட்ட பாரிய மண்சரிவினால் குறைந்தது எட்டு வீடுகள் புதையுண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக எஹலியகொட பிரதேச செயலாளர் எஸ்.ஏ. தில்ருக் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்ட 06

கற்பித்தலுக்காக ஆசிரியர்கள் பாடசாலைகளில் சமுகமளித்திருக்க வேண்டியது கட்டாயம், இல்லையேல்

ஆசிரியர் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும்

பிள்ளைகள் தமது கல்வியை இழக்க ஒருபோதும் இடமளியோம்!

தமது மதிப்பைப் பாதுகாப்பது ஆசிரியர்களின் பொறுப்பு

அரச ஊழியரின் சம்பள அதிகரிப்பு முறைமை 2025 முதல் ஆரம்பம் - மகா நாயக்க தேரர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி எடுத்துரைப்பு

பிள்ளைகளின் கல்விக்காக ஆசிரியர்கள் காலை வேளையில் பாடசாலைகளில் இருக்க வேண்டியது கட்டாயமானது என்றும், எதிர்வரும் நாட்களில் இவ்வாறு நடக்காதுபோனால், ஆசிரியர் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் ஸ்ரீ வரகாகொட ஞானரத்ன தேரரை நேற்று (27) சந்தித்து கலந்துரையாடிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இங்கு கருத்துரைத்த ஜனாதிபதி: ஆசிரியர்களும், அதிபர்களும் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு முன்மாதிரியாக செயற்பட வேண்டும். போராட்டங்களிலும், வேலை நிறுத்தங்களிலும் ஆசிரியர்கள் ஈடுபட்டால், எதிர்காலத்தில் பிள்ளைகளுக்கு எவ்வாறு அவர்களால் அறிவுரைகளை மற்றும் வழிகாட்டல்களை வழங்க முடியும்.

ஒட்டுமொத்தமாக ஆசிரியர் சேவையிலிருக்கும் சகலரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுக்கவில்லை. அரசியல் சார்ந்தவர்களே இதில் பங்கெடுத்திருப்பதாக தனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. இதனால் ஒட்டுமொத்த ஆசிரியர் தொழிலுக்கும் களங்கம் ஏற்படலாம்.

சிங்கள பாடசாலைகளுக்குள் மாத்திரமே இந்த 06

மாணவர்களின் கல்வி நலனை சிந்தித்து

அனைத்து அதிபர், ஆசிரியரும் இன்று கடமைக்கு வாருங்கள்!

பதில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அழைப்பு

பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புமாறு பெற்றோரிடமும் அமைச்சர் கோரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் மாணவர் சமூகத்தின் கல்வி தொடர்பில் சிந்தித்து இன்று முதல் தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட்டு கடமைக்கு சமுகமளிக்குமாறு அனைத்து ஆசிரியர்கள் அதிபர்களுக்கும் பதில் கல்வி அமைச்சர் என்ற வகையில் தாம் அழைப்பு விடுப்பதாக போக்குவரத்து, ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் தமது பிள்ளைகளை முறையாக பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறும் அனைத்து பெற்றோர்களையும் கேட்டுக் கொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இங்கு தொடர்ந்தும் விளக்கமளித்துள்ள அமைச்சர்;

ஆசிரியர்களாகிய உங்களிடம் வாழ்க்கையை கேட்டு நிற்கும் பிள்ளைகள் பெருமளவு நிதியை செலவழித்து சர்வதேச பாடசாலைகள் அல்லது தனியார் பாடசாலைகளுக்கு செல்ல முடியாத சாதாரண மக்களின் பிள்ளைகளாவர். எமது நாட்டில் சுமார் 400 சர்வதேச பாடசாலைகள் இயங்குகின்றன.

அந்த பாடசாலைகளில் எந்த வித வேலை நிறுத்தப் போராட்டமும் இன்றி தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் நாட்டில் 90 தனியார் பாடசாலைகள் செயற்பட்டு வருகின்றன. அவற்றில் 57 பாடசாலைகளுக்கு அரசாங்கமே சம்பளம் மற்றும் ஏனைய வசதிகளையும் செய்து கொடுக்கின்றது.

அந்த பாடசாலைகளில் 1,50,000 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களுக்கான கல்வி 06

கண்டி மத ஸ்தலங்களில் ஜனாதிபதிக்கு ஆசி

கண்டிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று நல்லாசிகளை பெற்றுக்கொண்டார். தலதா மாளிகை, கட்டுக்கலை பிள்ளையார் கோவில் மற்றும் மீரா மக்காம் பள்ளிவாசலில் வழிபாடுகளில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

அரச ஊழியர் சம்பளப் பிரச்சினை 2025 ஜனவரி மாதத்துக்குள் தீர்வு

அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை 2025 ஜனவரிக்குள் தீர்க்க குழுவை அமைத்து மூன்று மாதங்களுக்குள் அறிக்கை அளிக்குமாறு கூறியுள்ளோம். இந்நிலையில், நாட்டை அராஜகமாக்கி மீண்டும் சீரழிக்க சிலர் முயல்வதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் (26) பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க 06

உலக காலநிலை மாற்றம் குறித்து சர்வதேச மாநாடுகளில் கவனம்

காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளை எதிர்கொள்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கும் கலந்துரையாடல் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் 06

இருதரப்பு கடன் மறுசீரமைப்பு வெற்றியடைந்தமைக்கு பாராட்டு

உத்தியோகபூர்வ கடன் குழு (OCC) மற்றும் சீனா எக்ஸிம் வங்கியுடன் இருதரப்பு கடன் மறுசீரமைப்பை இலங்கை நேற்று முன்தினம் (26) வெற்றிகரமாக மேற்கொண்டமை குறித்து, பிரதான எதிர்க்கட்சியான மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா திருப்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தனது 'X' தளத்தில் இதனைக் குறிப்பிட்டுள்ளதுடன் கடன் வழங்கும் நாடுகளுடன் தங்கள் பணிகளில் ஒத்துழைப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் நிலையான வாதத்தையும் குறிப்பிட்டுள்ளார். 06

இரும்பு, உலோக கழிவுகள் ஏற்றுமதிக்கு தடை வருகிறது

அமைச்சின் பரிந்துரையுடனேயே அனுமதி



நாட்டுக்குள் சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் உலோகம், இரும்பு, அது தொடர்பான உபகரணங்கள் மற்றும் இவைகள் சார்ந்த கழிவுப்பொருட்கள் ஏற்றுமதி செய்வதை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சகல உலோக ஏற்றுமதிகளும் தொழில்துறை அமைச்சின் பரிந்துரைகளுக்கமையவே மேற்கொள்ளப்பட வேண்டுமென நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

உலோகக் கழிவுகள், இரும்பு தொடர்பான 06

சகல பாடசாலைகளும் இன்று வழமை போல் இயங்கும்

கல்வி அமைச்சு அறிவிப்பு



அனைத்து அரசாங்க பாடசாலைகளும் இன்று 28 ஆம் திகதி வழமை போன்று நடைபெறுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கல்வி அமைச்சு நேற்று விடுத்துள்ள விசேட அறிவித்தலிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கதிர்காமம் யாத்திரை காட்டுப்பாதை திறப்பு

கதிர்காம பாதை யாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை எதிர்வரும் 30ஆம் திகதி காலை 6.00 மணிக்கு திறக்கப்படுமென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனுக்கும் இடையிலான சந்தித்திப்பு நேற்று முன்தினம் (26) கொழும்பில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில், கதிர்காம பாதையாத்திரையில் ஈடுபடும் பக்தர்களுக்காக உகன தேசிய பூங்கா வாயிற்கதவுகளை திறக்கும் திகதிகள் தொடர்பில் இருவரும் 06

லலித் வீரதுங்க, அஜித் கப்ராலுக்கு எதிரான மனு நிராகரிப்பு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோருக்கு எதிராக நுகேகொட நாளந்த ராமாதிபதி தினியாவல பாலித தேரர் தாக்கல் செய்த திருத்த கோரிக்கை மனுவை 06

தேங்காய் எண்ணெய் விலையை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை

சந்தையில் தேங்காய் எண்ணெயின் விலையை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தற்போது இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் ஒரு லீற்றருக்கு அரசாங்கம் 150 ரூபாவை அறவிடுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் என்ற ரீதியில், இந்த தொகையை குறைப்பதற்கான ஆலோசனையை அமைச்சரவைக்கு 06

நாட்டை கட்டியெழுப்பும் தகுதியும் திறனும் கொண்டவரே ஜனாதிபதி

ஐ.தே.அமைப்பாளர் சாஸ்திரிய ராஜபுத்திர வீரசிங்க

மாவத்தகம தினகரன் நிருபர்

உலகிலுள்ள நாடுகள் பார்த்து வியந்து பாராட்டுகின்ற ஒருவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் சாஸ்திரிய ராஜபுத்திர வீரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொடங்கஸ்லந்த தேர்தல் தொகுதியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பொருளாதார ரீதியில் உடைந்து வீழ்ந்திருந்த நாட்டை குறுகிய காலத்தில் சுபீட்சமான ஒரு நாடாக கட்டியெழுப்பிய தலைவர் ஜனாதிபதி அவர்களே. அவரைப் போன்று இந்நாட்டை கட்டியெழுப்பக்கூடிய தகுதியும் திறனும் வாய்ந்த தலைவர் வேறு எந்தக் கட்சியிலும் இல்லை. இதை சாதாரண மக்களும் அறிந்து கொள்வார்கள். நம் நாட்டிலும் சரி உலகிலும் சரி வங்கியில், ஏனைய நிதி நிறுவனங்களில் கடன்களைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் எல்லா வங்கிகளும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளது. எங்களுடைய வங்கிகள் பற்றி நம்பிக்கை இருக்கவில்லை. அந்த நம்பிக்கை எல்லாம் முற்றாக இல்லாமல் செய்யப்பட்டு உலக நாடுகள் அறிந்து கொள்ளுமளவுக்கு வங்குரோத்து நிலையில் எமது நாடு காணப்பட்டது. உலக நாடுகளிலும் சர்வதேச வர்த்தகத்தொடர்புகளை மேற்கொள்ள வங்கிகளில் கடன்பத்திரமொன்றை திறக்க முடியாது. யப்பானிலிருந்து வாகனம் ஒன்றைக் கொண்டு வரமுடியாது. எங்களுடைய வங்கிகள் குறித்து நம்பிக்கை இருக்கவில்லை. நம்பிக்கை முற்றாக இல்லாமல் போய் வங்குரோத்து நிலைக்கு நாடு தள்ளப்பட்டிருந்தது. சிறிய காலத்தில் கடன் திட்டங்களை மறுசீரமைத்து அந்த நாடுகளுடன் சிநேகபூர்வமான உறவுகளை ஏற்படுத்தி மீளவும் உலக நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்குரிய வாய்ப்பை ஜனாதிபதி ஏற்படுத்தியுள்ளார். இன்னும் ஒருவர் வந்தாலும் 10 வருடங்கள் சென்றாலும் இதைச் செய்திருக்க முடியாது. அதற்காகத்தான் நாங்கள் உரக்கப் பேசிக் கொண்டிருக்கின்றோம். ஏனைய நாடுகள் இலங்கை எந்தளவு மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்தது. சிறிய காலத்தில் மீளவும் கட்டியெழுப்பட்ட நாடாக இன்று உள்ளது. ஜனாதிபதி எந்தளவுக்கு முன்னேற்றியுள்ளார் என்று வெளியுலக நாட்டு மக்கள் வியந்து பாராட்டுகின்றனர்.

எங்கள் கட்சியின் தலைவர் ஜனாதிபதி இந்த நாட்டைக் கட்டியெழுப்பியது போன்று ஏனைய கட்சிக்காரர்களால் செய்ய முடியாது

நாம் அனைவரும் எமது ஜனாதிபதி செய்த வேலையை அவர் முன்னெடுத்த பாதையில் ஒன்றிணைந்து செல்வோமாயின் சுபீட்சமான நாடொன்றை நாங்கள் கட்டியெழுப்ப முடியுமென நம்பிக்கை தெரிவிக்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

நகர்வலம்

எழுத்தாளர் பவா செல்லத்துரை இன்று மக்களுடன் சந்திப்பு

லண்டன் மானுடம் நிறுவனம் ஏற்பாடு செய்த எழுத்தாளர் பவா செல்லத்துரையுடனான மக்கள் சந்திப்பு கலை இலக்கிய செயற்பாட்டாளர் எம்.பௌஸ்சரின் வழிநடத்துதலில் இன்று (28) கொக்கட்டிச்சோலையிலும், நாளை திருகோணமலையிலும், எதிர்வரும் 30ஆம் திகதி ஹற்றனிலும் நடைபெறவுள்ளது.

புத்தகங்கள், வாசிப்பு, பரவலாக்கம் செயற்திட்ட முன்னெடுப்பை மக்கள் மயமாக்கும் நடைமுறைச் செயற்பாட்டிற்கு உதவும் பயணத்தில் தமிழக முன்னணி எழுத்தாளரும் நடிகரும், ஆய்வாளரும், சமூக செயற்பாட்டாளருமான பவா செல்லத்துரை கலந்துகொண்டு மக்கள் முன் உரை நிகழ்த்தவுள்ளார். ஆர்வமுள்ளோர் இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். 0776613739 எம். பௌஸ்சர், 0712094209 முரளிதரன் என்ற தொலைப்பேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான நீதவான் நியமனம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இளைஞர் அணி சிரேஷ்ட அமைப்பாளர் கணேசன் இளையராஜா நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பரிந்துரையின் கீழ் சமாதான நீதவானாக ஹற்றன் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியபிரமாணம் செய்துகொண்டார்.

முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ சிகரம் அறக்கட்டளையின் பணிப்பாளருமான கணேசன் இளையராஜா இளைஞர் சேவையிலும், சமூக சேவைகளிலும் பல்வேறு சேவைகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொகவந்தலாவ செப்பல்டனை பிறப்பிடமாக கொண்ட இவர் ஹொலிரோசரி த.வி பாடசாலையின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரத்ததான நிகழ்வு

நாரஹேன்பிட்டி இரத்ததான மாற்று நிலையத்தில் இரத்ததான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரத்ததான மாற்று நிலையத்தில் காலை 09.00 மணி முதல் மாலை 02.00 வரை இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

எனவே இதில் பங்குபற்றுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 0772000093 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ள முடியும்.

'உறுமய' தேசிய வேலைத்திட்டம்; அநுராதபுரத்தில் நடமாடும் சேவை

திறப்பனை தினகரன் நிருபர்

பிறந்த பூமியின் உரிமை உங்களுக்கு' என்ற தொனிப் பொருளில் 20 இலட்சம் குடும்பங்களுக்கான உறுமய காணி உரிமை பத்திரம் தேசிய வேலைத் திட்டம் தொடர்பில் இம்மாதம் 26 ஆம் திகதி முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை அநுராதபுர மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடமாடும் சேவைகளை தொடர்ந்து நடத்துவதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்பிரகாரம், அநுராதபுர மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இதற்கான நடமாடும் சேவைகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் தங்களுக்குரிய பிரதேச செயலக பிரிவு அலுவலகங்களில் இதுபற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அநுராதபுர மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.



பங்சார் அண்ணாமலை கவிதைகள் அறிமுக விழா



சந்தக் கவிஞர் 'தங்கமகன்' பங்சார் எ.அண்ணாமலை எழுதிய 'பங்சார் அண்ணாமலை கவிதைகள்' நூல் அறிமுக விழா மலேசியாவின் கோலாலம்பூரில் எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கோலாலம்பூர் தேசிய நில நிதி கூட்டுறவு சங்க வளாகத்தில் அமைந்துள்ள டான் ஸ்ரீ டத்தோ கே.ஆர்.சோமா அரங்கத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

மலேசியா தமிழ் ஊற்று சங்கமம், மலேசியத் தமிழ்ப் பாவலர் மன்றம், சிலாங்கூர் கோலாலம்பூர் தமிழ் எழுத்தாளர் வாசகர் இயக்கம் மற்றும் சென்னை 88 இலுள்ள தமிழியல் ஆய்வு மையத்தின் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ.மோகனரங்கனின் பங்களிப்புடன் பங்சார் அண்ணாமலை கவிதைகள்' நூல் அறிமுக விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முன்னிலை விருந்தினர்களாக முனைவர் மோ.பாட்டழகன், இயக்குநரும் கவிஞருமான முனைவர் ஆலந்தூர் கோ.மோகனரங்கன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வரவேற்பு உரையை எம்.எஸ்.கலைச்செல்வன் நிகழ்த்தவுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினரும் மஇக தேசிய துணைத் தலைவரும் கவியரசர் கண்ணதாசன் அறவாரிய தலைவருமான டத்தோ ஸ்ரீ டாக்டர் எம்.சரவணன் நிகழ்வுக்கு தலைமை ஏற்று நூலை வெளியிட்டு வைத்து சிறப்பு உரை நிகழ்த்தவுள்ளார்.

வாழ்த்துரையை மலேசிய சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியரும் முதுநிலை விரிவுரையாளருமான முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை நிகழ்த்தவுள்ளார்.

இதன்போது நூல் முதல் பிரதியை டத்தோ பிரகாஷ் லெட் சுமணதாஸ் மற்றும் திருமதி சரஸ்வதி ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளதாக, நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மலையக மாணவர்களுக்கு மடிக்கணினி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

ஹற்றன் விசேட நிருபர்

மலையகத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் மடிக்கணினிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மலையக மக்கள் சக்தியின் தலைவர் இராமன் செந்தூரன் தெரிவித்தார். மலையக கல்வி தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மலையகப்பகுதியில் வாழும் பெரும்பாலான மாணவர்கள் இன்று பொருளாதார நெருக்கடியில் இருக்கின்றனர். இதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். பல குடும்பங்களில் கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொள்ள முடியாமையால் பல்கலைக்கழக கல்வியை இடைநடுவில் விட்டுவிட்டு வேலைக்கு சென்று விடுகின்றனர். மலையகத்தை பொருத்தவரையில் பாரிய பிரச்சினையாக இது காணப்படுகின்றது. மலையகம் மாற்றம் பெற வேண்டும் என்றால் அது கல்வியில் தான் உள்ளது என்பதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. இந்நிலையில் மலையக மாணவர்கள் கல்வியை தொடர்வதற்கு தேவையான அனைத்து உதவிகளையும் மலையக அரசியல் தலைவர்கள் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும். மலையக மாணவர்களுக்கு மடிக்கணினி என்பது இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. அதனை பெற்றுக்கொள்வதற்கு பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்களுக்கு வசதியில்லை. எனவே இதுதொடர்பில் இந்திய உயர்தானிகரிடம் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளோம். மலையகத்திலிருந்து தெரிவான அனைத்து மாணவர்களுக்கும் தங்களுடைய கற்றலை மேம்படுத்துவதற்கு ஒரு மடிக்கணினியை பெற்றுத்தர வேண்டும். அதிலும் குறிப்பாக தோட்ட மாணவர்களுக்கு மட்டுமன்றி ஏனைய மாணவர்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். இன்று பெரும்பாலானவர்கள் தோட்டத்தில் இருந்தாலும் தோட்டத்தில் வேலை செய்வதில்லை. அது மாத்திரமன்றி பலர் தோட்டத்தை விட்டு வெளியில் சென்று தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

இதேநேரம் அதுமாத்திரமின்றி இந்திய புலமைப்பரிசில் வழங்கும் போது தோட்ட மாணவர்களுக்கு மாத்திரம் முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. ஆனால் தோட்ட நிர்வாகத்திடம் கடிதங்கள் பெற்றுக் கொள்ள செல்லும் போது அவர்கள் தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்கு மாத்திரம் தான் வழங்குகின்றனர்.

அதனால் தோட்டத்தில் வேலை செய்யாத பலருக்கு இந்த வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆகவே அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தோம். அதேநேரம் கிளங்கன் வைத்தியசாலை தவிர பல வைத்தியசாலைகள் மலையக பகுதியில் காணப்படுகின்றன. எமது மக்கள் இன்றுள்ள காலநிலையில் அங்கு செல்வதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே தோட்ட வைத்தியசாலைகளையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

ஈரான் கலாசார நிலைய ஏற்பாட்டில் விசேட நிகழ்வு

கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்

ஈரான் கலாசார நிலையம் ஏற்பாடு செய்திருந்த விசேட நிகழ்வு ஈரான் கலாசார நிலைய பிரதான மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (25) மாலை நடைபெற்றது.

கலாசார நிலைய கவுன்சிலர் கலாநிதி பஹ்மன் முஅஸ்ஸாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலி ரீஸா தெல்கோசி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். வரவேற்புரையை கவுன்சிலர் கலாநிதி பஹ்மன் முஅஸ்ஸாமி நிகழ்த்தியதுடன் இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலி ரீஸா தெல்கோசியும் உரையாற்றினார்.

விசேட பேச்சாளராக கலந்து கொண்ட அஷ்ஷெய்க் எஸ்.எல். மதனி இஸ்லாம் மார்க்கம் பரிபூரணமாக்கப்பட்டது குறித்து உரையாற்றினார்.

மாணவர்களின் கலாசார நிகழ்வும் இடம்பெற்றது. ஈரான் கலாசார நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு ஈரான் தூதுவர், அவரது பாரியார் மற்றும் கலாசார நிலைய கவுன்சிலர் ஆகியோர் பரிசில்களை வழங்கினர்.

இதன்போது கலாசார நிலைய ஊழியர்களும் கௌரவிக்கப்பட்டனர். இதில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்து கொண்டனர்.

குளவி கொட்டியதால் பெண் மரணம்

அக்குறணை குறூப் நிருபர்

பேராதனை, போதனா வைத்தியசாலையில் குளவிக்கொட்டினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மஸ்கெலியா பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய சிவகுமார் அந்தோனி டெரிண்டா என்ற இரு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் கடந்த 19ஆம் திகதி தோட்டத்தில் வேலை செய்யும் போது குளவிக்கொட்டுக்கு இலக்காகி மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் டிக்கோயா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

வடமாகாணத்தில் ஜூனியர் சுப்பர் சிங்கர்

C J Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு வடமாகாணத்தில் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியொன்றை நடத்தவுள்ளது. இந்தப் போட்டி முதலில் மாவட்ட ரீதியில் நடத்தப்படும். வடமாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் இந்தப் போட்டி முதலில் நடத்தப்பட்டு இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்தப்படும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும் இந்த இறுதிப் போட்டியில், வடமாகாணத்தில் மாபெரும் ஜூனியர் சுப்பர் சிங்கர் புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக்காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் வெற்றி பெறுபவர்களுக்கு முதலாம் பரிசாக பத்து லட்சம் ரூபாவும் இரண்டாம் பரிசாக மூன்று லட்சம் ரூபாவும் மூன்று பரிசாக ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படும்.

இந்தப் போட்டியின் முதலாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள திருமுறைக்கலாமன்றத்தில் எதிர்வரும் 2024 ஜூலை 06ஆம், 07ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் இரண்டாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், மருதனார் மடத்தில் உள்ள வடஇலங்கை சங்கீத சபை மண்டபத்திலும் சாவகச்சேரி நகராட்சி மண்டபத்திலும் எதிர்வரும் 2024 ஜூலை 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் மூன்றாவது குரல் தேர்வு மன்னார், நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஜூலை 20ஆம், 21ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் அடுத்த குரல் தேர்வு பருத்தித்துறை, வல்லை, யாழ் பீச் ஹோட்டலில் எதிர்வரும் 2024 ஜூலை 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெறும். இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று கிளிநொச்சி, பரந்தன் ஆர்ஜே மஹாலில் எதிர்வரும் 2024 ஒகஸ்ட் 03 ஆம், 04ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று முல்லைத்தீவு, நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஒகஸ்ட் 10 ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறும்.

இந்தப் போட்டியின் குரல் தேர்வொன்று வவுனியா, நகர சபை மண்டபத்தில் எதிர்வரும் 2024 ஒகஸ்ட் 17 ஆம், 18ஆம் திகதிகளில் நடைபெறும். பிரிட்டிஷ் கவுன்சில், சங்கவி பிலிம்ஸ் நிறுவனம், ஆர்ஜே மஹால், யாழ் பீச் ஹோட்டல் மற்றும் ரெஸ்ட்டூரண்டின் அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகள் அச்சு ஊடக அனுசரணை வழங்குவதுடன் "சமூகம்", சமூக ஊடக வலைத்தளம் அனுசரணை வழங்கவுள்ளது.

உள்ளூராட்சி சபை ஊழியர்களுக்கு ஓய்வூதியத்துடன் நிரந்தர நியமனம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உள்ளூராட்சி சபைகளில் தற்காலிக, அமைய, ஒப்பந்த மற்றும் நிவாரண அடிப்படையில் அடிப்படையில் பணி புரியும் ஊழியர்களுக்கு ஓய்வூதியத்துடன், நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்தன அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ள இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

நாடளாவிய ரீதியிலுள்ள பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபைகளில் பணிபுரியும் தற்காலிக, ஒப்பந்த அடிப்படை, அமைய அடிப்படை,மற்றும் நிவாரண அடிப்படையில் பணிபுரியும் 8435 பேர், இவ்வாறு நிரந்தர நியமனங்களைப் பெற்றுள்ளவுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்தது.

மேற்படி நிரந்தர நியமனம் மற்றும் நியமனங்களை பெற்றுக்கொள்பவர்களுக்கான நியமனக் கடிதங்களை பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட விடயங்களை கலந்துரையாடுவதற்காக, பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தில் நேற்று முன்தினம் விசேட பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

இதன் போது எதிர்வரும் ஜூலை மாதத்தில் மேற்படி அனைத்து நியமனங்களையும் வழங்குவதற்கும் இதற்கான நியமனம் கடிதங்களை உரியவர்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபை இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த,பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, மேல், வடமேல், வடக்கு மாகாணங்களின் ஆளுநர்கள் மற்றும் செயலாளர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் இந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டுள்ளனர்.

தினகரன் THINAKARAN

92 வருடங்களுக்கு முன்

தினகரன்

இன்று 28 ஜூன் 1932



கண்டி நகர் நீர் வசதி

கண்டி நகரசபை நடவடிக்கை

3 மணி நேர விவாதம்

கண்டி நகர் நீர் வசதி

கண்டி நகர சபை நடவடிக்கை

3 மணி நேர விவாதம்

இன்று கண்டி நகர பரிபாலன சபையில் எதிர்காலத்தில் கண்டிக்குத் தண்ணீர் வசதிகள் செய்து கொள்வதைக் குறித்து அனுஷ்டிக்கப்பட வேண்டிய கொள்கைகள் சம்பந்தமாக மின்சார இலாகாவைச் சேர்ந்த திரு. சீ. ஜே. ஹண்டரால் செய்து கொள்ளப்பட்ட அறிக்கை 3 மணி நேரமாக விவாதிக்கப்பட்டது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

முட்டை, பால் உற்பத்திகளில் தன்னிறைவு ஏற்படவில்லை

நாட்டுக்குத் தேவையான மொத்த முட்டை மற்றும் பால் உற்பத்திகளில் இன்னும் தன்னிறைவு அடையவில்லை என,பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் குறிப்பிட்ட அமைச்சர் :2021 இல், உரப்பிரச்சினை ஏற்பட்ட போது சோளம் உற்பத்தி வீழ்ச்சியுற்றது.இதனால், கோழி வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு என்பன பாதிக்கப்பட்டன.

06

மருந்து கொள்வனவு விவகாரம்: ஜூலை 01இல் விசாரணை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மருந்து இறக்குமதியில் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படும் முறைகேடுகள் குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தாக்கல் செய்த ரிட் மனுவை எதிர்வரும் ஜூலை (01) விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

தரமற்ற மருந்து கொள்வனவு தொடர்பான சம்பவத்தில் தமக்கு எதிரான வழக்கு நிறைவடையும் வரை, தம்மை விளக்கமறியலில் வைப்பதற்கு மாளிகாகந்தை மாஜிஸ்திரேட் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை செல்லுபடியற்றதாக்குமாறு உத்தரவிடக் கோரி முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல

மேற்படி மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.இதன் போது சட்ட மா அதிபரின் சார்பில் நிர் மலன் விக்னேஸ்வரன் நீதிமன்றத்தில் விடயங்களை முன் வைத்திருந்தார். அதனையடுத்து முன்னாள் அமைச்சரின் மேற்படி ரிட் மனுவை, எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீ ல.சு. க சகல வழக்குகளும் விரைவில் தீர்த்து வைக்கப்படும்

(அக்குறணை குறூப் நிருபர்)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொடர்பான சகல வழக்குகளும் விரைவில் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

06

முன்னாள் ஜனாதிபதி சீனா பயணம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நேற்றுக் காலை சீனாவிற்கு பயணமாகியுள்ளார்.

06

வெடி மருந்துகளுடன் நால்வர் ஹசலகவில் அதிரடிக் கைது

ஹசலக பிரதேசத்தில் ஒரு தொகை வெடி பொருட்களுடன் நால்வர் கைதானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹசலக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெல்கல பகுதியில் வைத்தே இவர்கள் வெடிபொருட்களுடன் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

ஹசலக்க பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த தகவல்களை வைத்து பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கையிலே,வெடிபொருட்களுடன் இவர்கள் கைதாகினர்.இவர்களிடமிருந்து மீட்கப்பட்ட வெடிப்பொருட்களில் 01 கிலோ மற்றும் 550 கிராம் அமோனியம் தூள்,116 சென்றிமீற்றர் வெடிப்பதற்காக பயன்படுத்தப்படும் நூல் மற்றும் 03 டெட்டனேட்டர்களும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 37, 50 மற்றும் 60 வயதுடையவர்கள் என்றும் அவர்கள் மினிபே பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மகாவலி கங்கையில் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சந்தேக நபர்கள் இந்த வெடிபொருட்களை கொண்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதி விபத்து மரணங்கள் அதிகரிப்பு வருடாந்தம் 12,000 பேர் உயிரிழப்பு

நாளொன்றுக்கு எட்டுப் பேர் மரணம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருவதாகவும் மோட்டார் சைக்கிள் விபத்துக்களிலேயே அதிகளவானோர் உயிரிழப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் தினமும் இடம் பெறும் வீதி விபத்துக்களால் நாளாந்தம் எட்டுப் பேர் உயிரிழப்பதாக போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திக்க ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

வீதி விபத்துக்கள் தொடர்பில் ஊடகங்களை தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் கருத்துரைத்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

06

கொழும்பு மாவட்ட வெள்ளம்; ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்டதற்கான காரணங்களை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் ஆராய்ந்து அறிக்கை கோருமாறு, கொழும்பு மாவட்ட பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகள் இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தீர்வு காணப்படவுள்ளன.இதற்கான ஏற்பாடுகளை

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க செய்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் ஏற்படும் வெள்ளம் மற்றும் இதர பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடி தீர்வு காண்பதற்குத் தேவையான திட்டங்களை உடனடியாகத் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் சாகலரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் (26) இது தொடர்பில் நடத்தப்பட்ட கூட்டத்திலேயே சாகலரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் சேதமடைந்த பகுதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் குறித்த பிரதேச அரசியல் பிரதிநிதிகள் நேரில் சென்று அவதானித்தனர். இயற்கை காரணங்களைப் போன்று, ஒழுங்கற்ற மனித செயற்பாடுகளும் வெள்ள நிலைமை ஏற்படக் காரணமாக உள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

06

நுவரெலியா பஸ் நிலையம் அருகே இருவர் சடலங்களாக மீட்பு

நுவரெலியா பிரதான பஸ் நிலையமருகில் நுவரெலியா மாநகர சபைக்கு சொந்தமான பொது மலசல கூடத்திலிருந்து நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நுவரெலியா பொலிஸார் இச்சடலத்தை (27) காலை மீட்டனர். சடலமாக மீட்கப்பட்டவர் இலக்கம் 85 ஆரியபுர பொகவந்தலாவை பிரதேசத்தை சேர்ந்த கல்பொகே ஹேவாகே அஜித் நிஸ்ஸங்க (வயது 51) என அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்ட நபர், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்தவரென உறவினர்கள் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

06

சட்ட மா அதிபரின் பதவிக்காலத்தை நீடிக்கும் யோசனை தோற்கடிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக்காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்துள்ள யோசனையை, அரசியலமைப்பு பேரவை மீண்டும் நிராகரித்துள்ளது. சட்ட மா அதிபரின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்வதற்காக,அரசியலமைப்புசபை நேற்று முன்தினம் மீண்டும் கூடியது. இதன் போது மீண்டும் இதற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இந்த வாக்கெடுப்பின்போது சட்டமா அதிபரின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கான யோசனைக்கு எதிராக 5 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாக மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்துள்ளனர்.அந்த வாக்குகளின் அடிப்படையில் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேற்படி யோசனை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி எயார்டெல்லங்காவை கையகப்படுத்துதல் பூர்த்தியடைந்ததுடன் ஒன்றிணைப்பு செயன்முறை ஆரம்பம்

தேவையான அனைத்து ஒழுங்குமுறை மற்றும் பங்குதாரர்களின்ஒப்புதல்களை தொடர்ந்து டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி (Dialog) ஆசிஆட்டா குழுமம் பெர் ஹாட் (Axiata) மற்றும் பார்த்திஎயார்டெல்லிமிட்டட் (BhartiAirtel) ஆகியன இணைந்து பங்குவிற்பனை பரிவர்த்தனை வெற்றிகரமாக பூர்த்தியானது. இந்த பங்குபரிமாற்றத்தின் மூலம் டயலொக் நிறுவனம் பார்த்தி எயார் டெல்லங்கா (பிரைவேட்) லிமிட்டடின் (Airtel Lanka) வெளியிடப்பட்ட 100சதவீத பங்குகளை கையகப்படுத்துகிறது. இந்த பங்குபரிமாற்றத்தின் பின்னர் டயலொக்கின் 73.75சதவீத பங்குகளை ஆசி ஆட்டாவும் 10.355சதவீத பங்குகளை பார்த்தி எயார் டெல் நிறுவனமும் மிகுதி 15.895சதவீத பங்குகளை பொதுமக்களும் உரிமை கொண்டாடுவர். கம்பனி சட்டத்தின் பொருத்தமான பிரிவுகளுக்கு அமைய எயார் டெல்லங்காவை தன்னுடன் ஒன்றிணைக்க டயலொக் முன்மொழிந்துள்ளது. இதன்படி ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பாக டயலொக் திகழும்.

இந்த இணைப்பு 2023 மேமாதத்தில

பங்கு விற்பனை பரிவர்த்தனையின் பூர்த்தி (புகைப்படத்தில் இடமிருந்துவலமாக)விரந்தி ஆட்டிகல்ல குழும நிறுவனச்செயலாளர் டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி ட்ரீவேர் பெர்னாண்டோ குழும பொதுசட்டஆலோசகர் துணைத்தலைவர் - சட்டம் மற்றும் ஒழுங்குமுறை டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ...(பதில்) குழும பிரதம நிதியியல்அதிகாரி டயலொக் ஆசிஆட்டாபிஎல்சி சுபுன்வீரசிங்க பணிப்பாளர்/ குழுமபிரதமநிறைவேற்றுஅதிகாரி, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி ஆ"சந்திரா பிரதம நிறைவேற்று அதிகாரி நிர்வாகப்பணிப்பாளர், பார்த்தி எயார்டெல்லங்கா (பிரைவேட்) லிமிடெட் ரவிஜெயின், உதவித்துணைத்தலைவர், இணைப்புகள் மற்றும் கையகப்படுத்தல்கள் மற்றும் வணிகஅபிவிருத்தி, பார்த்திஎயார் டெல்லங்கா (பிரைவேட்) லிமிடெட் பங்கஜ்கார்கி பணிப்பாளர்/ பிரதமநிதியியல்அதிகாரி, பார்த்திஎயார்டெல்லங்கா (பிரைவேட்) லிமிடெட் மூனேர்டேனிட், குழுமபிரதம வர்த்தக அதிகாரி, டயலொக் ஆசிஆட்டாபிஎல்சி

முதன்முதலில் அறிவிக்கப்பட்டது. இலங்கையின் தொலைத்தொடர்புதுறையில் ஒரு முக்கிய மைல்கல் ஆகும். இரண்டு முன்னணி நிறுவனங்களின் பலத்தையும் நிபுணத்துவத்தையும் ஒருங்கிணைத்து இந்நாட்டின் முழுவதும் உள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு உலகத்தர டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கி இந்நாட்டின் டிஜிட்டல் சூழலமைப்புக்கும் பொருளாதாரத்திற்கும் பங்களிக்கவுள்ளன.

இணைப்பின் பின்னர் டயலொக் மற்றும் எயார்டெல்லங்கா ஆகியன வழமை போலவே வாடிக்கையாளர்களுக்கு தமது சேவைகளைதொடர்ந்து அளிக்கும் அதேவேளை அபரிமிதமான மதிப்பும் மற்றும் அதிசிறந்த இணைப்பு தீர்வுகளையும் அளிக்கும் நோக்குடன் இருவலையமைப்புகளும் இணைந்து பணிகளை தொடங்கவுள்ளன.

இந்தமைல்கல்டயலொக்மற்றும்எயார்டெல் லங்காஇடையிலான

இணைப்பின்பூர்த்தியைக்குறிக்கின்றது. எயார்டெல் குழுவினரையும் அவர் தம் 3 மில்லியன் சந்தாதாரர்களையும் டயலொக் குடும்பமாகிய நாம்உளமார வரவேற்கின்றோம். இத்தருணத்தில் இப்பரிவர்த்தனையை இனிதே நிறைவேற்றதம் ஒப்பில்லா ஆதரவை நல்கிய இலங்கை அரசாங்கம் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRC) முதலீட்டுச்சபை (BOI) கொழும்புப்பங்குப்பரிவர்த்தனை (CSE) இலங்கை மத்திய வங்கி (CBSL) ஆசிஆட்டா மற்றும் பார்த்திஎயார்டெல் மற்றும் இதர பங்குதாரர்கள் அனைவருக்கும் எமது உளம்கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்" என டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன்வீரசிங்க அவர்கள் தெரிவித்தார்.

இம்மாறுதல் மிக்க பயணத்தை நாம் ஆரம்பிக்கும் இவ்வேளையில் நமது கவனம் இப்போது டயலொக் மற்றும் எயார்டெல் இரு நிறுவனங்களின கூட்டு பலத்தைப் பயன்படுத்தி இலங்கையின் தொலைத் தொடர்புதுறையில் முன்னேற்றங்களை நிகழ்த்துவதன் மீது குவிந்திருக்கின்றது. இந்த ஒரு இணைப்பு பாரிய வளர்ச்சியை அடைய ஏதுவாக நம்மை நிலைநிறுத்துகிறது. மிகச்சிறந்த வாடிக்கையாளர் அனுபவம் மற்றும புதுமைக்காக மட்டுமின்றி நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்காற்றுவதற்கும் உதவுகிறது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 21

குறள் தரும் சிந்தனை

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

உதவி என்பது, செய்யப்படும் அளவைப் பொருத்துச் சிறப்படைவதில்லை; அந்த உதவியைப் பெறுபவரின் பண்பைப் பொருத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்.

ஆசிரியர், அதிபர்களைப் பயன்படுத்தி அற்ப அரசியல் இலாபம் பெற முயற்சி!

அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்களும் அதிபர்களும் நேற்று இரண்டாவது நாளாகவும் சுகவீன தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதனால் பல பாடசாலைகளில் ஆசிரியர், அதிபர்கள் கடமைக்கு சமுகமளித்திருக்கவில்லை. மாணவர்களின் வரவிலும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்களும் வழமைக்கு மாறாக நேரகாலத்தோடு வீடு திரும்பும் நிலைக்கு உள்ளாகினர். நேற்றும் அரசாங்கப் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

அதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் இத்தொழிற்சங்க நடவடிக்கை நிச்சயம் தாக்கம் செலுத்தவே செய்யும். ஏற்கனவே நாடு எதிர்கொண்ட கொவிட் 19 தொற்று, பொருளாதார நெருக்கடிகளால் பாடவிதானங்களை உரிய காலவேளையில் பூர்த்தி செய்ய முடியாது தாமதமடையும் நிலைமை காணப்படுகிறது. இந்நிலையில் இத்தொழிற்சங்க நடவடிக்கையும் இதற்குத் துணைபுரியவே செய்யும்.

அதேநேரம் இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க முன்னர் ஆசிரியர்களும், அதிபர்களும் தொழிற்சங்க நடவடிக்கையின் பின்னணி, அதனை முன்னெடுக்கும் நோக்கம், இதனை ஏற்பாடு செய்ப வர்கள், இதன் ஊடான எதிர்பார்ப்பு என்பன குறித்து எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். இருப்பினும் அவை குறித்து எண்ணிப் பார்க்கத் தவறிய நிலையில் இத்தொழிற்சங்க நடவடிக்கையை ஏற்பாடு செய்தவர்கள் ஆசிரியர், அதிபர்களைக் கொண்டு தங்கள் அற்ப நலன்களை அடைந்து கொள்ள முயற்சி செய்திருக்கின்றனர்.

அதாவது இவ்வருடத்தின் பிற்பகுதியில் நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவிருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் ஆசிரியர்களையும், அதிபர்களையும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுத்தி, அதன் ஊடாக அற்ப அரசியல் இலாபம் பெற்றுக்கொள்ள ஜே.வி.பிஎதிர்பார்த்துள்ளது. அதனை இத்தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட ஒழுங்கும் அதற்குத் தலைமை தாங்கி நடத்தியவர்களில் முக்கிய மானவர்கள் ஜே.விபி யைச் சேர்ந்தவர்களாக இருந்ததும் நல்ல எடுத்துக்காட்டாகும்.

ஆசிரியர்களையும் அதிபர்களையும் பயன்படுத்தி அற்ப அரசியல் இலாபம் பெற்றுக்கொள்ள ஜே.வி.பி மேற்கொண்ட முயற்சியே இத்தொழிற்சங்க நடவடிக்கை என்பதுதான் பரவலான கருத்தாக உள்ளது.

தற்போதைய சூழலில் சில அரசியல் கட்சிகள், தங்கள் அற்ப அசியல் நலன்களுக்காக நாட்டின் ஒவ்வொரு துறையையும் பயன்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. அந்த வகையில் இத்தொழிற்சங்க நடவடிக்கையின் ஊடாக ஆசிரியர்களும் அதிபர்களும் ஜே.வி.பியின் முயற்சிக்கு துணை போயுள்ளனர் என மக்கள் கருதுகின்றனர்.

ஆனால் ஜே.வி.பியானது ஆசிரியர்களினதோ, மாணவர்களினதோ நலன்களுக்காக செயற்படக்கூடிய ஒன்றல்ல. பல்கலைக்கழகங்களில் ஜே.வி.பி சார்பு தொழிற்சங்கங்களும் மாணவர்கள் சங்கங்களும் முன்னெடுக்கும் போராட்டங்களால்தான் பல்கலைக்கழகக் கல்வியை உரிய நேரகாலத்தில் நிறை செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு அப்பாவி உயர்கல்வி மாணவர்கள் உள்ளாகியுள்ளனர். இந்நாட்டின் பல்கலைக்கழக மாணவர் மத்தியில் அரசியலைப் புகுத்தியது ஜே.வி.பிதான். இது மறைக்க முடியாத உண்மையாகும்.

தாம் எதிர்கொண்டுள்ள சம்பள முரண்பாட்டைத் தீர்த்து வைத்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து இத்தொழிற்சங்க நடவடிக்கையை ஆசிரிய சமூகம் முன்னெடுத்த போதிலும், அக்கோரிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உரிய ஒழுங்கில் பேச்சுவார்த்தையை மேற்கொண்டிருக்க வேண்டும். அதன் ஊடாக தொழிற்சங்க நடவடிக்கையின்றியே இக்கோரிக்கைக்கு தீர்வைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்திருக்கலாம்.

ஆன போதிலும் ஜே.வி.பியின் முயற்சிக்கு சில ஆசிரிய தொழிற்சங்கங்கள் துணைபோனதன் விளைவாக கல்வி அத்தியாவசிய சேவையாக்கப்படும் நிலையை உருவாகியுள்ளது. சில தொழிற்சங்கத் தலைவர்களின் பிழையானதும் தவறானதுமான தீர்மானங்களால்தான் இந்நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற கருத்தை சில ஆசிரியர்களும் அதிபர்களும் கொண்டுள்ளனர்.

நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி தற்போது மீட்சி பெற்றுள்ளது. அப்படியிருந்தும் கடந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அதன் முதற்பகுதி கடந்த ஜனவரி மாதமே பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அப்படியிருந்தும் இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கையை ஆசிரியர்களும் அதிபர்களும் முன்னெடுப்பது எவ்விதத்திலும் நியாயப்படுத்தக் கூடிய விடயமல்ல. அது மாணவர்களின் கல்வியைப் பாதிக்கத் துணைபோகும் செயலாகவே அமையும் என்பதே சமூக ஆர்வலர்களின் கருத்தாகும்.

மேலும் அரசாங்கப் பாடசாலை என்பதற்காக ஆசிரியர்களும் அதிபர்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். ஆனால் தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களோ, அதிபர்களோ அவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. அவர்கள் எதிர்கால சந்ததியினரின் நலன்களை முன்னிலைப்படுத்தியே செயற்படுகின்றனர்.

அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்களும் அதிபர்களும் அவ்வாறு செயற்பட வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

editor.tkn@lakehouse.lk

இளைஞர் பிரதிநிதிகளுக்கான துறைசார் மேற்பார்வை குழுவின் இரண்டாவது செயலமர்வு

பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகத் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர் பிரதிநிதிகளுக்கு குறித்த குழுக்கள் பற்றிய செயலமர்வு அண்மையில் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) ஒத்துழைப்புடன் இலங்கைப் பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நான்கு தொடர் செயலமர்வுகளின் இரண்டாவது செயலமர்வாக இது அமைந்தது. துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் விடயப்பரப்புக்கள் குறித்து அந்தந்தக் குழுக்களின் இளைஞர் பிரதிநிதிகளுக்குப் புரிதலை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

இந்தச் செயலமர்வு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் அஜித் மான்னப்பெரும, சுகாதார அலுவல்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மயந்த திசாநாயக, குழுவின் உறுப்பினர் வைத்தியகலாநிதி உப்புல் கலப்பதி, வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் ஜகத் குமார சுமித்ராரச்சி, வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாளக பண்டார கோட்டேகொட, சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் மதுர விதானகே, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

இங்கு, 'நிலையான ஜனநாயகத்திற்கான சட்டவாக்க செயற்பாடுகளில் இளைஞர்களின் பங்களிப்பு' எனும் தலைப்பில் வலுவாதார அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி சாமிந்திரி சபரமாது விசேட உரை நிகழ்த்தினார். இங்கு, இளைஞர் பிரதிநிதிகள், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகளுடன் கூடிய விசேட அமர்வில் கலந்து கொள்வதற்கும், சம்பந்தப்பட்ட குழுக்களின் செயற்பாடுகள் பற்றிய பரந்த புரிதலைப் பெறுவதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. குழுக்களால் செயற்படுத்தப்படும் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப் படவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இந்தச் செயலமர்வில், துறைசார் மேற்பார்வைக் குழுக்களை ஒருங்கிணைக்கும் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகள், ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் அதிகாரிகள், பாராளுமன்ற குழுக்களின் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

எம்.ஜயலத் பெரேரா...
பணிப்பாளர் சட்டவாக்க சேவைகள்/
பணிப்பாளர் தொடர்பாடல் (பதில்)
இலங்கை பாராளுமன்றம்

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தேசிய அங்கத்தவர் மாநாடு-2024 நாளை

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வசித்த படித்த நடுத்தர வர்க்க இளைஞர்கள் 40 பேர் ஒன்றுகூடி 'இஸ்லாத்தைக் கற்க வேண்டும், அதன்படி வாழ வேண்டும், இஸ்லாமியப் பணியில் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்' எனும் நோக்கில் தெஹியோவிட்ட நகரில் 1954 ஜுலை 18ஆம் திகதி உருவாக்கிய அமைப்பே இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி ஆகும். இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி தனது 70 ஆவது ஆண்டில் கால்பதிக்கிறது.

அதன் ஸ்தாபகத் தலைவராக அப்துல் காதர் ஜெய்லானி ஹஸரத் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டார். அலிகார் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அந்த இளைஞனையே, அல்குர்ஆனை தமிழ் மொழியில் முதன் முதல் மொழி பெயர்த்த அப்துல் ஹமீத் பாகவி அதனை இலங்கையில் அறிமுகப் படுத்த பொறுப்பாக்கியிருந்தார்.

'இஸ்லாத்தில் பூரணமாக நுழைந்து விடுங்கள்' என்ற அல்குர்ஆனின் அழைப்பை சிரமேற்கொண்டு இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி தனது பயணத்தை ஆரம்பித்தது.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் பிரதான சமயப்பணிகளாக இஸ்லாத்தைக் கற்க ஊக்கமளித்தல், உதவுதல், இஸ்லாத்தைப் பற்றிய சரியான புரிதல்களை வழங்குதல், சமயம் என்ற குறுகிய பொருளில் அன்றி ஒரு பரிபூரண வாழ்க்கை நெறி என்ற அடிப்படையில் தனிமனிதர்களை, குடும்பங்களை, சமூகத்தை உருவாக்க உதவுதல் என்பவை உள்ளன.

இலங்கையர்க்கும் குறிப்பாக, முஸ்லிம்களுக்கும் பயன்படுகின்ற சமூகநலத் திட்டங்களை முன்னெடுத்தல், சமூகங்களுக்கு மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தையும் தோற்றுவித்தல், மனித உரிமைகள் மனித நலன் என்பவற்றைப் பாதுகாக்கும் பணியில் ஒத்துழைத்தல், இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் பணியில் பங்களித்தல், நாட்டின் அமைதிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்தல் என்பவை ஜமாஅத்தின் சமூகப் பணிகளாக அமைகின்றன. இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி அல்குர்ஆன் ஸுன்னா அடிப்படையிலும் அவற்றுக்கு அஹ்லு ஸுன்னா வல் ஜமாஆ வழங்கும் விளக்கத்தின் அடிப்படையிலுமே செயற்படும் என்பது வழிகாட்டல் தத்துவங்களில் தலையாயதாகும். மேலும் சகல செயற்பாடுகளும் இஸ்லாத்தின் நடுநிலை (வஸதிய்யா) கோட்பாட்டைப் பேணியதாக இருக்கும் என்பதும் இஸ்லாம் வலியுறுத்துகின்ற விழுமியங்களை ஜமாஅத் எப்போதும் பேணி நடக்கும்.

ஜமாஅத்தே இஸ்லாமி என்ற பெயரில் அல்லது வேறு பெயர்களில் உள்நாட்டிலோ அல்லது உலகில் எந்த ஒரு நாட்டிலுமோ இயங்கும் எந்தவோர் இயக்கத்துடனும் அமைப்புடனும் எவ்விதமான கட்டுப்பாட்டுடன் கூடிய தொடர்பையும் கொண்டிருக்க மாட்டாது என்ற வழிகாட்டல் 1965 ஆண்டிலிருந்தே ஜமாஅத்தின் யாப்பில் இடம்பெற்றுவரும் அம்சமாகும்.

ஜமாஅத் தனது அனைத்து நடவடிக்கைகளின் போதும் சட்டரீதியான சாத்வீக வழிமுறைகளையே பின்பற்றும். அரசியல் சிந்தனை, அரசியல் விழிப்பூட்டல், நல்லாட்சிப் பண்புகளை ஊக்குவித்தல், நீதியான தேர்தலை உறுதிப்படுத்தல் போன்ற அரசியல்சார் பணிகளில் ஜமாஅத் நேரடியாகவும் ஒத்த கருத்துகள் கொண்ட அமைப்புகளுடன் இணைந்தும் கருமமாற்றுகிறது. ஆனால், ஜமாஅத் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஓர் அமைப்பாகவே இருக்கும் என்பது மற்றுமொரு வழிகாட்டல் தத்துவமாகும்.

ஜமாஅத் பல்வேறு பணிகளைச் செய்து வருகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்கதாக இஜ்திமாக்கள் அமைகின்றன. இதனைவிட தமது ஊழியர்களுக்கு மட்டுமான இஜ்திமாக்களை வருடாந்தம் நடத்துவதும் குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

வாராந்த அல்குர்ஆன் ஸு ன்னா விளக்க வகுப்புகள் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி ஆரம்பித்த காலம் முதலே நடைபெறும் ஒன்றாகும். பள்ளிவாசல்களில் அல்லது ஜமாஅத் நிலையங்களில் இவ்வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தேசிய மட்டத்தில் இயங்கும் இஸ்லாமிய கூட்டமைப்புகளில் ஜமாஅத் பங்களிப்புச் செய்து வந்துள்ளது. தொடர்ந்தும் செய்து வருகிறது. இத்திஹாதுல் முஸ்லிமீன், முஸ்லிம் கவுன்சில் தேசிய சூரா சபை, யுனிட்டி போரம் என்பன இதிலடங்கும். அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையுடனும் ஜமாஅத் ஒத்துழைத்து வருகிறது.

நாட்டின் தேசிய நீரோட்டத்தின் ஒரு முக்கியமான அங்கம் என்ற வகையில் ஜமாஅத் கடந்த பல வருடங்களாக இரத்த தான முகாம்களை நடத்தி வருகின்றது. நாட்டின் பல பிரதேசங்களிலும் இத்தகைய முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

பெண்கள் அணி:

ஆரம்பம் முதலே ஜமாஅத்தில் பெண்கள் பகுதி செயற்படுகிறது. ஆண்களின் அல்லது அதனை விட அதிகமான எண்ணிக்கையில் பெண் ஊழியர்கள் பணி புரிகின்றனர். பெண்கள் பொதுச்சபையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 150 பேர்கள் கொண்ட பிரதிநிதிகள் ஜமாஅத்தின் பொதுச் சபையில் அங்கத்துவம் பெறுகின்றனர். அந்த 150 பேர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பெண்கள் அமைப்பின் 21 அங்கத்தவர் கொண்ட தேசியக் குழு ஜமாத்தின் பிரதிநிதிகள் சபையில் அங்கத்துவம் பெறுகிறது. தேசியக் குழுவில் இருந்து தெரிவு செய்யப்படும் 5 உறுப்பினர்கள் ஜமாஅத்தின் மத்திய ஆலோசனை சபையில் இடம்பெறுவர்.

ஜமாஅத்இயற்கை அனர்த்தங்களின் போது அதியுயர் பங்களிப்பை வழங்கியுள்ளது. 1978இல் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சூறாவளியின் போது அதன் தொண்டர்கள் அனர்த்த முகாமைப் பணிகளில் ஈடுபட்டனர். 1990இல் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டபோது ஜமாஅத்தே இஸ்லாமி மிக அர்ப்பணிப்புடன் உடனடி நிவாரண தேவை முதல் மீள்குடியேற்றம் வரை தொடர்ந்து பணியாற்றியது.

வட மாகாணத்தில் முஸ்லிம்கள் இழந்த சொத்துக்களை விஞ்ஞான ரீதியாக மதிப்பீடு செய்து ஆவணப்படுத்தும் நோக்கில் கலாநிதி ஹஸ்புல்லாஹ் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கான அனுசரணையை ஜமாஅத் வழங்கியது.

1600 அங்கத்தவர்கள் மற்றும் 600 இற்கு மேற்பட்ட பிரமுகர்களின் பங்குபற்றுதலோடு அதன் தேசிய மாநாடு நாளை சனிக்கிழமை (29.06.2024) நடைபெறவுள்ளது.

பாலமுனை சுப்பர் ஓர்கிட் விளையாட்டுக் கழகத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கல்முனை மாநகர சபையின்முன்னாள் முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்கள் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹீப் அண்மைக் காலமாக அம்பாறை மாவட்டத்தில் விளையாட்டுத் துறைக்கு ஆற்றிவரும் சேவையினை பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

பாலமுனை சுப்பர் ஓர்கிட் விளையாட்டுக்கழகத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி பாலமுனை ஹிக்மா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கழகத்தின் தலைவர் ஜே. அமீன் தலைமையில் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு அக்கரைப்பற்று லீ ஸ்டார் மற்றும் டீன்ஸ் ஸ்டார் விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. லீ ஸ்டார் கழகம் வெற்றி பெற்றது.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னணி கழகங்கள் கலந்து கொண்ட

இந்நிகழ்வுக்கு கலாநிதி சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாகவும்,அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம். ஏ.அன்சில், கழகத்தின் ஆலோசகரும்,அதிபருமான பீ.முஹாஜிரின், பாலமுனை மு. கா. அமைப்பாளர் அலியார் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதேவேளை ஒலுவில் இலவன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த பிரிமியல் லீக் கிரிகெட் சுற்றுத் தொடர் அல் ஜாயிஷா மகளிர் கல்லூரி மைதானத்திலும் இடம்பெற்றது.

கழகத்தின் பிரதித் தலைவர் அமீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விலும் சிராஸ் மீராசாஹீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் வெற்றி பெற்ற கழகங்களுக்கு வெற்றி கிண்ணங்களும் பரிசில்களும் வழங்கி வைத்தார்.

எம்.எப். றிபாஸ்...
(பாலமுனை தினகரன் நிருபர்)

புன்னைக்குளம் நாகதம்பிரான் கோயில் வீதி மக்களிடம் கையளிப்பு

மட்டக்களப்பின் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புன்னைக்குளம் நாகதம்பிரான் கோயில் வீதி, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 50 மில்லியன் ரூபா செலவில் கார்ப்பெட் வீதியாக செப்பனிடப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இந்த வீதியை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூ.பிரசாந்தன், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் மாதுளன், பட்டிருப்பு உதவி கல்வி பணிப்பாளர் ஜீவானந்தராஜா, கட்சியின் பிரதி செயலாளர் சந்திரகுமார், பிரதேச குழு செயலாளர் பிரசாத், இணைப்பாளர் கருணைராஜன் உட்பட கிராம மட்ட அமைப்புகளின் நிர்வாகிகள், பொதுமக்களாகிய பலரும் கலந்து கொண்டனர்.

களுவாஞ்சிக்குடியில் இரத்ததான முகாம்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

உலகத் தன்மம் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பின் களுவாஞ்சிக்குடி சீ.மூ.இராசமாணிக்கம் மண்டபத்தில் இரத்ததான முகாம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. உலகத் தன்மம் அமைப்பின் பல்வேறு சமூகப் பணிகளில் மற்றுமொரு அங்கமாக இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் யோ.இதயகீதன் தலைமையில் நடைபெற்ற இரத்த தான முகாமில் அந்த அமைப்பின் சுகாதாரம் மற்றும் தேக ஆரோக்கியத்துக்கு பொறுப்பான இணைப்பாளர் வல்லிபுரம் குணசேகரம், களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அபயவிக்கிரம மற்றும் குருதி நன்கொடையாளர்களாகிய பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆர்வத்துடன் அனைவரும் இரத்ததானம் வழங்கினர்.

இதேவேளை மட்டக்களப்பு இரத்த வங்கிப் பிரிவினர் குருதி நன்கொடையை பெற்றுக்கொண்டனர்.

அனைத்து பல்கலைக்கழகங்களினதும் கல்விசாரா ஊழியர்கள் தங்களது பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராடி வருகின்றனர். இந்நிலையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திலும் நேற்று வியாழக்கிழமை கல்விசாரா ஊழியர்களின் சத்யாக்கிரக போராட்டம் இடம்பெற்றதுடன், பேரணியும் இடம்பெற்றது.

(படம்: ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

வீதி விபத்துகளை தடுக்க உதவுமாறு வேண்டுகோள்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அன்மைக்காலம் முதல் அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பெரிய கனரக வாகனங்கள் மணல் ஏற்றிக்கொண்டு செல்வதால் வீதி விபத்துகள் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. இதனால் உயிரிழப்புகளும் கை, கால்கள் காயமடைந்து அங்கவீனர்களாகவும் மாறும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. பாடசாலை மாணவர்களும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். ஆகையால் வீதி விபத்துகளை தடுப்பதற்கு உதவுமாறு உரிய அதிகாரிகளிடம் அப்பிரதேசவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்நிலையில் அக்கரைப்பற்று பிரதேசத்தில் உலாவும் கனரக வாகனங்களான ஒரு கியூப்புக்கு மேற்பட்ட மணல் டிப்பர்களுக்கான வீதி அனுமதிப்பத்திரத்தை மக்கள் நடமாட்டம் குறைந்த நேரம் பார்த்து அனுமதி வழங்கினால் உயிர் ஆபத்து உள்ளிட்ட பாதிப்புகளை தவிர்க்க முடியும். அத்துடன் பொதுமக்கள் பல அசௌகரியங்ளை தவிர்ப்பதற்கு இது உதவுமென்பதால் மேற்குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் இவ்விடயத்தில் கரிசனை காட்டி உதவி செய்யுமாறும் அம்மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தாய், மகள் மீது கத்தி குத்து; சந்தேக நபர் கைது

தம்பலகாமம் குறூப் நிருபர்

தம்பலகாமம், ஈச்சநகர் பிரதேசத்தில் இருவர் மீது கத்திக் குத்து நடத்தி விட்டு மாறு வேடத்தில் தப்பிக்க முயன்ற சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மூதூரை பிறப்பிடமாகவும் ஈச்சநகரில் திருமணம் முடித்து வசிப்பவருமான 38 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர்.

54 வயதுடைய தாய் மற்றும் 31 வயதுடைய மகள் மீதே கத்திக் குத்து நடத்தப்பட்டுள்ளதாகவும் இதில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாய், மட்டக்களப்பு பொது வைத்தியசாலையிலும் மகள், கந்தளாய் தள வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருவதாக, வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தன்னிடம் வாங்கப்பட்ட கடன் பணத்தை கேட்டு சந்தேக நபரின் கையடக்க தொலைபேசி திருத்தும் கடைக்கு தாய் சென்றிருந்தார். இந்த விடயம் தொடர்பாகவே கத்திக் குத்து இடம்பெற்றதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தம்பலகாமம் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

ஒலுவில் மத்திய விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் பாலமுனையை சேர்ந்த சமூக செயற்பாட்டாளரான நஜாத் முஹம்மட் அப்துல் நஹீம் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கல்முனை மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கலைப்பட்டதாரியும், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தரும் ஆவார். இவர் மரண உபகார நிதியத்தின் இணைப்பாளரும், டைட்டன்ஸ் விளையாட்டு கழகத்தினுடைய ஆலோசகரும், அல்ஹிதாயா மகளிர் கல்லூரியின் பழைய மாணவ சங்க செயலாளரும் ஆவார்.

இவர் பாலமுனையை சேர்ந்த செய்னுலாப்தீன் அப்துல் நஹீம், சுலைமான் சித்தி சாபிறா தம்பதியரின் மூத்த புதல்வர் ஆவார்.

அக்கரைப்பற்று கடற்கரையில் சிரமதானம்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

'நாம் தானே அழுக்காக்கினோம், வாருங்கள் நாமே அழகாக்குவோம்' என்ற தொனிப்பொருளில் அக்கரைப்பற்று கடற்கரையில் கைவிடப்பட்ட குப்பைகளை சுத்தம் செய்யும் பணி ஐகோனிக் யூத்ஸ் சிறிலங்கா அமைப்பினரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டது.

இச்சிரமதான நிகழ்வில் சுமார் 52 கிலோகிராம் எடையுள்ள பிளாஸ்டிக் போத்தல்கள் சேகரிப்பட்டு மீள் சுழற்சிக்காக கையளிக்கப்பட்டது. அத்தோடு பேப்பர், லன்ச்சீட், உணவுக் கழிவுகள், குழந்தைகளின் பம்பஸ்கள் போன்ற இன்னும் பல கழிவுப்பொருட்கள் இதன்போது சேகரிக்கப்பட்டு பிரதான கழிவு அகற்றும் இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அமைப்பின் தவிசாளர் சிமாம் முஸ்தாக் தெரிவித்தார். அமைப்பினுடைய ஸ்தாபகத் தலைவர் யூ.எம்.தில்ஷானின் ஆலோசனையின் கீழ் செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் அத்னான் காஸிமின் வழிகாட்டுதலிலும், இச்செயற்றிட்டத்துக்கான ஒருங்கிணைப்பாளர் ஹம்ஸத் உமரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைப்பினுடைய தவிசாளர் சிமாம் முஸ்தாக், அமைப்பின் உறுப்பினர்கள் உட்பட தன்னார்வ தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

சீன தொலைக்காட்சி நேர்காணலில் அமைச்சர் ஜீவன் பங்கேற்பு

(பொகவந்தலாவ நிருபர்)

சீனாவின் டேலியன் நகரில் நடைபெற்றுவரும் உலகப் பொருளாதார மன்றத்தின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சீனா சென்றுள்ள நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், அங்கு நேற்றையதினம் தொலைக்காட்சி நேர்காணலிலும் பங்கெடுத்திருந்தார்.

செனல் நியூஸ் ஆசியா(Channel News Asia) என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சில் நேரடியாகப் பேசினார்.

மேலும் இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், மிகவும் கடிணமான நெருக்கடியிலிருந்து இலங்கை நாட்டின் முன்னேற்றமடைந்த அல்லது மீண்டுவந்த கதையையும், இலங்கை நாடு திவால்நிலையில் இருந்து மீண்டுவர எடுக்கப்பட வேண்டிய கடினமான முடிவுகளையும் பகிர்ந்து கொண்டுள்ளார். கடந்த சில நாட்களாக, அரசாங்கங்கள் மற்றும் முதலீட்டாளர்களுடன் 16 இருதரப்பு சந்திப்புகளை நடத்தியுள்ளேன், அவர்கள் அனைவரும் இலங்கையை குறிப்பிடத்தக்க அளவு மீண்டெழுந்த பயணம் மற்றும் அவை எவ்வாறு நமது வளர்ச்சி முன்னேற்றத்தின் ஒரு பகுதியாக இருக்க முடியும் என்பதைப் பற்றி அறிய ஆர்வமாக உள்ளனர்.

எங்கள் இருதரப்பு கடனை மறுசீரமைப்பதாக நேற்று அறிவித்தோம். இது எளிதான காரியமல்ல, நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஆலோசகர்களின் கடின உழைப்பு மற்றும் முயற்சியின் விளைவாகவே இவை அனைத்தும் சாத்தியமானது என்று கருத்து பரிமாறிக்கொண்டதாக தெரிவித்தார்.

முதலில் அவர்களின் கடின உழைப்புக்கு நன்றி, நாம் 2 ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட வலுவான மற்றும் அதிக நம்பிக்கையுள்ள தேசமாக உலகிற்கு அடியெடுத்து வைக்க முடியும் என்றும்., நம் நாட்டிலும் நம் மக்களிடமும் எங்களிடம் நிறைய ஆற்றல் உள்ளது, அது பயன்படுத்தப் படாமல் உள்ளது.

இந்தச் சீர்திருத்தப் பாதையில் நாம் தொடர்ந்தால், எமது மக்களை பொருளாதாரம் வலுப்படுத்தினால், அனைத்து இலங்கையர்களுக்கும் உரிய எதிர்காலம் எமக்குக் கிடைக்கும் என்பதில் உறுதியாக உள்ளதாக அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால்கள் வழங்கிவைப்பு

நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட பிரதேசங்களில் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் 30 பேருக்கு செயற்கை கால்கள் வழங்கும் நிகழ்வு நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று காலை நடைபெற்றது.

நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் நுவரெலியா கெலேகால சுவசக்தி மாற்றுத்திறனாளிகள் சங்கத்தினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் சிவில் சமூக அமைப்புகளின் அனுசரணையில் நுவரெலியா மாவட்டத்தில் விபத்து உள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில் தமது கால்களை இழந்திருந்த 30 பேருக்கு செயற்கை கால்கள் வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு தேவையான உதவிகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவி மீது தாக்குதல்; சந்தேகநபர் கைது

பொகவந்தலாவை நிருபர்

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட நோட்டன் பகுதியிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் தரம் 10 இல் கல்வி கற்றுவரும் மாணவியொருவர் கடுமையாக தாக்கப்பட்டு டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நோர்ட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவி மீது தாக்குதல் மேற்கொண்ட சந்தேக நபரை நோர்ட்டன் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தனர்

தாக்குதலுக்குள்ளான மாணவி வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அன்றைய தினமே வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் அதற்கு பிறகுமாணவி டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் மாணவியின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தி மேலதிக விசாரணைகளை நோட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கு மாகாண முன்பள்ளித்துறையில் ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை

வவுனியா பல்கலையில் ஆரம்பம்



நீண்டகாலமாக வடமாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு என தரமான கற்கைநெறி காணப்படாமை தொடர்பில் கல்வியாளர்களாலும் துறைசார் நிபுணர்களாலும் சுட்டிக் காட்டப்பட்டுவந்த நிலையில் கல்வி அபிவிருத்திக்குழுமத்தின் வேண்டுகோளுக்கமைவாக இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் நிதி அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகம் என்பன இணைந்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்களை கோரியிருந்தன. இந்நிலையில் வவுனியா பல்கலைக்கழகத்தினால் பெறப்பட்டவிண்ணப்பங்களின் அடிப்படையில் டிப்ளோமா கற்கைநெறிக்கு உரிய தகைமையைக் கொண்டிருந்த 45 முன்பள்ளிஆசிரியர்கள் எழுத்து மற்றும் நேர்முகத்தேர்வின் ஊடாக தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட 45 முன்பள்ளி ஆசிரியர்களுக்குரிய ஆரம்ப பிள்ளைப்பருவ டிப்ளோமா கற்கைநெறி உத்தியோகபூர்வமாக அண்மையில் ஆரம்பித்துவைக்கப் பட்டது.

வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன் மற்றும் பேராசிரியர் அ. அற்புதராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் கல்வி அபிவிருத்திக் குழுமம் சார்பில் பொறியியலாளர் ந.சச்சிதானந்தன், பொறியியலாளர் ம.சூரியசேகரம் மற்றும் கலாநிதி செல்வரூபி ஸ்கந்தராஜா ஆகியோர் தமது கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.

மேலும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தொலைதூர மற்றும் தொடர் கல்வி மையப் பணிப்பாளர் யூட் லியோன், இணைப்பாளர் திருசண்முகதாசன், யாழ்ப்பாண கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன், கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் இணைப்பாளர் ப.புலவன், சூரியகுமார் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் வவுனியா பல்கலைக்கழகத்துக்கும் கல்வி அபிவிருத்திக்குழுமத்துக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

இதில் 45 முன்பள்ளிஆசிரியர்களுக்குமான கற்கைநெறிக்கான நிதியை முழுமையான புலமைப்பரிசில் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு கல்வி அபிவிருத்திக் குழுமம் வழங்குதல் ,பல்கலைக்கழகம் மேற்கொள்ளும் சுற்றுச்சூழல், நீர் வளம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு தொடர்பான ஆய்வுகளுக்கு கல்விஅபிவிருத்திக்குழுமம் பங்களிப்புசெய்தல் போன்றவை குறிப்பிடத்தக்கது. கல்வி அபிவிருத்திக் குழுமத்தைச் சேர்ந்த பொறியியலாளர் ந.சச்சிதானந்தன் கருத்து தெரிவிக்கும் போது,

வடக்கு மாகாணத்தில் இருக்கும் முன்பள்ளிக்குழந்தைகள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளிகள் தொடர்பிலான தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் கவனமெடுத்து செயலாற்றுவதாக தெரிவித்தார்.

வவுனியா பல்கலைக்கழகத்தினதும் கல்வி அபிவிருத்திக்குழுமத்தினதும் முன்மாதிரியான செயற்பாடு வடக்கு மாகாணத்தில் முன்பள்ளித்துறையில் புதிய அத்தியாயம் என்றும் முன்பள்ளித்துறை வளர்ச்சிப் பாதையில் புதிய படிக்கல் என்றும் கல்வியாளர்கள் பலரும் இதன்போது பாராட்டினர்.

தோட்ட தொழிலாளர் சம்பள அதிகரிப்பு

கம்பனிகளின் மனு மீதான விசாரணை நவ.08 ஆம் திகதி

லோரன்ஸ் செல்வநாயகம்

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான பெருந்தோட்ட கம்பெனிகளின் மனு மீதான விசாரணை நவம்பர் 08க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக உத்தரவிடுமாறு கோரி, பெருந்தோட்டக் கம்பனிகள் மேற்படி மனுவை தாக்கல் செய்திருந்தன.

பெருந்தோட்ட கம்பனிகளால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவை எதிர்வரும் நவம்பர் மாதம் (08) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அகரபதன பெருந்தோட்ட நிறுவனம் உட்பட 21 பெருந்தோட்ட கம்பனிகளால் இந்த மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சோபித ராஜகருணா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, வழக்கு விசாரணையை எதிர்வரும் நவம்பர் (08) இல் முன்னெடுப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் சேவை அத்தியாவசிய...

பணிப் புறக்கணிப்பு காணப்படுகிறது. தமிழ், முஸ்லிம், தனியார் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் வழமை போல நடைப்பெறுகிறது.

பாடசாலையின் பாதுகாவலர்கள் மாணவர்களை திருப்பி அனுப்புவதாக தகவல்கள் வெளியாகியுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (27) முற்பகல் வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகையைத் தரிசித்து ஆசி பெற்றுக்கொண்டார். தலதா மாளிகைக்கு சென்ற ஜனாதிபதியை, தியவடன நிலமே உள்ளிட்ட விகாரை பஸ்நாயக்க நிலமேமார்கள் வரவேற்றனர்.

அதனையடுத்து தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட ஜனாதிபதிக்கு மகா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஆசிர்வதித்தனர்.

இதன்போது கண்டி தலதா மாளிகையில் கலைஞர் அதுல ஹேரத்தினால் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அரசர் மற்றும் அரசியின் சிலைகளையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

அதனையடுத்து தலதா மாளிகையை தரிசிக்க வந்திருந்த பொது மக்களோடும் சிநேகபூர்வமாக ஜனாதிபதி உரையாடினார். அதன்பின்னர் மல்வத்து மகா விகாரைக்கு சென்ற அவர், மல்வத்து பீடத்தின் மகா நாயக்க தேரர் வண. திப்படுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரை சந்தித்து ஆசிபெற்றுக்கொண்டார்.

நேற்றைய விசேட உரையின் பின்னர் முதல் முறையாக மகா நாயக்க தேரர்களைச் சந்தித்த ஜனாதிபதி, அரசாங்கத்தின் முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்தும் அவர்களுக்கு விளக்கமளித்தார்.

கண்டி பெருநகர அபிவிருத்தி திட்டத்தையும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மல்வத்து மகாநாயக்க தேரர்களிடம் கையளித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரின் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துமாறு மகாநாயக்க தேரர்கள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளித்த ஜனாதிபதி, சம்பள பிரச்சினைகள் ஏற்படாதவாறு அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கான முறைமையொன்று அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என உறுதியளித்தார்.

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு குறித்து தற்போதும் அமைச்சரவை கவனம் செலுத்தியிருப்பதாகவும், அதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"நான் ஆட்சியை பொறுப்பேற்ற வேளையில் மல்வத்து விகாரைக்கு வந்திருந்தேன். அதன்போது நீங்கள் வழங்கிய அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நாட்டின் ஆட்சியை நெறிப்படுத்தி இன்று வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளோம். அந்த தகவலை உங்களுக்குச் சொல்லவே இன்று இங்கு வந்தேன். வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான இரண்டு இணக்கப்பாடுகளையும் எட்டியுள்ளோம்.

ஆசிரியர்களுக்கு அடுத்த வருடத்திலிருந்தே சம்பள அதிகரிப்பை வழங்க முடியும். அது குறித்து நாம் அவர்களுக்கு தெரியப்படுத்தியிருக்கிறோம். அதேபோல் ஏனைய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக் குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் 3,000 – 17,000 வரையிலான சம்பள அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதேபோல் இவ்வருடத்திலும் 10 000 ரூபா சம்பள அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 13,000 – 27,000 வரையில் ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதனால் ஏனைய அரச ஊழியர்கள் குறித்தும் ஆலோசிக்க வேண்டும்.

இவ்வேளையிலும் தமிழ், முஸ்லிம் பாடசாலைகள் இயங்குகின்றன. எவ்வாறாயினும் சம்பள விடயம் தொடர்பில் அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கிறது. அதன்படி 2025 ஆம் ஆண்டிலிருந்து அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கான சரியான முறைமையொன்றை செயற்படுத்த எதிர்பார்க்கிறோம். இது குறித்து ஆராய்வதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

கண்டி அபிவிருத்தி திட்டத்துக்கமைய நிர்வாக நகரத்தை குண்டசாலைக்கு கொண்டுச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். இந்திய IIT பல்கலைக்கழகத்தினை கண்டியிலும் ஸ்தாபிக்க பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறோம். பேராதனை பல்கலைக்கழகத்திற்கு புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும். இவற்றுக்கு மத்தியில் அஸ்வெசும, உறுமய திட்டங்கள் ஊடாக மக்களுக்கும் நிவாரணங்களை வழங்குகிறோம்." என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதனையடுத்து அஸ்கிரிய பீடத்தில் மகாநாயக்க வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவரிடமும் சிறிது நேரம் கலந்தாலோசித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"பாரம்பரிய அரசியல் பிரிவினைகளுக்கு அமைய செயற்படுவதன் மூலம் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. அரசியல் ரீதியாக பிரிந்து செயற்பட்டிருந்தால் இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுத்திருக்க முடியாது. நாட்டை தற்போதைய நிலைக்கு கொண்டு வர பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகளையும் சேர்ந்தவர்கள் எமக்கு ஆதரவளித்தனர்.

மேலும் எதிர்க்கட்சியிலும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். முழு பாராளுமன்றமும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டிருந்தால், ஒரு நாடாக நாம் சிறந்த பெறுபேறுகளை அடைந்திருக்க முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் இணையுமாறு பாராளுமன்றத்தில் உள்ள அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். இன்று உலக அரசியல் மாறிக்கொண்டிருக்கிறது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ள முக்கிய கட்சிகள் பிளவடைந்துள்ளன. எனவே, இலங்கையின் பிரதான கட்சிகள் பிளவுபட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கான ஒப்பந்தத்தை எட்டியுள்ளோம். ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஒரு கிராமத்தில் நான்குக்கும் மேற்பட்ட அரச அதிகாரிகள் இருந்தாலும், பொருளாதாரத்தில் அவர்களின் பங்களிப்பு பெரிதாக இல்லை. தெங்கு தொடர்பான நிறுவனம் இருந்த போதிலும், இலங்கையின் தெங்கு உற்பத்தி குறைந்துதான் செல்கிறது. ஆனால், கேரளாவில் தெங்கு உற்பத்தி அதிகரித்து வருகிறது.

அவர்கள் வேகமாக ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி நகர்கின்றனர். எமது மகாவலி வலய அலுவலகங்கள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் இயங்கினாலும் மகாவலி வலயமானது ஒரு ஹெக்டேயருக்கு மூன்று மெற்றிக்தொன் விளைச்சலையே பெறுகிறது.

50 வருடங்களில் பெருந்தோட்டக் கைத்தொழில் மூலம் இந்தியா, சீனா போன்ற நாடுகள் பெரும் பொருளாதார நன்மைகளை அடைந்துள்ளன. வெள்ளையர் காலத்தில் தேயிலை, தெங்கு, இறப்பர் பொருளாதாரம் காணப்பட்டது. அதன் பின்னர் 1977 களில் திறந்த பொருளாதாரத்துடன் உருவாக்கப்பட்ட ஆடை உற்பத்தித் துறை இல்லையென்றால் நாட்டின் பொருளாதாரம் இன்னும் சரிவடைந்திருக்கும்.

கடலாதெனிய , லங்காதிலக மற்றும் அம்பக்கே விகாரைகளை இணைந்து சுற்றுலா வலயமொன்றை உருவாக்கவுள்ளோம். இதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பௌத்த நாகரீக நிலையத்தை உருவாக்கி பெருமளவிலான சுற்றுலாப் பயணிகளை இந்த கண்டி பிரதேசத்திற்கு வரவழைக்க எதிர்பார்த்துள்ளோம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா மாளிகை, உடவத்த கெலே வனப்பூங்கா மற்றும் விக்டோரியா அணைக்கட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கண்டியிலும் சில நாட்களை கழிப்பர்.

கண்டி நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் போகம்பர சிறைச்சாலை அமைந்துள்ள பகுதியை ஹோட்டல் வளாகமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நகரின் நிர்வாகப் பணிகளை குண்டசாலைக்கு மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளது. திகன பிரதேசத்தில் தொழிநுட்ப வலயமொன்றை அமைப்பதன் ஊடாக இப்பிரதேசத்தில் தொழில்நுட்ப மேம்பாட்டை ஏற்படுத்த முடியும். கண்டி கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையின் கொழும்பு முதல் மீரிகம வரையிலான பகுதியை சீனாவின் உதவியோடும், குருநாகலிலிருந்து கண்டி வரையிலான பகுதியை ஜப்பானின் உதவியுடன் நிறைவு செய்வது குறித்தும் தற்போது ஆலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும், நவீன விவசாயத்தை கிராமத்துக்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க உங்களுடைய ஆதரவை தேவைப்படுகிறது.

அனைத்து அதிபர், ஆசிரியரும்...

நடவடிக்கைகளில் 5,664 ஆசிரியர்கள் அங்கு கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இவ்வாறு அரசாங்கத்தின் நிதியில் இயங்கும் 57 தனியார் பாடசாலைகளில் அரசாங்கத்தின் நிதியை பெற்றுக் கொள்ளாத அங்கீகரிக்கப்பட்ட 38 தனியார் பாடசாலைகள் மாணவருக்கு கற்பிப்பதில் எந்த பிரச்சினையும் கிடையாது.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக பாதிக்கப்படும் மாணவர்கள் முறையான உணவு, ஒழுங்கான உடையின்றி நான்கு சுவர்கள் கொண்ட வீடுகளில் வசிக்கும் மாணவர்களே.

தமக்கென்று ஒரு வீடில்லாமல் கஷ்டப்படும் நிலையில் தனது வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரே வழி கல்வி மட்டுமே என கருதும் சாதாரண மக்களின் பிள்ளைகள் தான் அரசாங்க பாடசாலையில் கல்வி கற்கின்றனர்.

அரசாங்கத்துக்கு வரி செலுத்தும் மக்களின் வரிப்பணம் மூலமே ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. அந்த வகையில் உச்ச அளவில் அந்த நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்கின்றது. கடந்த 2023 ஆம் ஆண்டு அனைத்து வழிகளிலும் திறைசேரிக்கு கிடைத்துள்ள முழுமையான வருமானம் 3,048 பில்லியன் ரூபா மட்டுமே.

அதேவேளை, அரசாங்க ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், அஸ்வெசும கொடுப்பனவு,பெற்றுக் கொண்டுள்ள கடன்களுக்கான வட்டியை மீள செலுத்துதல் மற்றும் மீண்டு வரும் செலவினம் ஆகியவற்றுக்காக 4,700 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு அனைத்து வழிகளிலும் 3,048 பில்லியன் ரூபா கிடைத்துள்ளதுடன், அரசாங்கம் அன்றாடம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு கடந்த வருடத்தில் 4,700 பில்லியனை செலவிட்டுள்ளது.

அன்றாடம் செலவு செய்வதற்கு அரசாங்கம் கடன் பெற வேண்டிய நிலையே காணப்படுகிறது. அதற்காக அரசாங்கம் 1,748 பில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த தகவல்கள் கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அது பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதில் எவற்றையும் தவிர்க்க முடியாது. முறைகேடுகள் இடம்பெறவும் கமிசன் பெறவும் இதில் வழியில்லை. கடந்த நான்கு தசாப்தங்களில் எந்த அரசாங்கத்துக்கும் இது தவிர்க்க முடியாத நிலையில்

மீண்டுவரும் செலவினத்தை நிவர்த்தி செய்வதற்கு போதிய வருமானம் இல்லாமையால் அனைத்து அரசாங்கங்களும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பெருமளவு கடன்களைப் பெற்றுக் கொண்டுள்ளன. இப்போதும் வரவு செலவுத் திட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே.

இறுதி கடன் வழங்கும் நிறுவனமான சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள கடன் ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் தான் இம்முறை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு மூச்சு விடக் கூடிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

லலித் வீரதுங்க, அஜித் கப்ராலுக்கு...

விசாரித்த கோட்டை நீதவான் வழங்கிய தீர்ப்பிற்கு எதிரான திருத்தக் கோரிக்கையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க நேற்று (27) நிராகரித்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 182ஆவது பிரிவின் பிரகாரம் சாட்சியங்கள் தொடர்பாக திருப்தியடையும் சந்தர்ப்பத்தில் நீதவான் அழைப்பாணை அனுப்ப முடியும் என சுட்டிக்காட்டிய உயர்நீதிமன்ற நீதிபதி, அதற்கான விசேட விடயங்களை முன்வைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். முன்வைக்கப்பட்ட சாட்சியங்கள் திருப்தியடையாத பட்சத்தில் விடுக்கப்பட்ட அழைப்பாணையை மீளப்பெறும் அதிகாரம் நீதவானுக்கு உண்டு என சுட்டிக்காட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி, அதற்கமைவாக கோட்டை நீதவான் செயற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நீதவானின் உத்தரவு தொடர்பான முறைப்பாடு திருப்தியளிக்கவில்லை என்றால், அதனை மேன்முறையீடு செய்து மறுசீரமைப்பு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும் என உயர் நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டினார். எனவே, மனுவினால் கோரப்பட்ட திருத்தப்பட்ட கோரிக்கையை ஏற்க முடியாது என உயர்நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க உத்தரவிட்டிருந்தார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோருக்கு எதிராக 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136 (1) இன் கீழ் நுகேகொட நாளந்தராமாதிபதி தினியாவல பாலித தேரர் கோட்டை நீதவான் நீதிமன்றில் மனுவொன்றை தைக்கல் செய்தார்.

இருதரப்பு கடன் மறுசீரமைப்பை...

இவ்விடயத்தில் ஜப்பான். சீனா. இந்தியா ஆகிய நாடுகளுக்கு நன்றியை தெரிவித்துள்ளதுடன் வீழ்ச்சி கண்ட நாட்டின் பொருளாதார குழியிலிருந்து இலங்கையை மீட்க, இவர்கள் வழங்கிய ஒத்துழைப்பை தமது ஐக்கிய மக்கள் சக்தி பாராட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.

கதிர்காமம் யாத்திரை காட்டுப்பாதை திறப்பு...

கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலின் பின்னர் ஜுன் (30) காலை ஆறு மணிக்கு காட்டுப்பாதையின் வாயிற்கதவுகளை திறப்பதற்கு தயாராகுமாறு அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்ட செயலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

தேங்காய் எண்ணெய் விலையை...

முன்வைக்கவுள்ளதாகம் அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் வருடாந்த தேங்காய் எண்ணெய் தேவை 25,868 மெற்றிக் தொன் என, தெங்கு அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. ஆனால், தற்போது 51,457 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் கிடைப்பதாக சபை குறிப்பிட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அரச ஊழியர் சம்பளப் பிரச்சினை...

இதனைத் தெரிவித்தார். அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:

தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் ஒருபோதும் அரசியலமைப்புக்கு புறம்பாக செயற்படாது.

எஹலியகொட, கெட்டஹெத்த...

பகுதியில் நேற்று காலை முதல் மண் சரிவு அபாயத்தின் அறிகுறிகள் காணப்பட்டன. இதனால் அப்பகுதியிலிருந்து 43 குடும்பங்களை பாதுகாப்பான இடத்துக்கு மாற்றப்பட்டனர். தற்போது சித்தார்த்த வித்தியாலயத்தில் அவர்கள் தங்கவைக்கப் பட்டுள்ளதுடன் அவர்களுக்கு தேவையான உதவிகளுக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

உலக காலநிலை மாற்றம் குறித்து...

ஆலோசகர் ருவன் விஜயவர்தன தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

சுற்றாடல் பாதுகாப்பு குறித்து நீண்ட காலமாக பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு வருகின்ற போதிலும், காலநிலை மாற்றம் குறித்த அவதானம் குறைந்த மட்டத்திலேயே காணப்படுவதாக ருவன் விஜயவர்தன ஊடகவியலாளர்களிடம் வலியுறுத்தினார்.

இரும்பு, உலோக கழிவுகள்...

உபகரணங்கள் மற்றும் தாமிரம், பித்தளை, அலுமீனியம், சீன சட்டி, வெள்ளை இரும்பு, ஹைகார்பன் போன்ற பொருட்கள் மற்றும் இவைகள் சார்ந்த கழிவுப்பொருட்கள் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யப்படுவதால் இழக்கப்படும் வெளிநாட்டுச்செலாவணி குறித்து அமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், அவர் இதனைத் தெரிவித்தார்.

முட்டை, பால்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

நாட்டின் சோளத் தேவை ஆறு இலட்சம் மெற்றிக் தொன்களாக உள்ளன.

இந்நிலையில்,2023 பெரும் போகத்தில் சோள விளைச்சல் 2,21,249 மெற்றிக்தொன்னாக அதிகரித்தது.

முட்டை உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். இதன்படி, அடுத்த இரண்டு மாதங்களில் 160 இளைஞர் விவசாயத் தொழில் முனைவோர் கிராமங்களில் உள்ள தொழில்முனைவோருக்கு 1,60,000 கோழிக் குஞ்சுகள் வழங்கப்படும்.

இன்றைய பலன்கள்

(28.06.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

மேஷம்:
சொல்லு தொழில் செய்பவர்கள் புதிய வாடிக்கையாளர்களின் அவசர வேலையை ஒப்புக்கொண்டு சிரமப்பட நேரிடும்.

ரிஷபம் :
சொந்தத் தொழிலில் வேலைபளு அதிகரித்து ஓய்வின்றி பணியாற்றுவீர்கள். கூட்டுத் தொழில் வியாபாரம் சுமாராக நடைபெறும்.

மிதுனம்:
கூட்டுத் தொழிலில் விலைவாசி ஏற்ற இறக்கம் காரணமாக எதிர்பார்த்த அளவுக்கு லாபம் இருக்காது. குடும்பத்தில் இடையிடையே தேவையற்ற வார்த்தைகளால் தொல்லைகளை சந்திக்க நேரலாம்.

கடகம்:
சிறிய வேலைக்கு கூட நீங்கள் பெரிய முயற்சி எடுக்க வேண்டிய சூழல் உருவாகும். குடும்பத்தில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும்.

சிம்மம்:
உயர் அதிகாரிகளை அனுசரித்து செல்லாவிட்டால் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்களின் வரவினால் வேலைப்பளு அதிகரிக்கும்.

கன்னி:
எவ்வளவு முயற்சித்தாலும் பணிகளின் சுமை கூடிக் கொண்டே செல்லும். சொந்த தொழில் செய்பவருக்கு எதிர்பாராத திருப்பம் உண்டு.

துலாம்:
கூட்டுத்தொழில் செய்பவருக்கு சரியான நேரத்தில் தேவைப்படும் மூலப் பொருட்கள் கிடைக்காமல் போகலாம். குடும்பத்தில் அவ்வப்போது சிறு சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும்.

விருச்சிகம்:
கூட்டுத் தொழில் வியாபாரம் சிறப்பாக நடைபெறும். குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை காணப்படும். உறவினர் வருகையால் செலவுகள் அதிகரிக்கும்.

தனுசு:
வாடிக்கையாளர் ஒருவர் மூலம் புதிய நபர்களின் அறிமுகமும் அதனால் ஆதாயமும் உண்டாகும். கூட்டுத் தொழில் வியாபாரம் சிறப்பாக நடைபெறும்.

மகரம்:
பெண்கள் நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல நிகழ்ச்சி கூடி வருவதால் மனமகிழ்ச்சி அடைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும்.

கும்பம்:
வாடிக்கையாளர்களுக்கு செய்து கொடுத்த பணிகளால் பாராட்டுக்களும் குவியும். கூட்டுத் தொழில் வியாபாரம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் காணப்படும்.

மீனம்:
உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். சம்பள உயர்வும் இடமாற்றமும் திருப்தியை தரலாம்.

கொழும்பு மாவட்ட... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

எதிர்காலத்தில் மீண்டும் இதுபோன்ற வெள்ள நிலைமை ஏற்படாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்களை விரைவாக தயாரிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

நுவரெலியா பஸ் நிலையம்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதேவேளை நுவரெலியா பொது மலசல கூடத்தின் பகுதியில் புதன் கிழமை (26) மாலை மற்றுமொரு நபர் திடீரென சுகவீனமடைந்து மயங்கி வீழ்ந்துள்ளார்.

உடனடியாக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது, வைத்தியசாலைக்கு கொண்டு வரும் வழியிலேயே இந்நபர் உயிரிழந்தார். உயிரிழந்தவர் இலக்கம் 06 பள்ளிவாசல் வீதி ருவான்எளியவை சேர்ந்த மொஹமட் இம்தியாஸ் பாசில் (வயது 72) என அடையாளம் காணப்பட்டுள்ளார். நுவரெலியாவில் வெவ்வேறு தினங்களில் இடம்பெற்றுள்ள இவ்விரண்டு உயிரிழப்பு சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வீதி விபத்து மரணங்கள்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர். விபத்துக்களால் நாட்டில் வருடாந்தம் மொத்தமாக 12,000 பேர் உயிரிழக்கின்றனர். அவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் வீதி விபத்துக்களாலேயே மரணிக்கின்றனர்.

அந்த வகையில் நாட்டில் தினமும் 07 அல்லது 08 பேர் விபத்துக்களில் உயிரிழக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் செலுத்துநர்கள் மற்றும் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து பயணிப்பவர்களாகும். குறிப்பாக எமது நாட்டைப் பொறுத்தவரை இளைஞர் சமூகத்தினர் 1828 வயதுக்கு இடைப்பட்டவர்கள் இளம் வயதிலேயே, இது போன்ற விபத்துக்களால் வாழ்க்கையை இழக்கின்றனர். அந்த வகையில் கடந்த ஆண்டு 2,310 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீல.சு. க தொடர்பான... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கண்டி ஈ.எல்.சேனாநாயக்கா சிறுவர் வாசிக சாலையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின், பிரதேச தலைவர்களுடனான கூட்டத்திலே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கா மற்றும் கண்டி மாவட்ட தமிழ் அமைப்பாளர் எம். தீபன் உட்பட பலர் இதில் கலந்துகொண்டனர். அங்கு அவர் மேலும் தெரிக்கையில்

தற்போது என்மீது பல தடை உத்தரவுகள் நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளன . அவற்றைப் பயன்படுத்தி ஒரு சில உறுப்பினர்கள் கட்சியை பிளவுபடுத்த முயற்சிக்கின்றனர்.

ஆனால் நடப்பது அதுவல்ல. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றி பெற்று ஜனாதிபதியாவேன். அதன் பிறகு அரசியலமைப்பின்படி சகல வழக்குகளில் இருந்தும் நான் விடுதலை ஆவேன். அப்போது கட்சியின் உட்பூசல்கள் அனைத்தும் இயல்பாகவே மறைந்து விடும். கட்சித் தலைமை தொடர்பாக எந்தப் பிரச்சினையும் அதன் பின்னர் ஏற்படாது. தற்போது கட்சியின் தலைவர்கள் என கூறி பதவிகளை வகிப்பவர்களால் கண்டிக்கு வர முடியாதுள்ளது. எமது அணியில் உள்ளவர்கள் சிறப்பாக செயல்படுகின்றனர். 10 முதல் 12 பேர் மட்டுமே கட்சியை காட்டிக் கொடுக்க முயற்சிக்கின்றனர்.

அப்படியானவர்கள் தேர்தல் காலங்களில் மாறி, மாறி வெவ்வேறு சின்னங்களில் போட்டியிடுகின்றனர். நாற்காலி, வெற்றிலை, அன்னம், மொட்டு இப்படியாக கடந்த பத்தாண்டுகளின் சின்னங்களை மாற்றி மாற்றி ஆதரித்தனர். இந்தத் தேர்தலுக்குப் பிறகு இவ்வாறானவர்களுக்கு கட்சியில் இடமில்லை. நாம் அடுத்த தேர்தலின் பிறகு கட்சியை சீரமைத்து புதிய சின்னத்தை அறிமுகப்படுத்துவோம்” என்றார்.

முன்னாள் ஜனாதிபதி... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

சீனாவில் தங்கியிருக்கும் காலத்தில் சீன ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அந்நாட்டின் வெளி விவகார அமைச்சர் உள்ளிட்ட முக்கிய உயர் மட்ட அதிகாரிகளையும் சந்தித்து அவர்,பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இலங்கைக்கான கடன் மறு சீரமைப்பு நடவடிக்கைகளில் சீனாவின் எக்சிம் வங்கி வழங்கியுள்ள உதவி மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான எதிர்கால திட்டங்கள் தொடர்பிலும் இதன் போது முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கின் உதயம்

வடக்கு பொறியியலாளர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி :

பொறியியலாளர்களின் ஒன்றிணைவு வடமாகாணத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றும்

யாழ்.விசேட நிருபர்

இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் வடக்கின் அத்தியாயம் வருடந்தோறும் வடக்குப் பொறியியலாளர்களுக்கு இடையில் நடாத்தும் கிரிக்கெட் திருவிழாவான Northern Engineers Premier League யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 150 பொறியியலாளர்களை உள்ளடக்கி 08 அணிகள் உருவாக்கப்பட்டு இந்த கிரிக்கெட் சுற்று போட்டி நடைபெறவிருக்கிறது.

சுற்றுப்போட்டிக்கான வெற்றிக்கிண்ண அறிமுகம், அணிகளின் சீருடை அறிமுகம் மற்றும் இலட்சனை அறிமுகம் ஆகியவை நேற்றைய தினம் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது.

அணிகளுக்கிடையிலான 08 பந்து பரிமாற்றங்களை கொண்ட கிரிக்கெட் சுற்று போட்டி, எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானம் மற்றும் மட்டுவில் மகா வித்தியாலய மைதானம் ஆகியவற்றில் காலை 08 மணி முதல் நடைபெறுவதோடு, இறுதிப் போட்டி மாலை 03.30 மணியளவில் வளர்மதி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பொறியியலாளர்களின் ஒன்றிணைவு வடமாகாணத்தின் வளர்ச்சிக்கு மிகப் பெரும் பங்காற்றும் என்கிற தூர நோக்கோடும் IESLVC இன் செயற்பாடுகளை ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் செயற்படுத்தவும் வழிவகுக்கும் என்கிற நம்பிக்கையோடும் சமூக ரீதியான செயல்களுக்கும் விழிப்புணர்வுக்கும் பங்களிப்பு மிகப் பெரியதாகவும் பலமானதாகவும் அமையுமென்கின்ற அடிப்படையிலும் இந்நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

பொறியியற் துறையில் இயங்குகின்ற சில நிறுவனங்கள் இந்த நிகழ்வுக்கு நிதி அனுசரணை வழங்கி இருக்கின்றன.

இறுதிப் போட்டியில், மருத்துவத்துறை, சட்டத்துறை உள்ளிட்ட பிற துறை சார்ந்தவர்களை விருந்தினர்களாக அழைக்கவும் எண்ணியுள்ளோம். எதிர்காலத்தில் எமது பொறியியலாளர்கள் அணி, பிற துறை சார் அணிகளுடனும் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளோம். பொறியியலாளர்களை உள்ளடக்கி, கடினபந்து அணி ஒன்றினையும் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

ஒவ்வொரு பொறியியலாளனின் அசைவும் சொல்லும் செயலும் ஒரு பொறியை தட்ட வேண்டும். அந்தப்பொறி மிகப்பெரிய சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். NEPL மூலமும் ஒரு பொறியை தட்டுகிறோம்.

இந்நிகழ்வை பார்ப்பதற்கும் ரசிப்பதற்கும் பாராட்டுவதற்கும் உற்சாகமூட்டுவதற்கும் எம்மோடும் எம் செயற்பாடுகளோடும் வரவேற்றுநிற்கின்றோம். கைகோர்த்துக்கொள்ளவும் என மேலும் தெரிவித்துள்ளனர்.

நாதஸ்வர வித்துவான் கலாநிதி பஞ்சாபிகேசனுக்கு சாவகச்சேரி இந்துவில் நூற்றாண்டு விழா



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் 2010 ஆம் ஆண்டில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்ட நாதஸ்வர வித்துவான் எம். பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா எதிர்வரும் (01/07) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில்; மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மூத்த நாதஸ்வர தவில் வித்துவான்கள் பங்குகொள்ளும் இசைக்கச்சேரி, நாதஸ்வரம் பற்றிய சிறப்பு கட்டுரைகளை உள்ளடக்கிய எம். பஞ்சாபிகேசன் என்ற சிறப்பு மலர் வெளியீடு, பஞ்சாபிகேசன் குறித்து சான்றோர் ஆற்றும் உரைகள், மூத்த நாதஸ்வர தவில் கலைஞர்களுக்கான பஞ்சாபிகேசன் நினைவுத் தங்கப் பதக்கம் வழங்கல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கலாநிதி பஞ்சாபிகேசன் 91 ஆண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்தவர் என்பதுவும் தனது 85 ஆவது வயது வரை நாதஸ்வர இசைக்கச்சேரிகள் செய்த மூத்த கலைஞர் என்பதுவும் குறிப்பிடத்தக்கன.

பொது வேட்பாளரை நிறுத்துவது மக்களையும், அவர்களுக்கான அபிவிருத்திகளையும் பின்னுக்கு கொண்டு செல்லும் ஒரு செயற்பாடு

திலீபன் எம்.பி

வவுனியா விசேட நிருபர்

பொது வேட்பாளரை நிறுத்துவது மக்களையும், அவர்களுக்கான அபிவிருத்திகளையும் பின்னுக்கு கொண்டு செல்லும் ஒரு செயற்பாடு என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் (26/06) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் பேரம் பேசும் சக்தியாக மாறவேண்டும் எனில் யார் ஜனாதிபதியாக வரப் போகிறாரோ அல்லது அந்தப் போட்டியில் யார் முன்னிலையில் உள்ளாரோ அவருடன் தான் பேரம் பேச முடியும். சம்பந்தமில்லாதவருக்கு ஆதரவு அளிப்பது எமக்குத் தான் இழப்பு.

ரணில் விக்கிரமசிங்க, சஜித், அனுர ஆகியோர் தான் இந்த போட்டியில் உள்ளனர். அவர்களுடன் பேசி அல்லது அதில் வெல்லக் கூடியவருடன் பேசித் தான் நாம் எமக்கானவற்றை பெற வேண்டும். அதை விடுத்து பொது வேட்பாளர் என்பது தேவையற்ற விடயம்.

பொது வேட்பாளர் என ஒருவரை நிறுத்துவது எமது மக்களையும், அவர்களது அபிவிருத்தியையும் இன்னும் பின்னுக்கு கொண்டும் செல்லும் ஒரு செயற்பாடு எனத் தெரிவித்தார்.

நாய்க்கடிக்கு இலக்கான கிளிநொச்சி சிறுமி வைத்தியசாலையில் உயிரிழப்பு

யாழ்.விசேட நிருபர்

விசர்நாய்க் கடிக்கு இலக்கான நான்கு வயது சிறுமியொருவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி குமாரசாமிபுரம் பகுதியை சேர்ந்த நான்கு வயதான சிறுமி விசர்நாய்க் கடிக்கு இலக்கான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் புதன்கிழமை உயிரிழந்துள்ளார்.

அறிவித்தல்

மாகாண அரச சேவை ஆணைக்குழு - தென் மாகாணம்

தென் மாகாண விவசாய திணைக்களத்தில் மேலதிக மாகாண விவசாயப் பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு செய்தல்

தென் மாகாண சபையின் மாகாண விவசாய திணைக்களத்தில் மேலதிக மாகாண விவசாய பணிப்பாளர் பதவிக்கு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான அனைத்து விவரங்களும் மாதிரி விண்ணப்பங்களும் தென் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் (www.psc.sp.gov.lk) வெளியிடப்பட்டுள்ளன. அதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி 2024.07.12 ஆகும்.

செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக்குழு,
தென்மாகாணம்.

நெடுந்தீவு மக்கள் சட்ட உதவிகளைப் பெற பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்கின்றனர்

சாவகச்சேரி விசேட நிருபர்

சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையமானது நெடுந்தீவுப் பிரதேச செயலகத்துடன் இணைந்து கடந்த (26/06) புதன்கிழமை நெடுந்தீவில் இலவச நடமாடும் சேவை மற்றும் இலவச சட்ட ஆலோசனை முகாம் சேவைகளை முன்னெடுத்திருந்தது. நெடுந்தீவுப் பிரதேச செயலர் திருமதி நிவேதிகா கேதீசன் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்வுகளில் சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையத்தின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான திருமதி அம்பிகா சிறிதரன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கான இலவச சட்ட ஆலோசனைகளை வழங்கியிருந்தார்.

நெடுந்தீவுப் பிரதேச மக்கள் தமக்கான சட்ட உதவிகளைப் பெற பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர் எனத் தெரிவித்த அவர், நலன்புரி சேவைகள் உள்ளிட்ட அரச சலுகைககளைப் பெற தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்கள் அவசியமானவையாகக் காணப்படுகின்றன. அதனைவிட வழக்கு உள்ளிட்ட தேவைகளுக்கும் ஆவணங்கள் அவசியமானவையாக காணப்படுகின்றன. அந்த வகையிலேயே எமது நிலையத்தால் நெடுந்தீவு பிரதேசத்தில் இலவச நடமாடும் சேவை மற்றும் சட்ட ஆலோசனை முகாம் ஆகியன முன்னெடுக்கப்படுகின்றன. ஏனைய பிரதேச மக்கள் இலகுவாக பெறக்கூடிய சேவைகளைக் கூட தீவக மக்கள் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே பெற முடிகிறது. குறிப்பாக சட்ட உதவிகளைப் பெற பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். ஒரு சட்டத்தரணியை அணுகுவது கூட நெடுந்தீவு மக்களுக்கு சவால் நிறைந்த ஒன்று. நீதிமன்றத்தை நாடுவதென்றால் கூட தீவக மக்கள் ஊர்காவற்துறைக்கே செல்ல வேண்டும். நெடுந்தீவில் சுற்றுலா நீதிமன்றம் உள்ள போதிலும் அது மாதத்திற்கு ஒரு தடவையே நடக்கின்றது. இதனால் மக்கள் நீதியைப் பெற போராட வேண்டிய தேவை உள்ளது. இவற்றை கருத்திற் கொண்டே சட்டத்திற்கும் மனித உரிமைகளுக்குமான நிலையம் நெடுந்தீவில் இலவச சட்ட ஆலோசனை முகாமை ஏற்பாடு செய்ததுடன் தேவையுள்ள மக்களுக்கு இலவசமாக வழக்குத்தாக்கல் செய்யவும் தயாராக உள்ளது என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

வவுனியா – பண்டாரிகுளம் பிரதான வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைப்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியா பண்டாரிகுளம் பிரதான வீதி புனரமைப்பு பணிகள் நேற்றுமுன்தினம் (26/06) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீண்ட காலமாக புனரமைக்கப்படாத குறித்த வீதி ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ காலத்தில் புனரமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வு இடம்பெற்று இருந்த போதிலும், குறித்த பணிகள் ஆரம்பிக்கப்படாமல் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் வவுனியா அபிவிருத்தி குழு தலைவரும், வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் 30.3 மில்லியன் ரூபாய் செலவில் குறித்த வீதி காபர்ட் வீதியாக 1.9 கிலோ மீற்றர் தூரத்திற்கு புனரமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, வேலைகள் தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் பயன்படுத்தும் குறித்த வீதி செப்பனிடப்படாமை தொடர்பில் பொதுமக்கள் விமர்சனம் செய்து வந்த நிலையிலேயே இப்பணிகள் பாராளுமன்ற உறுப்பினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன் 2024.06.26 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5516 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.34,769,656.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 1 1 2 9 9 5

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 91
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 2 9 9 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3758 — சீட்டிழுப்பு திகதி 2024.06.26 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.62,812,549.16
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 28 32 68 72 — விசேட எழுத்து X — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 60266

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1864 — 2024.06.26 — 97080 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.436,897,158.00
ஆங்கில எழுத்து N — சுப்பர் இலக்கம் 18 — வெற்றி இலக்கங்கள் 03 11 33 41
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.06.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0342
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 1 8 9 4 6 0 — L7 எழுத்து W
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 31,799,614.88

ராசி சுப பலன் — திகதி 2024.06.26 — சீட்டிழுப்பு இலக்கம் 825 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,504,203.96
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 02 17 48 56 — தனயோக இலக்கம் 64267 — நாளுக்கான விதி எண் 15

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1546 — 2024.06.26 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 98,199,948.56
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 16 20 31 72 — விசேட எழுத்து C — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 43254

The Trusted Market place for Buying & Selling

adz.lk it's what you want

It's Simple & Fast
POST YOUR AD
1. Visit www.adz.lk
2. Log In/ Register
3. Select Category
4. Enter Details
5. Upload Photos
6. Pay
7. Publish

Visit www.adz.lk

WE ACCEPT

Contact Us:-
011 2 429 369 | 077 7 270 067
077 7 270 845 | adzsuo@lakehouse.lk

கிழக்கின் குரல்

மக்களுக்கான அபிவிருத்திகளை செய்ய வேண்டிய தேவை உள்ளது

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

"நாம் 2008ஆம் ஆண்டுக்கு பின்னர் அபிவிருத்தி திட்டங்களை மெல்ல, மெல்ல மேற்கொண்டு வருகின்றோம். ஆனாலும் எமது மாவட்டத்தின் தொழில்துறை, உற்பத்தி இன்னமும் வளர்ச்சி அடையாமல் அடிமட்டத்திலேயே உள்ளது. எனவே மக்களுக்கு தேவையான அபிவிருத்தி பணிகளை மிகவும் நுட்பமாக செய்துவர வேண்டிய தேவை உள்ளது" என, கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார். கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக களுவாஞ்சிக்குடியில் மூடப்பட்டிருந்த பழைய நீதிமன்ற வீதியை கடந்த செவ்வாய்கிழமை இராஜாங்க அமைச்சர் திறந்து வைத்து, புனரமைப்பு வேலையை ஆரம்பித்து வைத்தார். மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"நாம் வரலாற்றில் கடந்து வந்த கற்றுக்கொண்ட பாடங்களை வைத்துக் கொண்டு மக்களுக்கு தேவையான விடயங்கள் என்ன? எதனை அவர்களுக்கு செய்ய வேண்டும் என்பதுக்கமைய எமது கட்சி செயற்பட்டு வருகின்றது.

நாம் பட்டிருப்பில் ஒசுசல, களுவாஞ்சிக்குடி சந்தியில் சிக்னல் லைட், உள்ளிட்ட பல விடயங்களை மிக விரைவில் மேற்கொள்ளவுள்ளோம். மேலும் பேரும் புகழுடனும் ஒரு நகரமாக களுவாஞ்சிக்குடி நகரை மாற்றுவதே எமது நோக்கம். அதற்கு மக்கள் தலைவர்களை இங்கிருந்தே தெரிவு செய்ய வேண்டும். எமது கட்சியிடம் பொருளாதாரத்தை மேம்படுத்தும் 80 வீதமான திட்டங்கள் உள்ளன" எனத் தெரிவித்தார்.

காணி ஆவணங்கள் பெறும் நடமாடும் சேவை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

உறுமய வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பின் காத்தான்குடி பிரதேசத்தில் காணி ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கானநடமாடும் சேவை நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உதயசிறீதரின் வழிகாட்டலின் கீழ் காத்தான்குடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சில்மியா தலைமையில் காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இந்நடமாடும் சேவை நடைபெற்றது. இதன்போது காணி ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனையை பொதுமக்களுக்கு காத்தான்குடி பிரதேச செயலக காணிப்பிரிவு அதிகாரிகள் வழங்கினர். அத்துடன் உறுமய வேலைத் திட்டம் தொடர்பாகவும் பொது மக்களுக்கு உரிய அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

வாசிகசாலை திறப்பு; புத்தக அன்பளிப்புக்கு வேண்டுகோள்

கல்முனை விசேட, சாய்ந்தமருது விசேட நிருபர்கள்

அம்பாறையின் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் மிக விரைவில் வாசிகசாலை திறந்து வைக்கப்படவுள்ளதுடன், இவ்வாசிகசாலைக்கு புத்தகங்களை அன்பளிப்பு செய்ய முடியுமெனவும், அந்நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம். நிம்ஸான் தெரிவித்தார்.

வாசிகசாலை திறப்புக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இவ்வாறு அமைக்கப்படவுள்ள வாசிகசாலையை கலாசார மத்திய நிலைய மாணவர்களுடன் பாடசாலை மாணவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகளாகிய சகல தரப்பினரும் பயன்படுத்த முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான ஒக்டோபர் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே' எனும் கருத்திட்டத்துக்கமைய கலாசார மத்திய நிலையங்களின் வாசிகசாலைகளை மேம்படுத்த இலங்கை தேசிய நூலகம் திட்டமிட்டுள்ளது. அந்த வகையில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்திலும் வாசிகசாலை திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இதற்காக புத்தக சேகரிப்புகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் புத்தகங்களை அன்பளிப்பு செய்ய விரும்புவோர் 077 758 0663 எனும் அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியுமென்பதுடன், மேற்படி நிலைய பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், பொலிவேரியன் கிராமம், சாய்ந்தமருது 16 எனும் முகவரிக்கு புத்தகங்களை அனுப்பி வைக்க முடியுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

தாந்தாமலை ஸ்ரீமுருகன் கோயில் திருவிழா

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

கிழக்கில் சின்ன கதிர்காமம் என்று அழைக்கப்படும் வரலாற்று பிரசித்தி பெற்ற தாந்தாமலை அருள்மிகு ஸ்ரீமுருகன் கோயிலின் வருடாந்த மஹோற்சவ திருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் தாந்தாமலை ஸ்ரீ முருகன் கோயிலுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (30) மட்டக்களப்பு, தாமரைக்கேணி மகமாரியம்மன் கோயில் பரிபாலன சபையினர் கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நடைபெறும். அன்றிரவு கோயிலில் கிரியை வழிபாடுகள் நடைபெறும்.

முதலாம் திகதி காலை 8.00 மணிக்கு கொடியேற்றத்தை தொடர்ந்து 20 தினங்கள் திருவிழா நடைபெறும். எதிர்வரும் 22ஆம் திகதி காலை 6.00 மணிக்கு சுபமுகூர்த்த வேளையில் தீர்த்தோற்சவத்துடன் திருவிழா இனிதே நிறைவு பெறுமென, மேற்படி கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர், தாந்தாமலை ஸ்ரீமுருகன் கோயில்களின் பிரதம குரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்தமூர்த்தி குருக்கள், கோயில் பிரதம குரு சிவஸ்ரீ பு.நவரூபன் குருக்கள், உதவி குரு சிவஸ்ரீ சி.சதா குருக்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் திருவிழா நடைபெறும்.

திருவிழாக் காலத்தில் அடியார்களின் நன்மை கருதி மேற்படி கோயிலுக்கான விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன், தாந்தாமலை ஸ்ரீமுருகன் அன்னதான சபையினரால் அன்னதானமும் வழங்கப்படும்.

மதுபானசாலைக்கு எதிர்ப்பு; 15 பேருக்கு விளக்கமறியல்

தம்பலகாமம் குறூப் நிருபர்

திருகோணமலையின் மூதூர், இருதயபுரம் பிரதேசத்தில் மதுபானசாலை திறக்கப்பட்டதை அடுத்து அதில் அமைதியின்மையை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 15 பேரை எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மூதூர் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆஜர்படுத்திய போதே இந்த விளக்கமறியல் உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

மூதூர், இருதயபுரத்தில் திறக்கப்பட்ட மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 15 பேரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

அனுமதியின்றி ஒன்றுகூடியமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸாரை தாக்கியமை போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இச்சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.

திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத கோயில் உற்சவம்; ஜூலை 18இல்!

காரைதீவு குறூப் நிருபர்

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 18ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

உற்சவம் தொடர்பான ஏற்பாடுகளை தீர்மானிப்பதற்கான கூட்டம், திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் முன்னிலையிலும் மேற்படி கோயில் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையிலும் கோயில் முன்றலில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி தீர்த்தோற்சவமும் மறுநாள் பூங்காவன திருவிழாவும் இதன் மறுநாள் வயிரவர் பூஜையுடன் உற்சவம் இனிதே நிறைவடையவுள்ளது.

கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் முன்னிலையிலும் கோயில் குரு சிவஸ்ரீ அங்குசநாத குருக்கள் தலைமையிலும் உற்சவம் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் வட்டார பிரதிநிதிகள், உபயகாரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். உற்சவத்துக்கான உபயகாரர்கள் முதல் சகல செயற்பாடுகளுக்கான தீர்மானங்களும் இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்டவுள்ளதாக, கோயில் பரிபாலன சபை செயலாளர் கே.செல்வராசா தெரிவித்தார்.

ஸ்மார்ட் கிராம அபிவிருத்தி; சிரமதான இயக்கம் ஆரம்பம்

கிண்ணியா தினகரன், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்

ஸ்மார்ட் கிராம அபிவிருத்தி தொடர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பசுமையான, சுத்தமான கிராமம் எனும் கருப்பொருளுக்கமைய திருகோணமலையின் புல்மோட்டை பிரதேசத்தில் சிரமதான இயக்கம் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டு, சிரமதான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது புல்மோட்டை, பட்டிக்குடா பிரதான வீதியின் இரு மருங்குகளிலும் வீசப்பட்டிருந்த குப்பைகளை அகற்றி துப்புரவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இச்சிரமதானத்தின் அடுத்த நடவடிக்கையாக பயன்தரும் மரக் கன்றுகள் நடப்பட்டதுடன், 'சுத்தம் பேணுவோம், குப்பைகளை வீசாது இருப்போம்' எனும் அறிவித்தல் பலகையும் இடப்பட்டது.

பசுமையான, சுத்தமான, நோயற்ற பிரதேசம் எனும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இச்சிரமதான இயக்கத்தின் செயற்பாடுகளில் அனைவரும் இணைந்து சேவை செய்யவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒத்துழைப்பை பிரதேச சபையின் சார்பாக வழங்குவதாக அதன் செயலாளர் உறுதியளித்தார். சுகாதார அதிகாரி மற்றும் அலுவலக ஊழியர்களின் பங்களிப்பை வழங்குவதுடன், மாணவர்கள் உள்ளிட்டோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த தான் தயாராகவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்நடவடிக்கையில் சுகாதார வைத்திய அதிகாரி, வருமான பரிசோதகர், பட்டிக்குடா கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், முஸ்லிம் எய்ட் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர், திட்ட இணைப்பாளர்கள், பொதுமக்களாகிய பலரும் பங்கேற்றனர்.

பனையிலிருந்து விழுந்த சிறுவனின் வயிற்றிலிருந்து 02 அடி நீள தடி மீட்பு

கல்முனை வடக்கு வைத்தியசாலையில் வெற்றிகரமாக சத்திரசிகிச்சை

பெரியநீலாவணை விசேட நிருபர்



நுங்கு பறிப்பதற்கு பனை மரத்தில் ஏறி தவறி விழுந்து உயிருக்கு போராடிய 18 வயதுச் சிறுவன் ஒருவனை வெற்றிகரமான சத்திரசிகிச்சை மூலம் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் காப்பாற்றியுள்ளனர்.

கல்முனை, நாவிதன்வெளியைச் சேர்ந்த இந்தச் சிறுவன் நுங்கு பறிப்பதற்கு பனை மரத்தில் ஏறிய போது தவறி விழுந்துள்ளான். இதன்போது கிளிசரியா மரக்கம்பு சிறுவனின் குதம் வழியாக குத்திச் சென்று, சலப்பை, ஈரல், நுரையீரல், பிரிமென்தகடு உட்பட உடலின் முக்கிய 15 பாகங்களை கிழித்துச் சென்று, மார்பக பக்கமாக அக்கம்பு வெளியில் தெரிந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான்.

இந்நிலையில் பிரபல சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் டொக்டர் ஏ.டபுள்யூ.எம்.சமீம் தலைமையிலான வைத்திய குழுவினர், பல மணிநேரமாக மேற்கொண்ட சத்திரசிகிச்சைக்கு பின் சிறுவனை காப்பாற்றியுள்ளனர். சிறுவனின் வயிற்றுப் பகுதியிலிருந்து குத்திய இரண்டடி நீளமுடைய தடியை வைத்தியர்கள் வெற்றிகரமாக அகற்றியுள்ளனர். தற்போது இச்சிறுவன் எவ்வித ஆபத்துமின்றி இருப்பதுடன், வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருவதாக, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இந்த சத்திரசிகிச்சையை வெற்றிகரமாக செய்ய தன்னுடன் ஒத்துழைத்து பணியாற்றிய வைத்திய குழுவினருக்கு டொக்டர் ஏ. டபிள்யூ.எம்.சமீம் நன்றி தெரிவித்துள்ளார்.

மூதூரில் சிறுவர் பராமரிப்பு மாற்றீட்டு திட்டம்

தோப்பூர் தினகரன் நிருபர்

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் சிறுவர்கள் அனுமதிக்கப்படுவதை தடுத்து, அவர்களின் குடும்பங்களுடன் வாழ்வதற்கான மாற்றீட்டு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம் திருகோணமலையின் மூதூர் பிரதேச செயலகப் பிரிவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட மூன்று குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம் முபாறக் நேற்று வியாழக்கிழமை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் பி.அறபாத், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.அலாவுதீன், CERI நிறுவன இணைப்பாளர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'இரகசியங்களால் ஆன ஒற்றைவரிக்கோடு' நூல் வெளியீடு

வாச்சிக்குடா விசேட நிருபர்

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் ரெட்ணம் சுவாகர் எழுதிய 'இரகசியங்களால் ஆன ஒற்றைவரிக்கோடு' எனும் நூல் வெளியீட்டு விழா அப்பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.ஜெகராஜன் பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் கௌரவ அதிதியாகவும் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் விசேட அதிதியாக கலந்து கொண்டனர்.

நூல் விமர்சன உரையை தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் கலாநிதி க.ரகுவரன் மற்றும் இலக்கிய செயற்பாட்டாளர் றியாஸ் குரானாவும் வழங்கினர்.

தலைமை உரையை பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் வழங்கினார். நூலின் முதல் பிரதியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து ஏனைய அதிதிகளுக்கு சிறப்பு பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது ஆசிரியை ஜகதாரணியின் நெறியாள்கையின் கீழ் நடைபெற்ற வரவேற்பு நடனம் அனைவரது பாராட்டையும் பெற்றுக்கொண்டது.

அட்டாளைச்சேனை

கல்வியற் கல்லூரிக்கு 275 புதிய பயிலுநர்கள்

ஒலுவில் விசேட நிருபர்

அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரிக்கு 2024/2025ஆம் கல்வியாண்டுக்கு புதிய பயிலுநர்கள் 275 பேர் அனுமதிக்கப்படவுள்ளதாக, அட்டாளைச்சேனை தேசிய கல்வி கல்லூரி பீடாதிபதி கே.புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

இந்நிலையில் 2021, 2022ஆம் ஆண்டுகளுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுக்கமைய புதிய பயிலுநர் மாணவர்கள் இணைக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

ஆரம்பநெறி, கணிதம், இஸ்லாம், விஞ்ஞானம், வர்த்தகம், கணக்கீடு, விசேட கல்வி ஆகியவற்றுக்கு பயிலுநர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இணையவழியூடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு, தெரிவுகள் நடைபெற்று அனுமதிக்கான புதிய பயிலுநர்களின் எண்ணிக்கை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

புதிய பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சை தற்போது நடைபெறுகிறது. இட வசதி பற்றாக்குறையாக காணப்படுவதால், ஒவ்வொரு கற்கைக்கும் அனுமதிக்கப்படும் பயிலுநர்களின் எண்ணிக்கை பின்னர் தீர்மானிக்கப்படுமெனவும், அவர் மேலும் கூறினார்.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின்

74 ஆவது தேசிய மாநாடும் வருடாந்த பொதுக் கூட்டமும்

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 74 ஆவது தேசிய மாநாடும் பொதுக் கூட்டமும் நாளை நடைபெறும். இதுதொடர்பில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

வை. எம். எம். ஏ. பேரவையின் தேசியத் தலைவர் இஹ்சான் ஏ. ஹமீட்

கேள்வி : நாளை நடைபெறும் வை. எம் எம். ஏ. பேரவையின் வருடாந்த பொதுக் கூட்டமும் மாநாட்டுக்குமான ஒழுங்குகள் எவ்வாறு உள்ளன?

பதில் : அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் 74 ஆவது தேசிய மாநாடும் வருடாந்த பொதுக் கூட்டமும் இலங்கை மன்றக் கல்லூரியில் நாளை சனிக்கிழமை 29 ஆம் திகதி பி. ப. 2.00 மணிக்கு நடைபெறும்.

நாளை காலை 9.00 மணிக்கு வை. எம். எம். ஏ. பேரவை கேட்போர் கூடத்தில் அனைத்துக் கிளைகளின் உறுப்பினர்களும் கலந்து கொள்ளும் மத்திய குழுக் கூட்டம் நடைபெறும். மத்திய குழுதான் திட்டமிடல் பிரதான குழு. இதில் நாடளாவிய ரீதியில் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். இது இவ்வருடத்தின் இரண்டாவது

துருக்கி உயர்ஸ்தானிகர் செமிஹ் லூட்பு டெகுத்

மத்திய குழுக் கூட்டமாகும். நாளை சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும் இக்கூட்டம் நடைபெறும்.

இம்முறை இந்நாட்டிலுள்ள புதிய கிளைகளும் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. இதில் நாடளாவிய ரீதியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள புதிய கிளை உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேவேளையில் முஸ்லிம் இளைஞர்கள் டிஜிட்டல் உலகிற்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றி அறிவூட்டல் அவசியமாகும். அதேவேளை பொருளாதார நெருக்கடியான காலகட்டத்தில் இம்மண்ணின் வளமான வாழ்வுக்காக அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் தொழில்வாய்ப்புகளுக்காக வெளிநாடுகள் சென்று தம்மையே உரமாக்கி, சொந்த பந்தங்களை இழந்த நிலையில், துயரமான வாழ்க்கைப் போராட்டத்துடன் வாழ்ந்து வரும் இந்த முஸ்லிம் இளைஞர்களின் சேவை நலன் குறித்து, இலங்கையின் பல மட்டங்களிலும் குறிப்பாக தேசிய அரசியல் மட்டங்களில் குரல் ஒலிப்புவதில்லை. வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கை முஸ்லிம் இளைஞர்களின் அவல நிலையை போக்க, அகில இலங்கை வை. எம். எம்.ஏ. பேரவை அவர்களோடு தோளோடு தோள் நிற்கிறது என்று கூறினாலும் அது மிகையாகாது.

"நாட்டுக்காக எமது முஸ்லிம் இளைஞர்கள்

செய்யும் தியாகம்" என்ற தொனிப் பொருளில் எமது தேசிய மாநாடு முக்கியத்துவம் பெறுகின்றது. இந்தச் செய்தி இந்நாட்டிலுள்ள சகல சிங்கள, தமிழ் கிறிஸ்தவ மக்கள் மத்தியிலும் கொண்டு செல்லப்படுதல் வேண்டும் என்பது எம்முடைய எதிர்பார்ப்பு ஆகும்.

கேள்வி : அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் ஸ்தாபகர் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக சகாய நிதியத்தை ஆரம்பித்து செயற்பட்டவர். முஸ்லிம் மாணவர்களுடைய கல்வி வளர்ச்சிக்காக புலமைப் பரிசில் நிதி உதவி வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் சமகாலத்தில் கலாநிதி ஏ.

இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தின் தவிசாளர் சட்டத்தரணி எல். தி. பி. தெஹிதெனிய

எம். ஏ. அஸீஸின் கல்விச் சிந்தனைகள், செயற்பாடுகள் உங்கள் அமைப்பின் மூலம் எந்தளவு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன என்பது பற்றிக் கூற முடியுமா?

பதில் : இலங்கை கல்விச் சகாய நிதியம் 1945இல் அஸீஸினால் ஸ்தாபிக்கப்பட்டது. அஸீஸ் கல்முனையில் உதவி அரசாங்க அதிபராக இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட செயற்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னால் நீதியரசர் ஏ.டபிள்யூ.ஏ.சலாம்

திட்டங்களில் உச்ச நிலையை அடைந்த ஓர் செயற்திட்டம் என்று கூறமுடியும். 1942 இல் முஸ்லிம் முன்னேற்றச் சங்கம் என்ற சங்கத்தை உருவாக்கி கல்விச் சகாய நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. முஸ்லிம் கல்விச் சகாய நிதியத்தின் தலைவராகவும் பொருளாளராகவும் அஸீஸ் இருந்தார். இது முதலில் பொதுவாக கல்முனை முஸ்லிம்களின் கல்வித் தேவையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆயினும் அஸீஸின் கொழும்புக்கான இடமாற்றத்தின் விளைவாக இச்சங்க நடவடிக்கை இடையில் தடைப்பட்டது. 1945இல் அது மீளவும் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இது நாடு பூராகவும் சேவையை நோக்காகக் கொண்ட அடிப்படையில் இயங்கத் தொடங்கியது. வறுமையினாலும் கல்வியறிவின்மையினாலும் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கும் சமுதாயத்துக்கு நிதியுதவியுடன் கூடிய கல்வி வாய்ப்புகளை வழங்குவதன் ஊடாகவே தர முயர்த்த முடியும் என்ற எண்ணப்பாங்கு அஸீஸிடம் இருந்தது. அந்த மனோ நிலையில் தான் என்னுடைய காலத்திலும் இயன்றவரையிலும் கல்விக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் எமது அமைப்பு வறிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில் நிதி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. க. பொ. த உயர்தரம் கல்வி பயிலும் மாணவர்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தேர்வுகள் நிறைவடைந்துள்ளன. முதல் கட்டமாக 40 மாணவர்களுக்கு வெகு விரைவில் இந்தப் புலமைப் பரிசில் நிதி உதவிகள் வழங்கப்படவுள்ளன. அது மட்டுமல்ல, வருடந்தோறும் கல்வி மேம்பாட்டுக்காக பங்காற்றுகின்ற சிறந்த கிளைகளைத் தெரிவுசெய்து, இஹ்சான் ஏ. ஹமீட் என்ற எனது பெயரில் விசேட பரிசினை வழங்கத் திட்டமிட்டுள்ளேன்.

குறிப்பாக, மாத்தளை மாவட்டத்தில் நிககொல்ல வை. எம். எம். ஏ. போன்ற கிளை அமைப்புகள் அப்பிரதேசத்தின் கல்வி மேம்பாட்டுக்காக பாரிய பங்களிப்பை செய்து வருகின்றன. ஏனைய பகுதிகளிலும் அங்காங்கே கல்வி எழுச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இருப்பினும் எதிர்காலத்தில் இதில் மேலும் கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

கேள்வி : இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யார் கலந்து கொள்ளவுள்ளார்?

பதில் : இந்நிகழ்வில் பிரதம அதிதியாக துருக்கி உயர்ஸ்தானிகராலயத்தின் உயர்ஸ்தானிகர் செமிஹ் லூட்பு டெகுத்தும், கௌரவ அதிதியாக இலங்கை மனித உரிமைகள் ஆணையகத்தின் தவிசாளர் சட்டத்தரணி எல். தி. பி. தெஹிதெனியவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது நாடளாவிய ரீதியில் சிறந்த முறையில் திறமைகளை வெளிக்காட்டிய கிளைச் சங்கங்களுக்கான பரிசில்கள் வழங்குதல், தேசியமட்டத்தில் வருடாந்தம் வழங்கப்படும் விசேட ஆளுமை விருது வழங்குதல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கேள்வி : ஒவ்வொரு தேசிய மாநாட்டிலும் சமூகத்திற்கும் நாட்டுக்கும் பணி செய்த தனிநபர் அல்லது அமைப்பு தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்படுவது வழக்கம். அந்த வகையில் இம்முறை யாருக்கு ஆளுமை விருதும், விசேட விருதும் வழங்கப்படவுள்ளன என்பது பற்றி சுருக்கமாகக் கூற முடியுமா?


சிட்டிகார்டன் நிறுவனத்தின் பணிப்பாளர் ஹில்ரு சித்தீக்

பதில் : மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக கடமையாற்றிய நீதியரசர் ஏ.டபிள்யூ.ஏ.சலாம் ஆளுமை விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

1975 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்தரணியாக சித்தியடைந்த நீதியரசர் சலாம், 1976 முதல் 1981 வரை காலி, கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் சிவில் சட்டத் துறையில் பணியாற்றினார்.

அவர் 1982 இல் நீதிச் சேவைகளில் இணைந்தார், மேலும் 1989 வரை நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாஜிஸ்திரேட்டாக பணியாற்றினார். 1989 முதல் 1999 வரை நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாவட்ட நீதிபதியாக பணியாற்றினார். 1998 – 99 காலப்பகுதியில் கொழும்பு மாவட்ட நீதிபதியாக பதவி வகித்தார். மற்றும் 1999 இல் நீதித்துறை சேவை ஆணையத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டார். அங்கு அவர் 2002 வரை பணியாற்றினார்.

ஏப்ரல் 2002இல் உயர் நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்டார் மற்றும் 2003 முதல் 2006 வரை கொழும்பு வணிக உயர் நீதிமன்றத்திற்கு தலைமை தாங்கினார். மார்ச் 2006இல் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்டார். இத்தகைய சிறந்த ஆளுமைப் பண்புகளைக் கொண்ட நீதியரசர் ஏ.டபிள்யூ.ஏ. சலாம், ஆளுமை விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மனித குலத்திற்குச் சேவை செய்வதே மனநிறைவைத் தரும் என்ற வகையில் மனித நேயப் பணியாற்றி வருகின்ற சிட்டிகார்டன் நிறுவனத்தின் பணிப்பாளர் ஹில்ரு சித்தீக் விசேட விருது வழங்கி நாளை கௌரவிக்கப்படவுள்ளார்.

இலங்கையின் கிழக்கில் (1979) கேர் இன்டர் நேசனலில் பணியாற்றியவர் கம்போடிய எல்லையில் 13 ஆண்டுகளுக்கும் மேலாக (1981–1993) ஐக்கிய நாடுகளின் எல்லை நிவாரண நடவடிக்கைகள் மூலம் மனிதாபிமான நிவாரணப் பணிகளை மேற்கொண்டவர். சோமாலியாவில் 1994/95 இல் 1 வருடத்திற்கான மனித மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்தவர். 'கருணைக்கான மரம்' மற்றும் 'உயிர்வாழ்வதற்கான நீர்'. பல நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுடன் இணைந்து இந்தத் திட்டங்களின் கீழ் செயல்பாடுகளை மேற்கொண்டு வருபவர் அவர்.

கார்ப்பரேட் சமூகப் பொறுப்பு மற்றும் முஸ்லிம் சமூகப் பொறுப்பு ஆகியவற்றை முன்னோக்கி எடுத்துச் செல்ல பணியாற்றி வருகின்றவர் ஆவார்.

கேள்வி : அகில இலங்கை வை.எம்.எம்.ஏ மாநாட்டின் 74 ஆவது வருடாந்த மாநாட்டைக் கொண்டாடும் இன்றைய தினத்தில் நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில் : எனது இரு வருட நிர்வாக காலத்தில் செயற்படுவதற்கு பங்காற்றிய நமது முன்னாள் தேசியத் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் உறுப்பினர்கள், நிரந்தர உறுப்பினர்கள், சிறப்பு உறுப்பினர்கள், மாவட்டப் பணிப்பாளர்கள் மற்றும் வை.எம்.எம்.ஏ கிளை உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. எனது பதவிக்காலத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற அங்கத்தவர்களுடைய பங்களிப்பும் அர்ப்பணிப்பும் அளப்பரியது. அந்த ஒத்துழைப்பினால்தான் எமது நிறுவனத்தினை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடிந்தது என்று கூறலாம்.

கேள்வி : உங்களுடைய கால கட்டத்தில் நீங்கள் முன்னெடுத்த வேலைத் திட்டம் பற்றிக் கூறுவீர்களா?

பதில் : நான் தலைவராக பதவியேற்ற இரண்டு வருட காலப்பகுதியில், பலதரப்பட்ட செயற்திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளேன்.

என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளில், குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றகரமான நடவடிக்கைளை அடைந்துள்ளோம். எமது அமைப்பிலிருந்து தெரிவு செய்யப்படும் அடுத்து வரும் தலைவர்களும் தங்கு தடையின்றி தொடர்ந்து பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான வேலைத் திட்டங்களை மேற்கொண்டுள்ளேன் என்று கூறலாம்.

தேசிய மட்டத்தில் முஸ்லிம் இளைஞர் களை உருவாக்குதல் மற்றும் இளைஞர்கள் மூலம் சமூக மாற்றங்களை ஏற்படுத்தல் போன்ற பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

பலமான சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தை கட்டியெழுப்புதல் மற்றும் முஸ்லிம் இளைஞர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிகள் வழங்குதல் போன்ற பல்வேறுபட்ட செயற்பணிகளில் ஈடுபட்டுள்ளோம்.

எனது தலைமைத்துவத்தின் கீழ் கடைசி இரண்டு ஆண்டுகளும் நடைபெற்ற தொண்டுப் பணிகள் எனும் போது,

O/L மற்றும்A/L வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவச பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகளை வழங்குவதில் உ/த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டங்களினூடாக நிதியுதவி வழங்குதல், அவர்கள் பல்கலைக்கழகத்தில் நுழைய நாடு தழுவிய அளவில் பயிற்சிகள் வழங்குதல், முன்பள்ளி மற்றும் அஹதியா (ஞாயிறு பள்ளி) நிகழ்ச்சிகளை நடத்துதல், என பல சேவைகளைச் செய்துள்ளோம். அவை யாவும் வெற்றிகரமானதாகவும் சமூகத்திற்கு பயனுள்ளதாகவும் அமைந்துள்ளன.

பிற சமூகங்களுக்கு ஆதரவளித்தல். விதவைத் தாய்மாரின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் நிதியுதவிகள் வழங்குதல், விதவைகளுக்கு மாதாந்த நிதி உதவித்தொகை வழங்குதல், அல்லது மானியங்கள் என்பனவற்றை வழங்குதல், அவர்களின் அடிப்படை வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அவர்களுடைய திறன்களை மேம்படுத்தவும் பயிற்சி வழங்குதல். பொருளாதார ரீதியில் அவர்களை வலுவூட்டல் போன்ற அனைத்து வகையிலான ஊக்குவிப்புக்களையும் வழங்கி வந்துள்ளோம்.

புனித ரமழான் மாதத்தில் சகல வை. எம். எம். ஏ.கிளைகள் மூலம் உலர் உணவுப் பொதிகள் விநியோகித்தல், முஸ்லிம் சமூகத்தைப் பாதிக்கும் பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்துதல், இவை தவிர கிரிக்கெட், கால்பந்து மற்றும் உள்ளரங்க விளையாட்டுகள் உள்ளிட்ட வை.எம்.எம்.ஏ கிளைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளை ஏற்பாடு செய்து பரிசில்கள் வழங்குதல், இளம் தொழில்வல்லுநர்களால் புத்தாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு திட்டங்கள் மற்றும் சமூக ஊடக பிரசாரங்களை நாடளாவிய ரீதியில் நடத்துதல், அதேபோன்று சமூகநல ஆலோசனை, உடல்நலம், போதை ஒழிப்பு விழிப்புணர்வூட்டல்கள், புகையிலை மற்றும் எச்.ஐ.வி தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள், மருத்துவ முகாம்கள், பரிசோதனை நிகழ்ச்சிகள், கண்புரை சிகிச்சை முகாம்கள் மற்றும் நாடளாவிய ரீதியில் இரத்ததான முகாம்கள் நடத்துதல் அரசு நிறுவனங்களுடன் இணைந்து வை.எம்.எம்.ஏ கிளைகள் மூலம் போதைப்பொருள் ஒழிப்பு , மது மற்றும் புகையிலை எதிர்ப்பு விழிப்புணர்வு, வை.எம்.எம்.ஏ கிளைகள் மூலம் பாடசாலைகள் மற்றும் சமூகத்தில் அதிகளவு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என்பனவற்றை நடத்தியுள்ளோம். இந்த வெற்றிக்கு பங்களித்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வை. எம். எம். ஏ. பேரவையின் ஸ்தாபகர் கலாநிதி ஏ. எம். ஏ. அஸீஸ்

அதேவேளையில் மர்ஹூம், கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் மற்றும் லஃபிர் காசிம் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு எமது செயற் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு உந்து சக்தியாக இருந்து வரும் நன்கொடையாளர்கள் அனைவருக்கும் எனது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நம் நாட்டின் நலனுக்காக தொடர்ந்து நம்மை அர்ப்பணித்துச் செயற்படுவோம்.

எமது அங்கத்தவர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்புகளுக்காக அல்லாஹ் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டும் என்பதோடு இன்னும் இந்த அமைப்பு பெரும் உயர் இலக்குகளை அடைய இறைவன் நல்லருள் புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கேள்வி : இறுதியாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?

பதில் : இலங்கையிலுள்ள எல்லா சமூகத்தினரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்கின்ற சிந்தனையை கலாநிதி ஏ. எம். அஸீஸ் தீவிரமாகக் கொண்டிருந்தார். புரிந்துணர்வு மற்றும் சகிப்புத்தன்மை மூலமே இது சாத்தியமாகும் என்பதை வலியுறுத்திக் கூறியிருந்தார்.

அதுவும் குறிப்பாக "நாம் இலங்கைக்கு சேவை செய்ய வேண்டும். அது எமது கலாசாரத்தை கைவிட்டுக் கொடுப்பதன் மூலமோ அல்லது அலட்சியம் செய்வதன் மூலமோ அல்ல.

மாறாக அதனைக் காப்பாற்றுவதன் மூலமும் பாதுகாப்பதன் மூலமும்தான் சாத்தியமாகும்" என்று குறிப்பிட்டிருந்தார். அந்த வகையில் முஸ்லிம் சமூகத்தின் நலனையும், நாட்டின் நலனையும் நோக்காகக் கொண்டு உண்மையுடனும் அர்ப்பணிப்புடனும் சேவையாற்றக் கூடிய நமது எதிர்கால இளம் முஸ்லிம் வாலிபர்களை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

டிஜிட்டல் உலகில் எமது முஸ்லிம் இளைஞர் சமூகம் எவ்வாறான சவால்களுக்கு முகம் கொடுக்கப் போகின்றது?. அதன் விளை பயன்களை எவ்வாறு அடைய வேண்டும் என்பதில் கூடிய கவனம் செலுத்தி அதற்கான வழிகாட்டல்களை நாம் செய்ய வேண்டியது எமது கடமையாகும். இன்றைய தேசிய மாநாடு சிறப்புறச் செயற்பட்ட முன்னாள் தலைவர்களான காலித் எம். பாரூக் நம்பிக்கையாளர் சபையின் செயலாளர் கே. என். டீன், பொதுச் செயலாளர் ஆஷிப் சுக்ரி நம்பிக்கையாளர் சபைத் தலைவர் அஷ்ரப் ரூமி, பொருளாளர் டி.டி.எம். பிர்தௌஸ் மற்றும் அனைத்து முன்னாள் தலைவர்கள், அங்கத்தவர்கள் உள்ளிட்ட இம்மாநாடு வெற்றிபெற உழைத்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேவேளையில் இந்தச் சந்தர்ப்பத்தில் வை. எம் எம். ஏ. பேரவைக்கு அறிமுகத்தைத் தந்து ஒரு தேசிய தலைவராக வருதவற்கு எனக்கு தூண்டுதலாகவும் இருந்த எனது அப்பா முன்னாள் தேசியத் தலைவர் ஏ. ஆர். ஏ. நூர் அமீனுக்கும் நான் தலைவராக இருந்த காலத்தில் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய சஹீட் எம். ரிஸ்மிக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேர்காணல் இக்பால் அலி...

பாதுகாக்கப்பட்ட புவியைப் பேணுவதற்காக அர்ப்பணிப்புடன் ஒன்றிணைவோமாக

"புவி எமது அன்னையாகும். தாயகத்திற்கு நேரிடுகின்ற எந்தவொரு நன்மையும் தீமையும் அதில் வசிக்கின்ற பிள்ளைகளுக்கும் உரித்தாகும். புவிமீது மனிதன் எச்சில் துப்புவதன் மூலமாக தன்மீதே எச்சில் துப்பிக்கொள்கிறான். நாமறிந்தவகையில் இந்த பெருநிலம் மனிதனுக்கு சொந்தமானதல்ல. எனினும் மனிதன் பெருநிலத்திற்குச் சொந்தமானவனே" எனும் கூற்றினை நான் மேற்கோள் காட்டுவதற்காக தேர்ந்தெடுத்தது செவ்விந்தியத் தலைவரான சியெட்டலின் புகழ்பெற்ற கூற்றிலிருந்தாகும். இரத்தினக்கல்லின் பெறுமதியை இரத்தினக்கல் பற்றி அறிந்தவர்களே உணர்வார்கள். அதைப்போல எதனதும் பெறுமதியை அறிந்துகொள்ள வேண்டுமாயின் அது பற்றிய அறிவு இருக்கவேண்டும். செவ்விந்தியத் தலைவர் சியெட்டல் சுற்றாடலின் பெறுமதியை அறிந்தவர் என்பதால் அதாவது, சுற்றாடல்சார் எழுத்தறிவு படைத்தவராக விளங்கியமையால் சுற்றாடல் பற்றிய சதாகாலமும் பொருந்தக்கூடிய ஒரு கூற்றினை வெளியிட்டுள்ளார்.

வேட்டைக்கார யுகம், மேய்ப்பவர் யுகம், கமக்காரர் யுகம், கைத்தொழில் யுகம் என்பவற்றைக் கடந்து நாங்கள் தகவல் தொழில்நுட்ப யுகத்தில் பிரவேசித்திருக்கிறோம். சுற்றாடல் பாதுகாப்புடன் ஒப்பிடுகையில் கைத்தொழில் யுகம் பிறந்த பின்னர் சுற்றாடலில் பாதுகாப்பு கடுமையான சவால்களுக்கு இலக்காகியதென்பதை நாங்கள் விவாதமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் பெறுபேறாக சுற்றாடலில் இருந்து மனிதனுக்கும் தாக்கங்கள் உருவாகி இருக்கின்றதை இன்றளவில் நாங்கள் உணர்ந்தவர்களாக உள்ளோம். அதனால் இறந்தகாலத்தில் நாங்கள் பின்தொடர்ந்து சென்ற அபிவிருத்தி எண்ணக்கருவினை இன்றளவில் நிலைபெறுதகு எண்ணக்கருவாக மிகவும் பொருத்தமான பாதையில் இட்டுச்செல்லக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைமையின் கீழ் இன்றளவில் நாங்கள் புரிகின்ற ஒவ்வொரு செயலின்போதும் சுற்றாடல் பற்றி சிந்திக்க நாங்கள் தூண்டப்பட்டிருக்கிறோம். அது தானாகவேயன்றி முழு உலகுமே ஒன்றாகச் சேர்ந்து சுற்றாடல் பாதுகாப்பிற்கான சட்டதிட்டங்கள், உடன்பாடுகள், சமவாயங்களை தயாரித்து செயலாற்றியதன் பின்னராகும். இந்த முயற்சியின் விளைவாக எமது நாட்டிலும் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான நிறுவனங்கள் உருவாகின. 1977 இன் பின்னர் எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதார எண்ணக்கருவுடன் பல கைத்தொழில்கள் உருவாகியமை மற்றும் இந்த கைத்தொழில்கள் மூலமாக இடம்பெறக்கூடிய சுற்றாடல் மாசுபாட்டினைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியமும் இதற்கான காரணமாக அமைந்தது. அதன்படி எமது நாட்டில் உருவாகிய பிரதானமான சுற்றாடல் ஒழுங்குபடுத்தல் நிறுவனமென்ற வகையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையை அறிமுகம் செய்யலாம்.

உன்னதமான சேவை ஒன்றின் மூலம் தூய பசுமைச் சுற்றாடல் என்ற நோக்கை முன்னிறுத்தி மத்திய சுற்றாடல் அதிகாரசபை நான்கு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலமாக இலங்கையில் இயங்கும் பிரதான சுற்றாடல் ஒழுங்குபடுத்தல் நிறுவனம் ஒன்றாக செயற்படுகிறது. சிறந்த ஒருங்கிணைப்பு, ஊக்குவிப்பு, மக்கள் பங்கேற்பு, சட்டத்தை செயற்படுத்தல், சரியான தொழில்நுட்ப தலையீடு மற்றும் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்பூட்டல் மூலம் சுற்றாடலின் தரத்தை பாதுகாக்கும் மற்றும் பராமரிக்கும் தேசத்தின் முன்னோடி என்பது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அரும்பணியாகும். 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் மூலம் 1981 ஓகஸ்ட் 12 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகாரசபை நிறுவப்பட்ட பின் அன்று தொடக்கம் இன்று வரை வரலாற்றில் இலங்கையின் சுற்றாடல் பாதுகாப்புக்காக செய்து வரும் பணிகள் அளப்பரியது. சமகால தேவைகளை கருத்திற் கொண்டு தேசிய சுற்றாடல் சட்டத்தின் திருத்தத்திற்கமைய தற்போதும் செயற்பட்டு வருவது தொடர்ந்து இலங்கை சுற்றாடல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான சட்ட ரீதியான நிலையை வலுவூட்டுவதற்கே. மேலும் தற்கால தேவை அடிப்படையில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் செயற்படுத்தப்படுகின்ற கொள்கைகள், ஒப்பந்தங்கள் மற்றும் விசேட இணக்கப்பாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தி முறைப்படுத்தப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபை செயற்பட்டு வருகிறது.

வெனுர பர்னாந்து
தலைவர்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை

பி.பீ. ஹேமந்த ஜயசிங்க
பணிப்பாளர் நாயகம்
மத்திய சுற்றாடல் அதிகார சபை மத்திய சுற்றாடல் அதிகாரசபை

ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கல் விழா

சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய பல்வேறு தோற்றப்பாடுகளின் ஊடாக செயலாற்றி வருகின்ற மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடைமுறைப்படுத்தி வருகின்ற மையப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் என்ற வகையில் "ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள்" நிகழ்ச்சித்திட்டத்தை எடுத்துக்காட்ட இயலும். சுற்றாடல் பேணலுக்காக தலைசிறந்த அரும்பணியை ஆற்றிய கைத்தொழில்கள், தொழில் முயற்சிகள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு மதிப்பளித்து அரச பாராட்டினை வழங்குதல் சுற்றாடல் நேயமுள்ள கைத்தொழில்கள், தொழில்முயற்சிகள் மற்றும் சேவைகள் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புதல் சுற்றாடல் நேயமுள்ள செயற்பாட்டின்பால் சமூகத்தை ஊக்குவித்தல் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்திக்கான மக்கள் பங்கேற்பினை கட்டியெழுப்புதல் ஆகிய நோக்கங்களை அடைகின்ற அபிலாஷையுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபை பாரிய பிரயத்தனம் செய்து "ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள்" நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. 2024 ஆம் ஆண்டு ஜூன் 05 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற "உலக சுற்றாடல் தினத்திற்கு இணையானதாக நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சித்தொடரின் ஒரு தனித்துவமான நிகழ்ச்சித்திட்டமாக இத்தடவை "ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள்" நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரலாறு

தேசிய பசுமை விருது என்று 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி 2016 ஆம் ஆண்டு தொடக்கம் "ஜனாதிபதி சுற்றாடல் விருது என்ற பெயரில் நடாத்தப்படுகின்றது. சுற்றாடல் மாசுபடுத்தலை மட்டுப்படுத்தி சுற்றாடல் பாதுகாப்பை ஏற்படுத்தக் கூடியவாறு பாராட்டுக்குரிய வகையில் தொழில்துறைகள் மற்றும் சேவைகளை நடாத்திச் செல்வதற்கு அவர்களை தூண்டுவது மற்றும் பசுமையான தூய சுற்றாடல் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிக்கும் தொழில்துறையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களை பாராட்டுக்கு உட்படுத்தும் நோக்குடன் தேசிய பசுமை விருது விழா ஆரம்பிக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை பல்வேறு சாதகமான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை சுற்றாடல் பாதுகாப்புக்காக அர்ப்பணித்திருக்கும் இந்த விருது விழா இலங்கை தொழில்துறையாளர்களுக்கு, அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், பாடசாலைகள், ஊடகவியலாளர்கள் என பல்வேறு சமூகக் குழுக்களுக்கு பெரும் கௌரவத்தை பெற்றுக்கொடுப்பதற்கு ஏதுவாக வழியமைத்துள்ளது.

போட்டிப் பிரிவுகள்

ஜனாதிபதி சுற்றாடல் விருது 2024 நிகழ்ச்சிக்காக கைத்தொழில், வியாபாரம் மற்றும் திட்டப் பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள், வெகுசன ஊடகம் மற்றும் சமூகப் பிரிவுகள் ஆகிய பிரதான இரு பிரிவுகளின் கீழ் விண்ணப்பிக்க போட்டியாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. கைத்தொழில், வியாபாரம் மற்றும் திட்டப் பிரிவின் கீழ் 16 உப பிரிவுகள் இடம்பெற்றுள்ளன.

- திண்மக் கழிவுகளை மீளப் பெறுதல் மீள்சுழற்சி அகற்றல் அல்லது முறைப்படுத்தும் தொழில்துறை
- இரசாயன உற்பத்தி தொழில்துறை
- வாகன நன்னிலைப்படுத்தல் சேவை நிலையங்கள்
- உணவு உற்பத்தி தொழில்துறை
- ஹோட்டல்
- ஆடை தயாரிப்பு தொழில்துறை
- மருந்து உற்பத்தி மற்றும் அழகுக்கலை உற்பத்தி தொழில்துறை
- மருத்துவ சிகிச்சை நிலையங்கள்
- இறப்பர் சார்ந்த உற்பத்தி தொழில்துறை
- விலங்கு பண்ணைகள்
- தைத்த ஆடைகள் உற்பத்தி தொழில்துறை
- தேயிலை தொழிற்சாலைகள்
- அச்சு செயற்பாடுகள் கொண்ட பொதியிடல் உற்பத்தி தொழில்துறை
- கனிமம் சார்ந்த உற்பத்தி தொழில்துறை
- புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி திட்டங்கள் (சிறிய அளவான நீர் மின்சார திட்டங்கள்.·. சூரிய சக்தி மின்சார திட்டங்கள்.·. காற்றாலை மின் உற்பத்தித் திட்டங்கள்)
- மாகாண சபை நிறுவனங்களின் திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டங்கள்

நிறுவனங்கள், வெகுசன ஊடகம் மற்றும் சமூகப் பிரிவின் கீழ் பாராட்டுக்கு உட்படுத்தப்படும் எட்டு உப பிரிவுகள் இடம்பெற்றுள்ளன.

- பாடசாலை
- சுற்றாடல் சார்புடைய அரச நிறுவனங்கள்
- சுற்றாடல் சார்புடைய தனியார் நிறுவனங்கள்
- சுற்றாடல் பாதுகாப்புக்காக பாரிய பங்களிப்பை வழங்கி இருக்கும் நபர்கள்
- சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளில் செயற்படுகின்ற தேசிய அளவிலான அரசு சாரா சுற்றாடல் அமைப்பு
- சுற்றாடல் சார்புடைய புதிய படைப்புகள் (பாடசாலை பல்கலைக்கழகம் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனம் தொழில் பயிற்சிப் பிரிவு)
- வெகுசன ஊடகப் பிரிவு (தனிநபர்கள் மற்றும் பத்திரிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் என்ற இரு பிரிவுகள் உள்ளன)

பாராட்டு நடவடிக்கைகள்

விருது விழாவில் பாராட்டு செயற்பாடுகள் அந்தந்த பிரிவுகள் சார்ந்த நிபுணர்களால் மேற்கொள்ளப்படுவதோடு நிபுணர்கள் குழுவின் முடிவு இறுதி முடிவாகும். ஜனாதிபதி சுற்றாடல் விருது, வெள்ளி சுற்றாடல் விருது, வெண்கல சுற்றாடல் விருது மற்றும் சிறப்புத் தகைமை விருது என விருதுகளை பெறுவதற்கு ஜனாதிபதி சுற்றாடல் விருது விழாவில் போட்டியாளர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் - 2024 நிகழ்ச்சிக்காக 2024 பெப்ரவரி 01 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 31 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்பட்டன. சகல போட்டிப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவம் செய்து 901 போட்டியாளர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தார்கள். அவர்கள் மத்தியிலிருந்து 124 போட்டியாளர்கள் விருதுகளை உரித்தாக்கிக் கொண்டனர்.

ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் சுற்றாடல் நேயமுள்ளவையாகும்

ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் - 2024 விழாவில் விருது பெறுனர்களுக்கு இத்தடவை வழங்கப்படுகின்ற தங்கம், வெள்ளி, வெண்கலம் மற்றும் சிறப்புத் தகைமை விருதுகள் ஆகிய அனைத்துமே சுற்றாடல் நேயமுள்ள மூலப்பொருட்களை பாவித்து தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த விருதுகள் மீள்சுழற்சி செய்யப்பட்ட அலுமினியம் கொள்கலன்களைப் பாவித்தே தயாரிக்கப்பட்டுள்ளன. கழிவுப்பொருட்களுக்கு மேலதிகப் பெறுமதியைச் சேர்த்து புதிய உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலமாக சுழற்சிமுறைப் பொருளாதார முறையியலில் பிரவேசித்தல், கழிவுப் பொருட்களை சேகரிப்பவர்களும் அலங்கார கைவினை உற்பத்திப் பொருட்களுக்கு மாற்று வருமான வழிவகையொன்றை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களை முதன்மையாகக் கொண்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஆலோசனையின˙பேரில் 2019 ஆம் ஆண்டில் தொடங்கிய "மெல்டிங் பொயின்ற் கருத்திட்டம்" மூலமாக இந்த விருதுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் சுற்றாடல் பாதுகாப்பினைக் காக்கும் நோக்கத்துடன் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஏற்பாடு செய்கின்ற ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் - 2024 விருது வழங்கல் விழா அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் 2024 ஜூன் மாதம் 28 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தருணத்தில் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்குர அவர்கள், சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன அவர்கள், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் சட்டத்தரணி பிரபாத் சந்திரகீர்த்தி, சீனா, எகிப்து, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, பாக்கிஸ்தான், பங்களாதேஸ், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் தூதுவர்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் திரு. வெனுர பர்னாந்து. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் திரு.ஹேமந்த ஜயசிங்கவை உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் விருதுபெறுனர்களும் போன்றே சிறப்பு அதிதிகள் பலரும் கலந்துகொள்வார்கள்.

எமது மூதாதையர்கள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மரங்கள், கற்கள் போன்ற இயற்கையை கடவுளாக வழிபட்டார்கள் என்பதை நாங்கள் அறிவோம். அதைப்போலவே இயற்கை அனர்த்தங்கள் அந்த கடவுளால் வழங்கப்படுகின்ற தண்டனைகள் என நம்பினார்கள். மறுபுறத்தில் நாங்கள் இயற்கையை பாதுகாத்தால் இயற்கையும் எம்மை பாதுகாத்திடுமென அறிந்து செயலாற்றினார்கள். அதனால் மனிதன் இயற்கைக்கு எதிராக செயலாற்றாதிருக்க ஆவனசெய்தான். எவ்வாறாயினும் விஞ்ஞானரீதியாக தொழில்நுட்பத்தன்மை எவ்வாறு இருப்பினும் சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் இடையில் நிலவிய இந்த பரஸ்பர உறவு யுகங்களைக்கடந்த ஒரு காலகட்டத்தில் சிதைவடைந்ததென்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது அந்த உறவினை மீளக்கட்டியெழுப்புகின்ற யுகமாகும். அதனால் சாதி, மத, தேச எல்லைகள் அல்லது வயது வித்தியாசமின்றி சுற்றாடல் பற்றிய புரிந்துணர்வுடன் செயலாற்றி சுற்றாடல் எழுத்தறிவினை விருத்திசெய்து சுற்றாடல் பாதுகாப்பிற்காக செயலாற்றவேண்டியது எம் அனைவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

(மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் வெனுர பெர்னாண்டோ அவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம் பீ.பி. ஹேமந்த ஜயசிங்க அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலை சார்ந்ததாக தொகுக்கப்பட்டது.)

பதிவு - ஸ்ரீயான்ஜனீ லொக்குலியன ஊடக அதிகாரி மத்திய சுற்றாடல் அதிகாரசபை

ஜனாதிபதி சுற்றாடல் விருது-2024

பாதுகாக்கப்பட்ட புவியைப் பேணுவதற்காக ஒன்றிணைவோமாக

உங்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள்

வாழ்த்துச் செய்தி

இன்று அதிகரித்து வரும் சுற்றாடல் அழிவின் காரணமாக காலநிலை மாற்றத்தின் பாதகமான விளைவுகளை அனுபவிக்கும் ஒரு நாடாக நாம் மாறிவிட்டோம். எனவே, சுற்றாடலைப் பாதுகாப்பது எமக்குத் தவிர்க்க முடியாத ஒரு பொறுப்பாக மாறியுள்ளது. மேலும் அதைப் பிற்போட முடியாது என்பதையும் நான் வலியுறுத்துகிறேன்.

இதனால் தான், இந்நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை வகுக்கும்போது, ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட போட்டிமிக்க டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குவது மட்டுமன்றி, 2050ஆம் ஆண்டாகும் போது, நிகர பூஜ்ஜிய உமிழ்வை எட்டும் பசுமைப் பொருளாதாரத்தையும் உருவாக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக சிறப்பான பணிகளைச் செய்யும் கைத்தொழில்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அரச கௌரவம் அளிக்கும் வகையில், மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் ஆண்டுந்தோறும் ஏற்பாடு செய்யப்படும் ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் விழாவை இம்முறையும் ஏற்பாடு செய்வதை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

சூழல் நேய மக்களை உருவாக்குவதோடு, சுற்றாடலைப் பாதுகாக்கும் நிலைபேறான அபிவிருத்திக்கான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது நம் அனைவரின் பொறுப்பு என்பதை நினைவுகூர்ந்து, “2024 ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் விழா” வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

ரணில் விக்கிரமசிங்க
ஜனாதிபதி
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
2024 ஜூன் 25ஆம்திகதி

கௌரவ இராஜாங்க அமைச்சரின் செய்தி

மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் இடையிலான தொடர்பு மரத்திற்கும் பட்டைக்கும் இடையில் நிலவுகின்றதைப்போன்ற பிரிக்கமுடியாத தொடர்பாகும். நீண்டகாலமாக நிலவிவிருகின்ற இந்த தொடர்பிற்கு கணிசமாக அச்சுறுத்தல் கைத்தொழில் யுகத்திலேயே தோன்றியது. அது மனிதன் தனது தேவைகளை ஈடேற்றிக்கொள்ளும்போது அறிந்தோ அறியாமலோ சுற்றாடலின் நடத்தைப்பாங்கு அல்லது அவசியப்பாட்டினைக் கருத்திற்கொள்ளாமல் விட்டமையாலேயே என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். திறந்த பொருளாதாரம் அறிமுகம் செய்யப்பட்டதும் பலதரப்பட்ட கைத்தொழில்கள் எமது நாட்டிலும் தொடங்கப்பட்டன. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு கைத்தொழில்கள் அத்தியாவசியமான காரணியாகும். எந்தவொரு கைத்தொழிலையும் மேற்கொள்ளும்போது சுற்றாடல் மீது ஓரளவுக்கேனும் தாக்கம் ஏற்படும். எனினும் அந்த தாக்கத்தை குறைக்கக்கூடிய முறையியல்கள் இன்றளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நாங்கள் ஒரு கைத்தொழிலை மேற்கொண்டு வரும்போது நேர்மையாக அந்த முறையியல்களை பாவித்தல் மூலமாக இடம்பெறக்கூடிய சுற்றாடல் சேதத்தைக் குறைத்துக்கொள்ளலாம். அது சுற்றாடல் பேணலுக்கு மாபெரும் துண்டுதலாக அமையும்.

ஒரு குழுவென்ற வகையில் மாத்திரமன்றி தனித்தனியாகவும் எம்மால் சுற்றாடல் பேணல் பணிக்காக பங்களிப்புச்செய்ய முடியும். நிகழ்காலத்தில் முழு உலகுமே காலநிலை மாற்றங்கள் பற்றிய அதிக கவனத்தைச் செலுத்தி வருகின்றது. நாங்களும் 2016 ஆம் ஆண்டில் காலநிலை மாற்றங்கள் பற்றிய பெரிஸ் சமவாயத்தில் கைச்சாத்திட்டிருக்கிறோம். இத்தகைய தனித்துவமான தருணத்தில் அது பற்றியும் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும். பொருத்தமான இடத்தில் மரமொன்றை நடுகைசெய்யவும் அந்த மரம் சுயாதீனமாக வளரும்வரை அதனைப் பாதுகாத்துக் கொள்ளவும் செயலாற்றி இலங்கையின் தாவரப் போர்வையை அதிகரிப்பதன் மூலமாக காலநிலை மாற்றங்களை குறைப்பதற்காக எம்மால் ஒத்துழைக்க முடியும். அது மாத்திரமன்றி சுற்றாடல் பேணலுக்கு தடையேற்படுத்துகின்ற மற்றுமொரு விடயமான பொலித்தின் பிளாஸ்ரிக் பாவனையை குறைப்பதைப் போன்றே அது சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமாக எம்மனைவராலும் சுற்றாடல் பேணலின் தரப்பினராக எளிதில் மாறமுடியும்.

எமது நாட்டின் பிரதான சுற்றாடல் ஒழுங்குறுத்தல் நிறுவனமென்றவகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டு சுற்றாடல் பேணல் பணியை முறைப்படி ஈடேற்றுவதற்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கி வருகின்றது. மற்றுமொரு படிமுறையாக பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவம்செய்து செயலாற்றிவருகின்ற கைத்தொழிலதிபர்கள் போன்றே சுற்றாடல் தொடர்பில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்ற வெகுசன ஊடகங்களை உள்ளிட்ட பல்வேறு துறைகளை பாராட்டுதலுக்கு இலக்காக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது மெச்சத்தக்கதாகும். அதன் மூலமாக அவர்களை சுற்றாடல் பேணுகையின்பால் இயல்பாகவே வழிப்படுத்துதல் இடம்பெறும் என்பதைக் குறிப்பிடவேண்டும். இது சம்பந்தமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு எந்த துறையைப் பிரதிநிதித்துவம் செய்தாலும் சுற்றாடல் பேணல் பணிக்காக ஆக்கமுறையான பங்களிப்பினை நல்கி **ஜனாதிபதி** விருது வழங்கல் வைபவத்திற்காக விண்ணப்பித்த அத்துடன் வெற்றிபெற்ற அனைவருக்கும் எனது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜானக்க வக்கும்புர
சுற்றாடல் இராஜாங்க அமைச்சர

கௌரவ சுற்றாடல் இராஜாங்க அமைச்சரின் வாழ்த்துச் செய்தி

சுற்றாடல் விருது வழங்கல் நிகழ்வில் வெற்றிபெற்ற அனைவருக்கும் எனது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

கௌரவ சுற்றாடல்
இராஜாங்க அமைச்சர்
சதாசிவம்
வியாழேந்திரன்

விருது வழங்கல் விழா அதிமேதகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் 2024 ஜூன் மாதம் 28 ஆம் திகதி மு.ப.10.00 மணி முதல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

சுற்றாடல் அமைச்சு செயலாளரின் செய்தி

சுற்றாடல் அமைச்சு என்றவகையில் நாங்கள் சுற்றாடலுடன் தொடர்புடைய அரச கொள்கை வகுத்தலிலும் அமுலாக்கலிலும் ஈடுபட்டுள்ளோம். சுற்றாடல் சிக்கல்கள் ஒரு நாட்டுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது அல்ல. எல்லைகளைக் கடந்து முழு உலகத்திற்கும் பலவிதமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. இதனால் நாங்களும் சர்வதேச உடன்பாடுகள், சமவாயங்களுடன் அமைந்தொழுகி செயலாற்றவேண்டியது மிகமுக்கியமானதாகும். இவ்விதமாக நாங்கள் கைச்சாத்திட்ட பெரிஸ் சமவாயத்திற்கிணங்க 2030 ஆம் ஆண்டளவில் அடைந்திருக்கவேண்டிய பல இலக்குகள் இருக்கின்றன. விவசாயம், மின்சக்தி மற்றும் வலுச்சக்தி, காடு பேணல், கழிவுப்பொருள் முகாமைத்துவம், போக்குவரத்து மற்றும் கைத்தொழில் ஆகிய ஆறு துறைகளில் பிரதானமாக காபன் உமிழ்வினை உள்ளிட்டதாக காலநிலை மாற்றங்களில் தாக்கம் ஏற்படுத்துகின்ற செயல்களைக் கட்டுப்படுத்த இதன்போது இணக்கம் காணப்பட்டுள்ளது. அண்மையில் நாங்கள் நிறைவேற்றிக்கொண்ட பசுமை பகிரங்க பெறுகை (Green Public Procurement) எனப்படுகின்ற முறையியலை எமது நாட்டுக்கு ஏற்ற முறையியலாக அறிமுகம் செய்ய முடியும். இத்தகைய எந்த முறையியலை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தாலும் நாட்டில் தொழில்முனைவோர் அல்லது கைத்தொழிலதிபர்களின் பங்களிப்பு அத்தியாவசியமானதாகும். அதன்போது சுற்றாடல் நேயமுள்ளவகையில் தமது கைத்தொழில்களை நெறிப்படுத்தவேண்டியது மிகவும் முக்கியமானதாகும். எமது நாட்டின் முதன்மைச் சுற்றாடல் ஒழுங்குறுத்தல் நிறுவனமென்றவகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் நேயமுள்ளவகையில் கைத்தொழில்களை பேணிவருவதற்காக பல்வேறு சட்டம்சார்ந்த செயற்பாங்குகளை அமுலாக்கி வருவதோடு ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் வைபவம் போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்கி தொழில்முனைவோரை சுற்றாடல் நேயமுள்ள கைத்தொழிலாக்கத்தின் பால் ஊக்குவிப்பதற்காக மேற்கொள்கின்ற முயற்சி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். மறுபுறத்தில் இத்தகைய விருது வழங்கி கௌரவிக்கப்படுதல் காரணமாக தமது வர்த்தகப் பெயரில் சேர்க்கப்படுகின்ற நற்பெயர் தொழில்முனைவோரின் தொழில்முயற்சி முன்னேற்றத்திற்கும் காரணமாக அமைகின்றது. மேலும், சுற்றாடல் பேணல் பணியின்போது அரச நிறுவனங்களால் மாத்திரம் தனித்து இந்த பணியை மேற்கொள்ள முடியாதென்பதொடு தனியார் துறையின் ஒத்துழைப்பானது முதலீடுகளை மேற்கொள்ளும்போதும் சேவைகளை வழங்கும்போதும் சுற்றாடல் நேயமுள்ள கைத்தொழிலாக்கலில் ஈடுபடுகின்றபோதும் அத்தியாவசியமானதாகின்றது. ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் வைபவத்தில் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற தொழில்முயற்சியாளர்களைப் போன்றே அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், பாடசாலைகள், சுற்றாடலுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றவர்களைப் போன்றே வெகுசன ஊடகங்களும் பாராட்டுதலுக்கு இலக்காக்கப்பட்டுள்ளன. இதன் மூலமாக சமூகத்தில் பல்வேறு துறைகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற குழுமங்கள் சுற்றாடல் நேயமுள்ளவகையில் செயலாற்றுவதில் சுயமாகவே தூண்டப்படுவதோடு அவர்களைப் பின்பற்றவும் ஏனைய குழுமங்கள் முற்படும். இத்தகைய விருது வழங்கல் வைபவமொன்றுக்காக சுற்றாடல் பேணல் பணிக்காக பங்களிக்கின்ற குழுமங்களால் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். இத்தகைய பாராட்டுதலில் உள்ள முக்கியத்துவம் அதுவாகும். அதனால் இந்த விருதுவழங்கல் வைபத்தின் விருதுபெறுனர்களைப் போன்றே பங்கேற்ற அனைவருக்கும் எனது இதயபூர்வமான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரபாத் சந்திரகீர்த்தி
செயலாளர்
சுற்றாடல் அமைச்சு

மத்திய சுற்றாடல் அதிகாரசபை தலைவரின் செய்தி

கலாசாரம் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான திரையாகும் என க்ளக்ஹோன் (Kluckhohn) மற்றும் கெலீ (Kelly) எனப்படுகின்ற மானிடவியலாளர்கள் எடுத்துரைத்துள்ளதோடு சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் இடையிலான இடைச்செயற்பாடு மூலமாக கலாசாரம் கட்டிவளரக்கப்படுகின்றதெனவும் அவர்கள் கூறுகிறார்கள்.

கலாசாரம் பற்றிய பல்வேறு வரைவிலக்கணங்களை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். இவ்விதமாக நோக்குகையில் கலாசாரத்திற்கும் அபிவிருத்திக்கும் இடையிலும் பலம்பொருந்திய தொடர்பு நிலவுகின்றது. அபிவிருத்தி இலக்குகளை வென்றெடுக்க முனைகையில் பெரும்பாலும் இயற்கைமீது எதிர்மறையான தாக்கங்கள் ஏற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதன் உக்கிரமமானதும் பயங்கரமானதுமான தருணத்தை நிகழ்காலத்தில் முழுஉலகுமே எதிர்நோக்கி உள்ளது. அதன் பெறுபேறாக மூவகை சுற்றாடல் சிக்கல்கள் என இனங்காணப்பட்டுள்ள காலநிலை மாற்றம், சுற்றாடல் மாசுபாடு மற்றும் உயிர்ப்பல்வகைமை தரங்குன்றுதல் ஆகிய பயங்கரமான சுற்றாடல் நிலைமைகளை எதிர்நோக்கவேண்டியநிலை முழு உலகிற்குமே ஏற்பட்டுள்ளது. உலகமே ஒன்றுசேர்ந்து பலவிதமான உடன்பாடுகள், சட்டதிட்டங்கள், உடன்படிக்கைகள், இணக்கப்பாடுகள் என்பவற்றைப் பிரயோகித்து அதற்கான தீர்வுகளைக் காண நடவடிக்கை எடுத்துவருவதோடு நாங்களும் ஒரு நாடு என்றவகையில் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டியது அவசியமாகும்.

அதனால் எமது மூதாதையர்கள் சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக உயிரைத் தியாகம்செய்து அக்காலத்தில் செயலாற்றிய விதத்தில் இந்த யுகத்திற்கு ஒத்துவரக்கூடியவகையில் நாங்கள் புரிகின்ற ஒவ்வொரு கருமத்தின் போதும் சுற்றாடலைப் பாதுகாத்தல் எனும் விடயத்தை அடிப்படையாகக்கொண்டு செயலாற்றி வருகின்ற, சுற்றாடலைப் பாதுகாக்கின்ற கலாசாரத்தை ஆரம்பிப்பதற்கான காலம் இப்போது உதயமாகி இருக்கின்றது. அதற்காக வயது, மதம், இனம், சாதி என்றவகையிலான பேதமின்றி கூட்டாக செயலாற்றி நாங்கள் இயற்கையிலிருந்து எடுக்கின்ற மூச்சுக்காக எமது பொறுப்பினை ஈடேற்றி சுற்றாடல் பேணல் பணிக்கு பங்களிக்குமாறு உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

சுற்றாடல் முன்னோடி பணிக்காக இலங்கையில் இயங்கிவருகின்ற பிரதானமான நிறுவனமென்ற வகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அதற்காக வழங்கக்கூடிய வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பினையும் நல்கி செயலாற்றி வருவதோடு புதிய யுகத்திற்கு ஒத்துவரக்கூடியவகையில் சட்டத் திருத்தங்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தோள்கொடுக்கின்றவர்களான தொழில்முயற்சியாளர்கள் கைத்தொழிலதிபர்களை சுற்றாடல் நேயமுள்ள கைத்தொழில் கலாசாரமொன்றை நோக்கி கொண்டுவர அவசியமான ஒத்துழைப்பினை வழங்கவும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அவ்வாறான முயற்சியின் பெறுபேறாக இத்தடவையும் ஜனாதிபதி சுற்றாடல் விருதுகள் 2024 நடாத்தப்படுவதோடு சுற்றாடல் பேணல் பணிக்கு ஏதேனுமொரு மட்டத்தில் பங்களிப்பினைப் பெற்றுக்கொடுப்பதன் பெறுபேறாக இதன்பொருட்டு முன்வந்த மற்றும் வெற்றிப்பெற்ற கைத்தொழில்களையும் பல்வேறு துறைகளையும் பிரதிநிதித்துவம் செய்கின்றவர்களை உள்ளிட்ட அனைவருக்கும் எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வெனுர பர்னாந்து
தலைவர்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை

மத்திய சுற்றாடல் அதிகாரசபை பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

நிகழ்காலமளவில் சுற்றாடல் பேணலுக்காக மனிதர்களாகிய நாங்கள் பலவிதமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம். எனினும் சுற்றாடலுக்கு பாரிய சேதங்கள் ஏற்படுவதும் மானிட செயற்பாடுகள் காரணமாகவே என்பதும் நாமனைவரும் அறிந்த உண்மையாகும். இந்த ஒன்றுக்கொன்று முரணானதன்மையை ஓரளவுக்கேனும் தணியச்செய்வித்து சுற்றாடலுக்கு மனிதனால் புரியப்படுகின்ற சேதங்களை குறைப்பதற்கான சட்டதிட்டங்களை அறிமுகஞ் செய்யவும் மனிதன் செயலாற்றி வருவதும் சுற்றாடலின் பெறுமதியை அவர்கள் உணர்ந்துள்ளமையாலாகும்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையும் சுற்றாடல் ஒழுங்குறுத்தல் பணியில் இலங்கையில் இருக்கின்ற முதன்மை நிறுவனமாகும். 1980 இன் 47 ஆம் இலக்கமுடைய தேசிய சூழல் சட்டத்திற்கு அமைவாக செயலாற்றுகின்ற நாங்கள், எமது பரப்பெல்லையுடன் தொடர்புடையதாக மனிதனை உள்ளிட்ட சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக எடுக்கக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். சுற்றாடல் பாதுகாப்பு உரிமச் செயற்பாங்கு, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாங்கு, பொலித்தீன் பிளாஸ்டிக்கினால் இடம்பெறுகின்ற சுற்றாடல் மாசுபாட்டினைக் கட்டுப்படுத்துதல், இயற்கை வளங்களின் முகாமைத்துவத்திற்காக அதனோடு தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற பல விடயங்களை கவனத்திற்கொண்டு மத்திய சுற்றாடல் அதிகாரசபை சுற்றாடல் பேணல் பணிக்காக ஆக்கமுறையான பல பணிகளை ஏற்கெனவே மேற்கொண்டு வருகின்றது.

இந்த எந்தவொரு கட்டத்திலும் நாட்டின் அபிவிருத்திக்கு பங்கமேற்படுத்துகின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்கவும் அபிவிருத்திப் பணிகளை சுற்றாடல் நேயமுள்ளவகையில் மேற்கொள்ள வழிகாட்டவும் ஒரு நாடு என்றவகையில் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்வதற்காக அவசியமான ஒத்துழைப்பினை வழங்கியுமே நாங்கள் செயலாற்றி வருகிறோம். அதன்படி, ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அளப்பரிய சேவையை ஈடேற்றுகின்ற தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக மேற்கொண்ட மற்றுமொரு படிமுறையாக சனாதிபதி சுற்றாடல் விருதுகள் நிகழ்ச்சித்திட்டத்தை எடுத்துரைக்கமுடியும். இந்த விருதுவழங்கல் வைபவத்தில் வெற்றிபெற்றவர்கள் மாத்திரமன்றி விண்ணப்பப் பத்திரங்களை சமர்ப்பித்தவர்களுக்கும் நான் நல்வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களும் ஏதெனுமோர் அளவில் சுற்றாடலைப் பாதுகாக்கின்ற பணியில் ஈடுபட்டுள்ளமையே அதற்கான காரணமாகும்.

சுற்றாடலைப் பாதுகாக்கின்ற பணிக்கு நாமனைவரும் கூட்டாக பங்களிக்கவேண்டிய காலம் பிறந்துள்ளது. ஏதேனும் சட்டத்திற்குப் பயந்தோ அல்லது ஏதேனும் நிறுவனத்திடம் சுற்றாடலைப் பாதுகாப்பதை ஒப்படைத்து இந்த பணியை முறைப்படி ஈடேற்றிவிட இயலாது. அதனால் எம்மனைவரதும் கடமையாகவும் பொறுப்பாகவும் கருதி எல்லா வேளைகளிலும் சுற்றாடல் பேணல் பணிக்காக பங்களிப்புச் செய்வதற்காக ஒன்றுசேர்வோமென உங்கள் அனைவரிடமும் நான் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பி.பீ. ஹேமந்த ஜயசிங்க
பணிப்பாளர் நாயகம்
மத்திய சுற்றாடல் அதிகார சபை மத்திய சுற்றாடல் அதிகாரசபை

எம்முடன் நேரடி ஒளிபரப்பில் இணைந்திருங்கள்

ஏற்பாடு: **மத்திய சுற்றாடல் அதிகார சபை**
சுற்றாடல் அமைச்சு

இஸ்லாம் போதிக்கும் சகவாழ்வு

இஸ்லாம், ஒரு முஸ்லிம் தனது சக மனிதனோடும், தனது அண்டை வீட்டாரோடும், தனது நாட்டு மக்களோடும், உலக மாந்தர்களோடும் ஏன் இப்பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த படைப்புகளோடும் நடந்துகொள்வதற்கான சில அடிப்படைகளை நிறுவி இருக்கின்றது. அவைகளுள் மிகப் பிரதானமாக நான்கு அடிப்படைகளை அல்குர்ஆன், சுன்னாவின் நிழலில் நோக்கலாம். அவைகளாவன (1) அல் பித்ரா (மனித இயல்பு) (2) கருணை (3) நீதி (4) சுதந்திரம்.

இலங்கை போன்ற பன்மைத்துவ சமூக அமைப்பொன்றில் எம் உறவுகளையும் தொடர்புகளையும் வலுப்படுத்திக் கொள்வதற்கும், அமைதியும் சுபீட்சமும் நிறைந்த ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதற்குமான அடிப்படை மூலக்கூறுகளாகவே இவைகள் கருதப்படுகின்றன.

இவ்வடிப்படைகளை பேணுவதன் ஊடாகவே சுமார் ஆயிரம் வருடங்களைத் தாண்டிய வரலாற்றைக் கொண்ட இலங்கை முஸ்லிம்களால் பிற சமூகங்களுடனான ஒற்றுமையையும் பிணைப்பையும் வலுப்படுத்த முடியுமாக இருந்தது. இதுமாத்திரமல்லாமல் இஸ்லாத்தின் விழுமியங்களையும் அதன் பெறுமானங்களையும் பிற சமூகத்தவர்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கான உந்து சக்தியாகவும் அவை அமையப் பெற்றிருந்தது.

துரதிஷ்டவசமாக இன்று சில முஸ்லிம்களின் மனோ நிலையிலும் நடத்தையிலும் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்கள் ஒட்டுமொத்த இலங்கை வாழ் முஸ்லிம்களின் எதிர்காலத்தை கேள்விக்குட்படுத்தி இருக்கின்றது. (அல்பித்ரா) என்றழைக்கப்படுகின்ற மனித இயல்பு, கருணை, சமூக நீதி, சுதந்திரம் போன்ற இஸ்லாத்தின் உண்மையான பெறுமானங்களை இழந்த ஒரு வாழ்வு முறை, நிச்சயமாக மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்டதாகவே இருக்கும்.

இஸ்லாம் கூறும் இவ்வுயரிய பெறுமானங்கள் ஊடாக பிற சமூகங்களோடு ஏற்படுகின்ற தொடர்புகளைப் பேணுகின்ற ஒரு சமூக உருவாக்கத்திற்காக ஒன்றுபடுவது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

நபி (ஸல்) அவர்கள் சிலைகளை வணங்குபவர்கள், இறை நிராகரிப்பாளர்கள், வேதம் கொடுக்கப்பட்ட யூதர்கள், கிறிஸ்தவர்கள், யுத்தம் செய்பவர்கள், யுத்த நிறுத்த உடன்படிக்கையில் உள்ளவர்கள், இஸ்லாமிய அரசோடு ஒப்பந்தம் செய்து கொண்டு அவற்றின் பாதுகாப்பின் கீழ் வாழ்ந்தவர்கள் என பல்வேறு வகையானவர்களோடு உறவைப் பேணியுள்ளார்கள்.

இவ்வாறு பல்வேறுபட்ட சமய, கலாசார, நாகரிக, பண்பாட்டுப் பின்புலங்களைக் கொண்ட வித்தியாசமான மனிதக்குழுமங்களோடு வெற்றிகரமான உறவையும், சமூக நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவதற்கு இஸ்லாம் கூறும் மனித விழுமியங்களும், நலன்களும் பேணப்பட்டமையே பிரதான காரணியாக அமைந்திருந்தது.

இஸ்லாமியர்கள் அல்லாத பிறசமயத்தவர்களோடு உறவாடுவதற்கு இஸ்லாம் அமைத்துள்ள மிகப்பிரதானமான அடிப்படையாக பின்வரும் அல் குர்ஆன் வசனம் விளங்குகின்றது.

'(விசுவாசிகளே)! மார்க்க விஷயத்தில் உங்களுடன் எதிர்த்துப் போரிடாமலும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாமலும் இருந்தார்களே, அத்தகையோருக்கு நீங்கள் நன்மை செய்வதையும், அவர்களின் பால் நீங்கள் நீதமாக நடந்து கொள்வதையும் அல்லாஹ் உங்களுக்கு தடுக்கவில்லை. நிச்சயமாக அல்லாஹ் நீதி செய்வோரை நேசிக்கின்றான்.'

(அல் மும்தஹினா: 08)

இத்திருவசனத்தின் ஒளியில்தான் நபி (ஸல்) அவர்களால் மனித உறவுகள் கட்டியெழுப்பப்பட்டது. இதனடிப்படையில் தான் மனித உறவுகள் அமைய வேண்டும் என்பதனை இஸ்லாம் வலியுறுத்துகிறது.

மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு பிரதான காரணிகளில் ஒன்று மார்க்க விடயத்தில் உங்களோடு போர் புரிதல் மற்றையது உங்களது வீடுகளிலிருந்து உங்களை விரட்டி விடுதல் போன்ற விடயங்களுக்காக மட்டுமே உங்களது எதிர்ப்பை வெளிப்படுத்த முடியும் என்பது இஸ்லாத்தின் வழிகாட்டலாகும்.

ஒரு முஸ்லிம் தனது இஸ்லாமிய கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதில் எவ்விதமான கெடுதியை ஏற்படுத்தாமலும், அவனது வீட்டை விட்டு வெளியேற்றி, அவனது உயிர் உடமைகளுக்கு எவ்விதமான கெடுதியை ஏற்படுத்தாமலும் பிற சமயத்தவர்கள் செயல்படும் காலமெல்லாம் அவர்களுக்கு உபகாரம் செய்யும் படியும், நீதமாக நடந்து கொள்ளும்படியும் இஸ்லாம் பணிக்கிறது.

இஸ்லாத்தின் இவ்வுயரிய கோட்பாட்டை முழுமையாக பிரதிபலிக்கும் விம்பமாக நபி (ஸல்) அவர்கள் செயல்பட்டார்கள்.

அன்றிருந்த இணைவைப்பு சமூகத்தில் வாழ்ந்த மனிதர்களோடு அன்றாட வாழ்வைக் கழிப்பவர்களாகவும், உறவு பாராட்டுபவராகவும், அவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிபவராகவும் தம்மைக் காட்டிக்கொள்ள ஒருபோதும் பின்வாங்கவில்லை. அதனால் தான் அன்னார் சுமந்து வந்த தூது வரலாறு காணாத மாற்றங்களை ஏற்படுத்தி மாபெரும் வெற்றியீட்டியது.

நபி (ஸல்) அவர்களது சமூகத்தினர் அன்னாரை நிராகரித்து, மிகக்கடுமையாக எதிர்த்து சொல்லொணாத் துயரங்களுக்கு ஆளாக்கியும் கூட, நபி (ஸல்) அவர்களுடன் இருந்த உறவுகளை துண்டிக்கவில்லை. தமது சமூகத்தினர் நம்பிக்கையிலும், கோட்பாட்டிலும், மத அனுஷ்டானங்களிலும் தம்மிடமிருந்து முற்றாக வேறுபட்டிருந்தபோதும், அவர்களுடன் மென்மையாகவும், சகிப்புத் தன்மையுடனும், அனுதாபப் பார்வையுடனுமே நடந்துகொண்டார்கள். தமக்கு துரோகம் இழைத்தவர்களுக்கும் நன்மையே செய்தார்கள். தமக்கு அநீதி இழைத்தவர்களுடன் நீதியுடனேயே நடந்து கொண்டார்கள். தமக்கு சூழ்ச்சி செய்தவர்களுடனும் சுமூகமான நல்லுறவையே பேணி வந்தார்கள்.

ஒவ்வொரு இனத்திற்கும் தனித்துவமான கலாசார அம்சங்களும், பழக்கவழக்கங்களும் உள்ளன. அத்தனித்துவங்களே அவ்வினத்தை அடையாளப்படுத்துகின்றன. ஒவ்வொரு இனமும் தத்தமது இருப்பை ஸ்திரப்படுத்திக்கொள்ளவும், தம்மை அடையாளப்படுத்தும் தனித்துவங்களை காத்துக்கொள்ளவும் முயற்சிக்கின்றன. அவற்றுக்கெதிரான சவால்கள் தோன்றுகையில் அதற்கெதிராக குரல் கொடுப்பதோடு அது போராகவும் உருப்பெறுகின்றது. இவ்வாறான சமூக அமைப்பொன்றில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது தொடர்பாக அல்குர்ஆனிலும் நபி (ஸல்) அவர்களது போதனைகளிலும் முழு மனித சமூகத்திற்கும் வழிகாட்டுதல்கள் உள்ளன.

அல்லாஹ் ஒரே மூலக்கூற்றிலிருந்து மனித இனத்தைப் படைத்து பரவச் செய்தாலும், அவர்களுக்கு மத்தியில் நிற, மொழி, இன வேறுபாடுகளை அவனது அத்தாட்சியாக ஏற்படுத்தியதாக குறிப்பிடுகின்றான். மேலும் இவ்வேறுபாடுகளின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் பரஸ்பர அறிமுகத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகவே அவர்களை கோத்திரங்களாகவும், கிளைகளாகவும் படைத்துள்ளதாக அல்குர்ஆன் பறைசாற்றுகின்றது.

அல்லாஹ்வால் படைக்கப்பட்ட அனைத்துப் படைப்புக்களும் 'பன்மைத்துவம்' என்ற ஓர் அழகிய அடையாளத்தால் அலங்கரிக்கப்பட்டே காணப்படுகிறது. பல்வேறு வர்ணங்கள், தோற்றங்கள், தன்மைகள், பண்புகள், இயல்புகள், மொழி, பால், இனத்துவ வேறுபாடுகள், கலாசார, நாகரிக பண்பாட்டு பழக்கவழக்கங்கள், சிந்தனாசக்தி, ஆற்றல், ஆளுமை, காலநிலை, புவியியல் பிரிகை என எங்கும், எதிலும் பல்வகைமை எனும் கலைத்துவம் வியாபித்துக் காணப்படுகிறது. இதற்கு மனித இனமும் விதிவிலக்கன்று. இவை படைப்பினங்களுக்கு அருளாகவும் இப்பிரபஞ்சத்தின் முறையான இயங்குநிலைக்கான அடிப்படையாகவும் கணிக்கப்படுகிறது.

இவ்வாறே மனிதர்கள் இனங்களாக, குழுமங்களாக, கோத்திரங்களாக வாழ்வது தவிர்க்கமுடியாத இயல்பாகும். எனினும் அது மனிதனாக கூடி வாழ்வதற்கு ஒரு போதும் தடையானதன்று. அது மனித ஐக்கியத்திற்கு ஏற்புடைய பலமான காரணியாகும். அதாவது, ஒரு ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் படைக்கப்பட்ட மனிதர்கள், தங்களிடையே காணப்படுகின்ற இரத்த உறவைப் பேணி இணைந்து வாழ்வதில் தமக்கிடையே காணப்படுகின்ற குல மரபுப் பேதங்கள் துணை செய்கின்றன.

முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் வாழும் போது மோதல்களைத் தவிர்த்து இணக்கமாக சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ளுமாறு இஸ்லாம் பணிக்கின்றது. அதற்கப்பால் நன்மையான விடயங்களில் பரஸ்பரத்துடன் ஒத்துழைக்குமாறு அல்குர்ஆன் மனிதகுலத்தை அழைக்கின்றது, அத்துடன் உதவுதல், ஒத்துழைத்தல், விட்டுக்கொடுத்தல் என்பன நல்லிணக்கத்திற்கு இஸ்லாம் தந்த விழுமியங்களாகும். இவ்வடிப்படைகள் தவிர மனித சமத்துவம், கருத்துச் சுதந்திரம், தங்கி வாழுதல், சார்ந்திருத்தல், கலந்து வாழுதல், சமூக நீதி, கருத்துச் சுதந்திரம் என இன்னும் பல உயர்ந்த விழுமியங்களையும் நல்லிணக்கத்தின் வேர்களாக குர்ஆன் முன்வைக்கின்றது.

இஸ்லாம் மானிடர்க்கு அன்பையும், நேசத்தையும், சகோதரத்துவ வாஞ்சையையும் போதிக்கின்றது. ஒவ்வொரு முஸ்லிமும் அடுத்த மனிதனுக்கும், சமூகத்திற்கும், நாட்டிற்கும் அருளாகத் திகழ வேண்டும் என்றும் அது எதிர்பார்க்கின்றது. இன, மொழி, நிற, கலாசார வேறுபாடுகளைத் தாண்டி எவருக்கும் ஆபத்தோ நெருக்கடியோ இன்னலோ ஏற்படக் கூடாதென்பதும், ஒவ்வொருவருக்கும் அடுத்தவர் மூலம் பாதுகாப்பும், அமைதியும், நிம்மதியும் கிட்ட வேண்டும் என்பதும் இஸ்லாத்தின் கட்டளையாகும்.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம். சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons, (Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

கல்வியின் மகத்துவம்

உணவு, உடை, இடம், மருந்து ஆகியவை ஒரு மனிதனுக்கு எவ்வாறு இன்றியமையாதத் தேவைகளாக விளங்குகின்றனவோ அவ்வாறே கல்வி கற்பதும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆன்மீக வாழ்வும் உலக வாழ்வும் செம்மையாய் அமைய கல்வி கற்க நாம் மேற்கொள்ளும் சற்றும் குறைவில்லாத ஈடுபாட்டைப் பொறுத்து அமையும்.

கல்வியைத் தேடுவது மனிதனின் முதல் கடமையென இஸ்லாம் வலியுறுத்துகிறது. '(யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக. (அல் குர்ஆன் 96:1)

'ஓதுவீராக', 'படிப்பீராக..' எனும் கட்டளை கொண்ட வசனம் தான் அல் குர்ஆனில் முதன் முதலில் அருளப்பட்டது.

அல்லாஹ்தஆலா, நபி (ஸல்) அவர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டான். 'இறைவா..! கல்வி ஞானத்தை எனக்கு அதிகப்படுத்துவாயாக!' என்றும் 'நீர் பிரார்த்தனை செய்வீராக!'

(அல் குர்ஆன் 20:114)

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'கல்வியைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும் (ஆதாரம்: இப்னு மாஜா)

ஆகவே கல்வி கற்பது இஸ்லாத்தின் பார்வையில் மிக உயர்ந்ததோர் இறை வணக்கமாக விளங்குகிறது.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள், கற்றறிந்தவர், வணக்கசாலியைக் காட்டிலும் பெற்றிருக்கும் சிறப்பு, ஏனையக் கோளங்களைக் காட்டிலும் முழு நிலா பெற்றுள்ள சிறப்புப் போன்றதாகும். மேலும் கற்றறிந்தவர்கள் நபிமார்களின் வாரிசுகளாவர். திண்ணமாக நபிமார்கள், தங்க, வெள்ளி நாணயங்களை அணந்தரச் சொத்தாக விட்டுச் செல்லவில்லை. அவர்கள் விட்டுச் சென்றதே கல்வி ஞானத்தைதான். எனவே எவர் அக்கல்வியைக் கற்றெடுத்தாரோ அவர் நிறைவான பாக்கியத்தைப் பெற்றவர் ஆவார்' என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி)

அத்தோடு, 'எவர் கல்வியைத் தேடிப்புறப்பட்டாரோ அவர் திரும்பி வரும் வரையில் அல்லாஹ்வின் பாதையில் உள்ளவர் ஆவார்' என்றும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி)

அபூஹுறைரா (ரழி) அவர்கள் அறிவித்துள்ள நபிமொழியொன்று இவ்வாறு பதிவாகியுள்ளது. 'எவர் நமது இந்த மஸ்ஜிதுக்கு வந்து கல்வி கற்கிறாரோ அல்லது கற்றுக்கொடுக்கிறாரோ அவர் அல்லாஹ்வின் பாதையில் போர் செய்பவர் போன்றாவார். மேலும் கல்வி ஈடுபாடில்லாத வேறு நோக்கத்திற்காக வருபவருக்கு உவமையாதெனில், ஒரு மனிதரைப் போன்றது. அவருக்கு ஒரு பொருள் பிடித்தமாக இருக்கிறது. ஆனால் அதை அடையும் பாக்கியம் அவருக்குக் கிடைக்கப் பெறவில்லை' என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: ஹாகிம்)

கல்வி கற்பதற்காக மனிதன் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் சுவனத்தை நோக்கிச் செல்லும் பாதையை அவன் முன்னால் திறந்து வைக்கக்கூடியதாக உள்ளது. அதனை நபி (ஸல்) அவர்கள், 'ஒருவர் கல்வியைத் தேடி ஒரு பாதையில் நடந்து சென்றால், சுவனத்தை நோக்கிச் செல்லும் பாதையை அல்லாஹ் அவருக்கு இலகுவாகிக் கொடுக்கிறான்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கல்வி கற்பிக்கும் அவைகளில் ஆர்வத்துடன் வந்து அமர்ந்து பயன்பெறுமாறு ஆர்வமூட்டி உள்ளார்கள்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் மக்களுடன் பள்ளிவாசலில் அமர்ந்திருந்த போது மூன்று பேர் வந்து கொண்டிருந்தனர். அவர்களில் இருவர் நபி(ஸல்) அவர்களை முன்னோக்கி வந்தனர். மற்றொருவர் சென்றார். அவ்விருவரும் நபி (ஸல்) அவர்களின் சபையில் வந்து நின்றார்கள். அவ்விருவரில் ஒருவர் வட்டமான அச்சபையில் ஓர் இடைவெளியைக் கண்ட போது அதில் அமர்ந்தார். மற்றவரோ சபையின் பின்னால் அமர்ந்து வெட்கப்பட்டு (கடைசியில் உட்கார்ந்து) விட்டார். எனவே அல்லாஹ்வும் வெட்கப்பட்டான். மூன்றாமவரோ அலட்சியப்படுத்திச் சென்றார். எனவே அல்லாஹ்வும் அவரை அலட்சியப்படுத்தினான்.' என அபூவாக்கித் அல் லைஸீ (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (ஆதாரம்: ஸஹீஹ் புஹாரி)

கல்வி போதிக்கும் அவையில், வருவோருக்கு இடமளித்து உதவ வேண்டும். இது அந்தஸ்துகள் உயரவும் முன்னேற்றம் காணவும் வழி அமைத்துக் கொடுக்குமென அல் குர்ஆன் குறிப்பிடுகிறது.

'இறை நம்பிக்கை கொண்டவர்களே...! அவைகளில் நகர்ந்து இடம் ஏற்படுத்திக் கொடுங்கள் என்று உங்களிடம் கூறப்பட்டால், இடம் ஏற்படுத்திக் கொடுங்கள். அல்லாஹ் உங்களுக்கு இடம் ஏற்படுத்தித் தருவான். மேலும், 'எழுந்து செல்லுங்கள்' என உங்களிடம் சொல்லப்பட்டால் எழுந்து செல்லுங்கள். உங்களில் எவர்கள் இறை நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்களோ, மேலும், எவர்கள் ஞானம் வழங்கப்பட்டிருக்கின்றார்களோ அவர்களுக்கு அல்லாஹ் உயர்ந்த பதவிகளை வழங்குவான். மேலும், நீங்கள் செய்பவை அனைத்தையும் அல்லாஹ் அறியக் கூடியவனாக இருக்கின்றான். (அல் குர்ஆன் 58:11)

இவ்வசனத்தின் கருத்தில் கல்விக்கூடங்களில் மாணவர்களுக்கு இடம் கிடைக்க ஏற்பாடு செய்வது, பாடநூல்கள் வழங்குவது போன்ற எல்லா உதவிகளும் அடங்கும்.

அறிஞர் லுக்மான் ஹக்கீம் தம்பிள்ளைகளுக்கு ஒரு தடவை அறிவுரை வழங்கும்போது, 'என் அருமைப் பிள்ளைகளே..! கற்றறிந்தவர்களுடன் அமர்ந்திருங்கள். அவர்கள் முன்னிலையில் மண்டிக்காலிட்டுப் பணிவுடனே இருங்கள். திண்ணமாக அல்லாஹ், வான் மழையின் மூலம் தரிசு நிலங்களை உயிர்ப்பிப்பது போன்று கல்வி ஞானத்தின் மூலம் இதனை உயிர்ப்பிக்கிறான் என்று குறிப்பிட்டார்கள். (ஆதாரம்: ஸுனனுல் குப்ரா)

இறைவனிடம் இருந்து பெற்ற திருவேதத்தை இவ்வுலக மக்களுக்குக் கற்றுக் கொடுத்து வழிகாட்டவே நபியவர்கள் வருகை தந்தார்கள்.

அல்லாஹ், நம்பிக்கையாளர்களின் மீது மெய்யாகவே அருள் புரிந்திருக்கின்றான். அவர்களுக்காக ஒரு தூதரை (அதுவும்) அவர்களில் இருந்தே அனுப்பினான். அவர் அவர்களுக்கு அல்லாஹ்வுடைய வசனங்களை ஓதிக் காண்பித்து, அவர்களை பரிசுத்தமாக்கியும் வைக்கின்றார். அன்றி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார். நிச்சயமாக அவர்கள் இதற்கு முன் பகிரங்கமான வழிகேட்டில்தான் இருந்தனர்.

நபி (ஸல்) அவர்கள், கற்பித்தலின் மூலமே இத்தகைய பணிகளை ஆற்றினார்கள். ஆம்...! அறியாமை இருள் அகற்றி அவன் எங்கும் அறிவொளி பரப்பினார்கள். இதயங்கள் தெளிவடைந்தன. செயல்பாடுகள் தூய்மையடைந்தன. 'நான் ஒரு போதகனாகவே அனுப்பப்பட்டுள்ளேன்.' என்று கூறியுள்ளார்கள்.

அதேநேரம், கல்வி கற்றுக்கொடுக்கும் அவைகளில் கலந்து கொள்ளுமாறு நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்கு அதிகம் ஆர்வம் ஊட்டினார்கள், அந்த அவைகளைச் சுவனத் தோட்டங்களின் அந்தஸ்துக்கு நிகராகச் சுட்டிக்காட்டி அன்னார் சிறப்பித்துள்ளார்கள்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'நீங்கள் சுவனத் தோட்டங்களுக்கு அருகில் கடந்து சென்றால் அங்கே மேய்ந்து கொள்ளுங்கள் என்று கூற தோழர்கள், அல்லாஹ்வின் தூதரே! சுவனத் தோட்டங்கள் என்றால் யாவை? என வினவினர். அப்போது நபியவர்கள் அவைதாம் கல்வி கற்பிக்கும் அவைகள்' என்று கூறினார்கள். (ஆதாரம்: அத்தர்ஃகீப் வத் தர்ஹீப்)

ஆகவே இறையருளைப் பெற்றுத்தரும் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்வோம்.

மௌலவி
எம்.யூ.எம். வாலிஹ்...
(அல் அஸ்ஹரி), (பாரி), வெலிகம

இறைதுதி சொற்களின் சிறப்பு

இஸ்லாத்தில் மிக அதிக நன்மைகளையும் புண்ணியங்களையும் பெற்றுத் தரும் செயல்கள் குறித்து நபி (ஸல்) அவர்கள் பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள். அந்த வகையில் ஒரு சிறிய இறைத்துதிச் சொல், வானங்கள், பூமிக்கு இடையே உள்ள இடத்தை நிரப்பிவிடும் அளவுக்குப் புண்ணியம் சேர்க்கும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த சொல்லின் தூய்மை இறைநம்பிக்கையில் பாதியாகும்.

'எல்லாப் புகழும் இறைவனுக்கே' (அல்ஹம்துலில்லாஹ்) என்று இறைவனைத் துதிப்பது, நன்மை தீமைகளை நிறுக்கக்கூடிய தராசை நிரப்பக்கூடியதாகும்.

'சுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி (இறைவன் தூயவன், அனைத்துப் புகழும் அவனுக்கே உரியது) என்று துதிப்பது, வானங்கள் பூமிக்கு இடையேயுள்ள இடத்தை நிரப்பிவிடக்கூடிய அளவுக்கு நன்மைகளைக் கொண்டதாகும் என்றும் நபிமொழிகளில் பதிவாகியுள்ளன.

இறைத்துதிச் சொற்கள், இறைவனைப் போற்றித் துதிக்கும் சொற்கள் ஆகியவற்றுக்குக் கிடைக்கும் நன்மைகளை நம்மால் நினைத்துப் பார்க்கவே முடியாது. சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், லா இலாஹா இல்லல்லாஹ் போன்ற இறைத்துதிச் சொற்களை நல்ல மரத்திற்கு ஒப்பிட்டுக் குர்ஆன் எடுத்தியம்பியுள்ளது.

பூமியில் ஆழமாக வேரூன்றி, வானளாவிய அளவில் கிளைகள் பரப்பி நிற்கும் கனி மரங்கள் மக்களுக்கு எந்தெந்த வகையில் எல்லாம் பயன்தருமோ அதுபோன்றதுதான் இறைத்துதிச் சொற்களும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இந்த இறையருட் சொற்கள் கவலை, துன்பம், இடையூறு ஆகியவற்றை நீக்கி இதயத்திற்கு நிம்மதியையும் அமைதியையும் தரக்கூடியனவாக விளங்குகின்றன. அதேநேரம் அல்லாஹ்விடம் அதிக நன்மைகளைப் பெற்றுத்தரக்கூடியனவாகவும் இச்சொற்கள் விளங்குகின்றன.

ஆகவே நபி (ஸல்) அவர்கள் போதித்துள்ள இறைத்துதிச் சொற்களை அதிகமதிகம் பயன்படுத்தி இறைவனின் அன்பையும் கருணையையும் பெற்றுக்கொள்வோம்.

பிந்த் இஸ்மாயீல்...

புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான

திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

சரியான விடையின் கீழ் கோடிடுக.

- முதலாம் பெட்டியில் உள்ள கூட்டத்துடன் சேர்ப்பதற்கு பொருத்தமான படத்தைத் தெரிவு செய்க.

01.  i. ii.  iii.

02. i. ii. iii.

03. பின்வருவனவற்றுள் தனிப்பட்ட கூற்று ஒன்று
i. வானவில்லில் ஏழு நிறங்கள் உண்டு.
ii. மல்லிகைப் பூ மிகவும் அழகானது.
iii. இலங்கை ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ளது.

04. மாணவன் ஒருவன் பூப்பாத்தி ஒன்றை அமைப்பதற்கு முதலில் 20m கிழக்கு நோக்கியும் பின் தெற்கு நோக்கி 40m உம் பின் மேற்கு நோக்கி 30m உம் வரைந்து பின் ஆரம்பப் புள்ளிக்கு ஓர் நேர்கோடு வரைந்தான். பூப்பாத்திக்கு உரிய சரியான படம்,

i.  ii.  iii. 

05. 5 ✿ 25 ★ 28
4 ★ 7 ✿ 49
8 ✿ 64 ★ ....

இடைவெளிக்குப் பொருத்தமான எண்
i. 65 ii. 66 iii. 67

06. எனக்கு 5 வயதாக இருக்கும் போது அண்ணாவின் வயது 12 ஆகும். அண்ணாவிற்கு 15 வயதாக இருக்கும் போது அப்பாவின் வயது 38 ஆகும். எனின், எனக்கு 13 வயதாக இருக்கும் போது அப்பாவின் வயது யாது?
i. 43 ii. 40 iii. 39

07. ஒருவர் வீட்டுத் தோட்டம் ஒன்றை அமைப்பதற்கு 5 பாத்திகளைத் தயார் செய்து அவற்றுள் 3 பாத்திகளில் மரக்கறிப் பயிர்களையும் இரண்டு பாத்திகளில் பூச்செடிகளையும் நாட்டினார். அவரது பாத்திகளில் உள்ள பயிர்களைச் சரியாக காட்டும் விடை,
i. கரட், வெண்டி, முள்ளங்கி, வெட்சி, அந்திமந்தாரை
ii. கரட், கோவா, முள்ளங்கி, பயிற்றை, ரோஜா
iii. வெட்சி, அந்தூரியம், நித்யகல்யாணி, கத்தரி, தக்காளி

08. 6 மனிதர்கள் 8 நாட்களில் செய்யும் வேலை ஒன்றை 4 மனிதர்கள் 6 நாட்களில் செய்தார்கள். மீதி வேலையை 8 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்வார்கள்.
i. 3 ii. 4 iii. 5

09. நிகழ்வு ஒன்றிற்கு அலங்கரிப்பதற்கு 81 பலூன்கள் தேவைப்பட்டன. சிறிய பைக்கற்று ஒன்றில் 7 பலூன்களும் பெரிய பைக்கற்று ஒன்றில் 12 பலூன்களும் உண்டு. எனின், வாங்கப்பட வேண்டிய பெரிய, சிறிய பைக்கற்றுக்களின் எண்ணிக்கை முறையே
i. 4, 4 ii. 3, 7 iii. 5, 3

10. அதிகளவு வட்டங்களைப் பயன்படுத்தி வரையப்பட்ட முகம் எது?

i. ii.  iii. 

11. பெட்டி ஒன்றில் இருந்த 90 முட்டைகளில் 1/3 பங்கு முட்டைகள் பழுதடைந்துவிட்டன. நல்ல முட்டைகளில் ½ பங்கு முட்டைகள் விற்கப்பட்டன. மீதி முட்டைகளின் எண்ணிக்கை யாது?
i. 20 ii. 30 iii. 40

12. ரூபா 25.50 படி இரண்டு அன்னாசிப்பழமும், ரூபா 17.50 படி மூன்று அப்பிள் பழமும் வாங்கிய விஜயன் கடைக்காரரிடம் ரூபாய் 500.00 தாள் ஒன்று ரூபாய் 2.00 ரூபாய் 1.00 சதம் 50 நாணயக்குற்றிகள் ஒவ்வொன்றும் கொடுத்தான். எனின் கடைக்காரர் மீதியாக விஜயனிடம் கொடுத்த பணம் எவ்வளவு?
i. ரூபாய் 400.00 ii. ரூபாய் 300.00 iii. 200.00

13. கடையொன்றில் 32 முட்டைகள் இருந்தன. அவற்றில் 1/8 முட்டைகள் பழுதடைந்திருந்தன. நல்ல முட்டைகளை ரூபாய் 12.00 படி விற்றார் எனின் விற்கப்பட்ட முட்டைகளின் மொத்த பெறுமதி யாது?
i. ரூபாய் 340.00 ii. ரூபாய் 336.00 iii. ரூபாய் 384.00

14. ஒரு வேளைக்கு இரண்டு வில்லை வீதம் ஒரு நாளைக்கு மூன்று முறை உட்கொள்ளுமாறு 36 மருந்து வில்லைகள் நோயாளி ஒருவருக்கு வழங்கப்பட்டன. அதன்படி அம்மருந்து வில்லைகளை எத்தனை நாளைக்கு பாவிக்க முடியும்?
i. 4 நாட்கள் ii. 6 நாட்கள் iii. 5 நாட்கள்

15. இரண்டு எண்களின் பெருக்கம் 32 ஆகும். அவற்றுள் இரண்டு எண்ணுக்கும் இடையே உள்ள வித்தியாசம் 4 ஆகும். எனில் அவ்வெண்ணில் சிறிய எண் எது?
i. 8 ii. 4 iii. 2

16. 46cm நீளமான கம்பி ஒன்றைக் கொண்டு ஓர் ஒழுங்கான செவ்வக வடிவம் செய்யப்படுகிறது. இச் செவ்வகத்தின் ஒரு பக்க அகலம் 9cm ஆயின் இச் செவ்வகத்தின் ஒருபக்க நீளம் யாது?
i. 10cm ii. 12cm iii. 14cm

17. ஒரு மாணவன் ஓர் எண்ணுடன் 45ஐக் கூட்டுவதற்குப் பதிலாக அவ்வெண்ணிலிருந்து 45ஐ கழித்து விட்டான். அவ்வாறு கழித்த போது கிடைத்த விடை 60 ஆகும். எனவே மாணவன் உண்மையில் பெற வேண்டிய விடை யாது?
i. 150 ii. 130 iii. 145

18. 
இவ் உருவில் எத்தனை சிறிய சதுரமுகிக் குற்றிகள் உள்ளன?
i. 20
ii. 16
iii. 15

19. 
கீழே தரப்பட்ட வடிவத்தை ஒரு சதுரமாக மாற்றுவதற்கு அதனுடன் சேர்க்கப்பட வேண்டிய சிறிய அடைப்புகளின் குறைந்த பட்ச எண்ணிக்கை
i. 17
ii. 19
iii. 18

20. 12 ☾ 3 = 3 ▲ 3 என்னும் கணிதத் தொடர்புடைமையில் ☾, ▲ என்னும் குறியீடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இரு கணிதச் செய்கைகளும் யாவை?
i. + உம், X உம் ii. X உம், − உம் iii. − உம், X உம்

